REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 டிசம்பர் 4 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 287 | Monday 04, December, 2023 | 20 பக்கங்கள் | 50/-

## மேல்மாகாணத்தில்
## தபால்நிலையங்கள் 24 மணிநேரமும் திறந்திருக்கும்

போக்குவரத்து விதிமுறை மீறல் தொடர்பான அபராதம் செலுத்துவதற்காக மேல் மாகாணத்திலுள்ள தபால் நிலையங்கள் 24 மணிநேரமும் இயங்குமென, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. மேல் மாகாண தபால் நிலையங்களின் 24 மணிநேர சேவையில், போக்குவரத்து விதிமுறையை மீறியமைக்கான அபராதத்தை செலுத்த

06

## நுண் கடன் திட்டத்தினால் நாட்டில் மில்லியன் கணக்கானோர் பாதிப்பு

### நிதி நிறுவனங்களை கண்காணிக்க விரைவில் அதிகார சபை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நுண் கடன் திட்டத்தின் செயற்பாடுகளால் நாட்டில் மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உக்கிரமடைந்துள்ள இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக நுண்கடன் நிதி நிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் அதிகார சபையொன்றை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளதாகவும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதற்கான சட்டமூலம் ஒன்றை எதிர்வரும் மாதங்களில்

06

## பாராளுமன்றத்தில் தன்னிச்சையாக செயற்பட இடமளிக்க வேண்டாம்

### சபாநாயகர் உரிய தீர்மானம் எடுக்க வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்றத்தில் தன்னிச்சையாக செயற்பட எவருக்கும் இடமளிக்க வேண்டாமென்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் பிரதமர் தினேஷ் குணவர்தன கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தை நகைச்சுவை அரங்கமாகவும் நாடக மேடையாகவும் ஆக்கக்கூடாதெனத் தெரிவித்த பிரதமர், தினமும் காலையில்

06

### காலநிலை நீதிமன்றம் தொடர்பான
## ஜனாதிபதியின் யோசனைக்கு ஐ.நா. சுற்றுச்சூழல் வேலைத் திட்டம் ஆதரவு

### COP28 மாநாட்டில் உலகத் தலைவர்கள் பாராட்டு

காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு நீதியும் நியாயமானதுமான உணர்வுகளுடன் தீர்வு காண வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க COP28 மாநாட்டில் (02) "காலநிலை நீதிமன்றத்தை" முன்மொழிந்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் வேலைத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இங்கர் அண்டர்சன் (Inger Andersen) மற்றும் உகண்டா சுகாதார அமைச்சர் வைத்தியர். அசெங் ஜேன் ரூத் (Dr. Aceng Jane Ruth) ஆகியோரின் ஆதரவுடனேயே ஜனாதிபதி மேற்படி யோசனையை முன்மொழிந்தார்.

காலநிலை நீதிமன்றம் காலநிலை அனர்த்தங்களை

06

### காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழக திட்டம்
# COP 28 மாநாட்டில் ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

### இலங்கையில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்தாபிக்கப்படுவதுடன் இது சர்வதேச பல்கலைக்கழகமாக செயற்படும் எனவும் ஜனாதிபதி தெரிவிப்பு

காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக் கழகத்தின் (ICCU) திட்டத்தை நேற்று (03) டுபாயில் நடைபெற்ற COP 28 மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

உலக நாடுகள் பாரிஸ் உடன்படிக்கைக்கு இணங்கிய போதிலும், அந்த நாடுகள் ஒப்புக்கொண்ட இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிக்கும் வகையில் குறிப்பிடத்தக்க நிறுவன மாற்றங்கள் எதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லையென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இந்த அவசரத் தேவையை உணர்ந்து, காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கான தீர்மானமிக்க முயற்சிகளுக்



குப் பங்களிப்பதற்குத் தேவையான திறன் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை (ICCU) நிறுவுவதற்கு பரிந்துரைத்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை இலங்கையில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்தாபிக்கப்படவுள்ளதுடன், இப்பல்கலைக்கழகம் இலங்கைக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்றும், அது சர்வதேச பல்கலைக்கழகமாக செயற்படும் எனவும், அதற்காக உலகில் உள்ள அனைத்து

06

## காலநிலை மாற்றத்தை எதிர்த்து போராட இலங்கைக்கு ஆதரவு

### BMGF இணைத் தலைவர் பில் கேட்ஸ் ஜனாதிபதியிடம் உறுதி




மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் (BMGF) இணைத் தலைவர் பில் கேட்ஸ் (Bill Gates) தெரிவித்தார். டுபாயில் நடைபெறும் COP 28 மாநாட்டுக்கு இணையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும்

06

## கல்முனை சிறுவன் மர்ம மரணம்; மேற்பார்வையாளர் பெண் கைது

### உட்காயங்களாலேயே மரணம் சம்பவிப்பு

சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட சிறுவனின் மரணம் தொடர்பில், பாடசாலை மேற்பார்வையாளரான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த இச்சிறுவன் களவுச் சம்பவம் ஒன்றில் குற்றம்சாட்டப்பட்டு இஸ்லாமாபாத் சிறுவர் நன்னடத்தை

06



## வெளிநாட்டில் விவாகரத்து இலங்கையிலும் செல்லுபடி

### மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

இலங்கையில் திருமணம் செய்து கொண்ட தம்பதியினர் வெளிநாட்டு நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்றிருந்தால், இலங்கை சட்டத்தின் கீழ் அந்த விவாகரத்து செல்லுபடியாகுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதன்படி, வெளிநாட்டு நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்ற தம்பதிகள் மீண்டும் இலங்கையிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து பெற வேண்டும் என்ற நடைமுறையில் இருந்த சட்டத்தை மாற்றியமைத்து இவ்வாறு தீர்ப்பளித்தது.



இங்கிலாந்து நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்ற தனது விவாகரத்தை ஏற்குமாறு திருமணப் பதிவாளர் நாயகத்துக்கு உத்தரவிடக் கோரி, ஒருவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வாரம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய குழாம் இந்த வழக்கின் தீர்ப்பை அறிவித்துள்ளது.

இலங்கை மற்றும் இங்கிலாந்தின் இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட லியனகே சம்பிக்க

06

## ஹந்தான மலையில் சிக்கிய 180 மாணவர்களும் மீட்பு

### இராணுவம், பொலிஸார் இணைந்து மும்முரம்

ஹந்தான மலைத்தொடரில் சிக்கியிருந்த ராகம மருத்துவ பீட மாணவர் 180 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட மீட்பு நடவடிக்கையிலே, இவர்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மோசமான வானிலை மற்றும் கடும் பனிமூட்டம் காரணமாக குறித்த மாணவர்கள் நேற்று முன்தினம் (02) அங்கு சிக்குண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### குணசிங்கபுர வீடொன்றில் பதுக்கப்பட்ட
## பாலியல் உணர்வைத் தூண்டும் பெருந்தொகை மாத்திரைகள் மீட்பு

**தெஹிவளை கல்கிஸ்ச விசேட நிருபர்**

பாலியல் உணர்வைத் தூண்டக் கூடிய மாத்திரைகள், ஜெல் வகைகள் போன்ற சட்டவிரோதமான மருந்துவகைகளை பொலிஸார் நேற்று கொழும்பு குணசிங்கபுர பகுதி வீடொன்றில் கைப்பற்றினர். இவற்றை, நாட்டுக்குள் கொண்டுவந்த 61 வயது

06



## உளுந்து இறக்குமதி தடை நீக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உளுந்து, பாசிப்பயறு போன்ற தானியங்கள் மீதான மாபியாவை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்த வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ, நிதி மற்றும் விவசாய அமைச்சுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இறக்குமதி தடையை நீக்கி, அரசாங்கத்தினூடாக அவற்றை இறக்குமதி செய்து, குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஒருவார காலத்தினுள் உரிய தீர்மானம்

06

## மீதமுள்ள அரசியல் கைதிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும்

### நீதி அமைச்சரிடம் சித்தார்த்தன் எம்.பி வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ் அரசியல் கைதிகள் 70 பேர் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வந்த நிலையில் விஜேயதாச ராஜபக்ஷ நீதியமைச்சராக பொறுப்பேற்றதும், அந்த எண்ணிக்கை 14 ஆக குறைந்துள்ளதாகவும் இதற்காக நன்றி தெரிவிப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06



## இத்தாலி செல்ல முயன்ற 02 பெண்கள் கைது



போலி விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயன்ற இரண்டு இலங்கைப் பெண்கள், கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த

06

## பாழடைந்த கிணற்றுக்குள்ளிருந்து இராணுவ சீருடை அங்கிகள் மீட்பு

### KKS, மாங்கொல்லை பகுதியில் சம்பவம்



**யாழ். விசேட நிருபர்**

இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதியில் பெருமளவான இராணுவ அங்கிகள் (Flak jacket) கண்டெடுக்கப்பட்டுள்ளன. காணியொன்றை உரிமையாளர் துப்புரவு செய்து கிணற்றை இறைத்த போது, கிணற்றினுள்ளிருந்து பெருமளவான இராணுவ அங்கிகள்

06

## மனைவி, பிள்ளைகளை பணயம் வைத்து வர்த்தகர் வீட்டில் கொள்ளை!



### நுரைச்சோலையில் நள்ளிரவில் துணிகரம்; ரூபா 1,50,00,000 பெறுமதியான நகை, பணம் கொள்ளை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

நுரைச்சோலை, நாவக்காடு, கொலனி பிரதேசத்தில் மரக்கறி விற்பனையில் ஈடுபடும் பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில், ஆயுத முனையில் 01 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வர்த்தகரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் (02) அதிகாலை இரண்டு

06

## யாழ். நகரிலுள்ள 07 பேர் தனுஷ்கோடியில் தஞ்சம்

**திருச்சி எம். கே. ஷாகுல்**



தலைமன்னாரிலிருந்து படகு மூலம் அகதிகளாக வந்த ஏழு பேரை, கடலோரப் பாதுகாப்புக் குழு காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், யாழ்ப்பாணம் தொல்புரத்தைச் சேர்ந்த நாகராஜ் (43), இவரது மனைவி வந்தினி (38), அனோஜன் (13), கஜிவன்(9), தனுஷ்கா (4),

06

# நகர்வலம்



## பாகிஸ்தானில் உயர் கல்வியை தொடர்வதற்கு
# தகுதியான 321 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி வைப்பு
### கல்வியமைச்சர் உட்பட அமைச்சர்களும் பங்கேற்பு

**(தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்)**

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம், பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் தகுதியான இலங்கை மாணவர்களுக்கான அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் விருது வழங்கும் வைபவம் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் ஃபாரூக் பர்கி தலைமையில் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது, தகுதியான 321 மாணவர்கள் பாகிஸ்தானில் உயர் கல்வியினை தொடர்வதற்காக புலமைப்பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. இவ்வைபவத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவியொருவருக்கு





விருதும் சான்றிதழையும் வழங்குவதையும் அமைச்சர்கள் விதுர விக்கிரமநாயக்க, நிமல் சிறிபால டி சில்வா, இலங்கை பாகிஸ்தான் பாராளுமன்ற சங்கத்தின் தலைவர், இலங்கை பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பௌத்த பிக்குகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அதேவேளை, இந்நாட்டின் திறமையான 357 மாணவர்கள் இப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் உயர் கல்வியினை பாகிஸ்தான் பல்கலைக்கழகங்களில் மேற்கொண்டிருப்பது தெரிந்ததே.

# கற்பிட்டி வர்த்தகர் வீட்டில் கொள்ளையர் கைவரிசை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவக்காடு, கொலனி பிரதேசத்தில் உள்ள மரக்கறி விற்பனையில் ஈடுபடும் பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் ஆயுத முனையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாவக்காடு கொலனி பகுதியில் உள்ள குறித்த வர்த்தகரின் வீட்டிற்கு நேற்று முன்தினம் (2) அதிகாலை 2 மணியளவில் கைத்துப்பாக்கிகள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இந்த ஆயுதக் கும்பல் முதலில் அங்கிருந்த தொழிலதிபரையும் , அவரது மனைவி உட்பட குடும்பத்தினரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு, குறித்த வர்த்தகரின் மனைவி மற்றும் பிள்ளைகளை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த ஆயுதக் குழுவினர், அவர்களை கொலை செய்யப் போவதாக மிரட்டியதுடன், வீட்டில் இருந்த பாதுகாப்பு பெட்டகத்தை வலுக்கட்டாயமாக திறந்துள்ளனர் என மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, வீட்டின் பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த சுமார் 70 பவுன் தங்க நகைகள் மற்றும் 30 இலட்சம் ரூபா பணம் என்பனவற்றை கொள்ளையடித்த ஆயுதக் குழுவினர், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை மற்றும் கற்பிட்டி பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 41 வருட கால சேவைக்கு கௌரவிப்பு



41 வருட காலம் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக கடமை புரிந்து ஓய்வு பெற்றுள்ள வெலிகமையைச்சேர்ந்த அஸ்ஸெய்யித் ஜே.எஸ். வாரிஸ் அலி மௌலானாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, வெலிகம அறபா தேசிய பாடசாலை முன்றலில் நேற்று (03) வெகுவிமர்சையாக இடம் பெற்றது. இதன்போது அதிபர், பொன்னாடை போர்த்தியும், நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். படங்கள் வெலிகம தினகரன் நிருபர்

# இலங்கை - சவுதி கல்வி ஒத்துழைப்பு இருநாட்டு மக்கள் உறவை மேம்படுத்தும்
### தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி

இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான கல்வி ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான உறவுகளும் மேம்படும் என்று இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தெரிவித்தார்.

இலங்கையின் கல்வித் துறையை மேம்படுத்துவதில் இந்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களதும் கல்வி நிறுவனங்களதும் வகிபாகத்தையும் அவர் பாராட்டியுள்ளார். அறிவியலில் மற்றும் மனிதநேய முன்னேற்றங்கள் பற்றிய SLIIT இன் சர்வதேச மாநாடு மறம் 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய கல்வியியலாளர் விருதுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப வைபவம் கொழும்பில் கடந்த வௌ்ளியன்று நடைபெற்றது. இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இலங்கைக்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையிலான கல்வி ஒத்துழைப்பையும் குறிப்பாக இரு நட்பு நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையில் உள்ள ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார். மேலும் கல்வி சார் நிகழ்வுகளை நடாத்துவதன் மூலம் இரு நட்பு நாடுகளுக்கும் இடையிலான உறவும் அதேபோல பல்வேறு துறைகளில் உள்ள மக்களுக்கும் இடையேயான உறவுகளும் மேம்படும் என்றும் தெரிவித்தார்.

இன்று, பல வருட உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் கற்றலின் பலனைக் கொண்டாட நாம் ஒன்றுகூடும் சிறப்பான நாளாகும். மாணவர்களிலும் சமூகத்தின் மத்தியிலும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்த வலுவான அர்ப்பணிப்போடு செயற்படும் விதிவிலக்கான கல்வி வழங்குனர்களை அங்கீகரிக்கவும் பாராட்டவும் இத்தருணத்தை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.

இம்முக்கியமான நாளில், 2023 தேசிய கல்வியியலாளர் விருதுகளைப் பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு அவர்களுக்கு வெற்றியும் மகிழ்ச்சியும் நிறைந்த எதிர்காலத்தைப் பெறவும் வாழ்த்துகிறேன்' என்றும் அவர் தெரிவித்தார்.

## ஹைரிய்யா மாணவி
# பாத்திமா அஸ்மா ரிஸ்வான் விசேட சித்தி



அண்மையில் வெளியான க.பொ.த சா/த பரீட்சையில் கொழும்பு 09, ஹைரிய்யா பெண்கள் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவி பாத்திமா அஸ்மா 09 பாடங்களிலும் 'A' சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர், லேக்ஹவுஸ் விளம்பர பிரிவில் பணியாற்றும் சிரேஷ்ட கணினி இயக்குநர் எம்.என்.ஏ. ரிஸ்வான் மற்றும் ஹைரிய்யா பெண்கள் கல்லூரி ஆசிரியை பாத்திமா அனீஸியா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.



பாணந்துறை, ஹொரேதுடுவை முஸ்லிம் வித்தியாலயத்தின் மூலம் இம்முறை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுல் மூன்று மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த ஏ.டி.எப். மில்லா – (151) எம்.எஸ்.எப்.எம். ருமைஸ் (149), எம்.ஐ.எம்.ஆயிஷா ( 170) மாணவர்கள் அதிபர் எஸ்.எச். முத்தலிப், வகுப்பாசிரியை திருமதி கே. பிரபாகரன் ஆகியோருடன் எடுத்துக்கொண்ட படம். படம் : மொறட்டுவை மத்திய விசேட நிருபர்

# உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் வன்னாத்தவில்லு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எட்டாம் கட்டை கரடிபூவல் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று வெள்ளிக்கிழமை (01) மீட்கப்பட்டுள்ளது. வன்னாத்தவில்லு, எட்டாம் கட்டை கரடிப்பூவல் பகுதியைச் சேர்ந்த ரணசிங்க ஆராச்சிலாகே சுனில் பிரேம (வயது 57) எனும் நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

# கவிதை புத்தகங்கள் அன்பளிப்பு



தமிழில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வித் திறனை ஊக்குவிக்கும் முகமாக கொழும்பு 10, அல் ஹிதாயா கல்லூரி சிங்கள பிரிவின் உப அதிபர் ஏ.ஏ.சி.கே. அபேசிங்ஹ, தமிழ்ப் பிரிவு உப அதிபரான எம்.இசட். மொஹம்மத் இஸ்மீர் ஆகியோரிடம் நீதி அமைச்சர் விஜேதாவ ராஜபக்ஷவின் முஸ்லிம் விவகார இணைப்பாளரும், வவுனியா சிறைச்சாலை பிரதான மேற்பார்வையாளர் குழு பிரதிநிதியுமான சிராஜுதீன் நிப்ராஸ் மொஹம்மத் ஒருதொகுதி கவிதைப் புத்தகங்களை பாடசாலைக்கு கையளித்தார். அருகில் சன்சைன் சுப்பர் ஸ்டார்,கலைத் தங்கம் இலங்கை பொன்மனச் செம்மல் தாஜ்மஹான் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மீயல்லை மாணவன்
# விசேட சித்தியால் வரலாற்று சாதனை

**ஹம்பாந் தோட்டை குறூப் நிருபர்**



க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஹக்மனை, மீயல்லை அல் மினா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் டி. அம்மார் யாஸிர் ஒன்பது பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப்பெற்று பாடசாலையில் வரலாற்று சாதனையை நிலைநாட்டியுள்ளதாக பாடசாலை அதிபர் எம். எம். நவாஸ் தெரிவித்தார். ஹக்மனை, மீயல்லை அல் மினா முஸ்லிம் மகாவித்தியாலயத்திலிருந்து இம் முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் இம் மாணவனே பாடசாலையின் வரலாற்றில் முதலாவதாக '9ஏ' சித்தியை பெற்ற மாணவனாக வரலாற்று சாதனையை நிலைநாட்டி பாடசாலைக்கு புகழ் சேர்த்துள்ளார்.

# புத்தளத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜிதின் பிரதேசம் தழுவிய டெங்கு ஒழிப்பு சிரமதானம் சனிக்கிழமை (02) காலை இடம்பெற்றது. பொதுச் சுகாதார அதிகாரிகள், புத்தளம் நகர சபையின் சுகாதார பிரிவினர் மற்றும் 50 க்கும் மேற்பட்ட பிரதேசவாசிகளின் பங்குபற்றுதலுடன் இந்த டெங்கு ஒழிப்பு சிரமதானம் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. அதிலும் குறிப்பாக ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என பல்வேறு நபர்கள் இதில் கலந்து கொண்டமை சுகாதார அதிகாரிகளுக்கு மத்தியில் பாரிய வரவேற்பைபெற்றது.

# சீனன்கோட்டை கல்வி அபி.சங்கத்துக்கு மூன்று மாடி புதிய கட்டம் அன்பளிப்பு
### இளம் தொழிலதிபர்களான அப்ராஸ், நைபீலுக்கு பாடசாலை சமூகம் பாராட்டு







**அஜ்வாத் பாஸி**

சீனன்கோட்டை கல்வி அபிவிருத்திச்சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களான இளம் தொழிலதிபர் அப்ராஸ் அப்துல்லாஹ் மற்றும் நைபீல் நிஸாம் ஆகியோரின் நிதியுதவியுடன் (பாடசாலைக்கு அருகாமையில்) ஜாபிர் எவனியு பிரதேச பகுதியில் அமைக்கப்பட்ட மூன்று மாடிகளைக்கொண்ட புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஸீ. இப்றாஹீம் தலைமையில் சனிக்கிழமை (02) வைபவரீதியாக இடம்பெற்றது.

சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார், ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் (நளீமி) ஆகியோர் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் இளம் தொழிலதிபர்களின் பெற்றோர்களான எம்.ரி.ஏ. அப்துல்லாஹ், எம்.இஸட்.எம். நிஸாம் ஆகியோர் வைபவரீதியாக இதனைத் திறந்து வைத்தனர்.

பாடசாலையின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான செலவீனங்களுக்கு வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில், சீனன்கோட்டை பள்ளிச்சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள், உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில், நளீமிய்யா முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி.அகார் முஹம்மத் (நளீமி) பாடசாலை அதிபர் எம்.சி. இப்றாஹிம், பள்ளிச் சங்க இணைப் பொருளாளர் ஏ.இஸட்.எம். ஸவாஹிர் ஆகியோர் பழைய மாணவர்கள் இருவரினதும் மகத்தான பணியை பாராட்டியதோடு தாம் கல்வி கற்ற பாடசாலையின் கல்வி முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட முன்மாதிரியான பணி ஏனைய பழைய மாணவர்களுக்கும் எடுத்துக்காட்டாகும் எனவும் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 டிசம்பர் 4 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN




தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.48 |
| லுஹர் | 12.02 |
| அஸர் | 03.24 |
| மஃரிப் | 05.54 |
| இஷா | 07.08 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் கார்த்திகை 18

ராகுகாலம் : காலை : 7.45 - 9.15வரை
சுபநேரம் : பகல் : 12.15 - 1.45வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# "வெப்ப வலயக் காலநிலை அபிலாஷைகள் தொடர்பான திட்டம்"

## COP28 மாநாட்டில் ஜனாதிபதி முன்வைப்பு

உலக வெப்பமயமாதலின் சவாலை எதிர்கொள்ளுதல் மற்றும் வெப்ப வலய நாடுகளுக்கு நிலைபேறான அபிவிருத்தியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்ட “வெப்ப வலயக் காலநிலை அபிலாஷைகள் தொடர்பான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க COP28 மாநாட்டில் (02) முன்வைத்தார்.

காலநிலை நிதியங்களில் மாதிரி அடிப்படையிலான மாற்றம் மற்றும் பயனுள்ள பிரதிபலன்களை அடைவதற்கு பலதரப்பு அணுகுமுறையின் தேவை ஆகியவை இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு வழிவகுத்ததாக ஜனாதிபதி இதன் போது வலியுறுத்தினார்.

2030ஆம் ஆண்டுக்குள் புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தும் இலக்கை அடைவதற்கான நிச்சயமற்ற தன்மைகள் குறித்து கவனம் செலுத்தி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது உரையை ஆரம்பித்தார்.

இந்த தீர்மானமிக்க இலக்கை அடைவதற்கான 50% வாய்ப்பு இருப்பதாக வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்காக ஏனைய நாடுகளிடமிருந்து நிதி உதவி கிடைப்பதை எதிர்பார்க்க முடியாது என்றார்.




எனவே, இந்த நிதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் வெப்பவலய மற்றும் வெப்பவலய மற்ற நாடுகளுக்கும் அரச மற்றும் தனியார் துறைக்கும் இடையிலான ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

வெப்பவலய காலநிலை அபிலாஷைகள் திட்டம், காடுகள், சதுப்பு நிலங்கள் போன்ற அத்தியாவசிய இயற்கை வளங்களை மையமாகக் கொண்ட முதலீடுகளை ஈர்ப்பதே வெப்பவலய காலநிலை அபிலாஷைகள் திட்டத்தின் நோக்கமாகும். உலக வெப்பமயமாதலை எதிர்ப்பதற்கு இந்த முதலீடுகள் அவசியம்.

இதன் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிராக வருடாந்தம் செலவிடப்படும் டிரில்லியன் கணக்கான டொலர்களை மீதப்படுத்த முடியும். இதற்காக தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

நீலப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நிலைபேறான இந்து சமுத்திரத்தை உருவாக்குவதற்கும் இந்து சமுத்திர ரிம் சங்கத்துடன் (Indian Ocean Rim Association) இணைந்து பணியாற்றுவது அவசியம்.

வெப்பவலயக் காலநிலை அபிலாஷைகள் திட்டம் மற்றும் நிலைபேறான இந்து சமுத்திரத்திற்கான முயற்சிகள் உலகின் மிகப்பெரிய கார்பன் உறிஞ்சுதலை உருவாக்கும்.

மாலைதீவு, கென்யா, பிரேசில் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் உள்ளிட்ட உலகத் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போது, இந்த வேலைத்திட்டத்தில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸ் ஜனாதிபதியுடன் சந்திப்பு



டுபாயில் நடைபெறும் ஐ.நா. காலநிலை மாநாடு COP28 க்கு இணையாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையிலான இரு தரப்புச் சந்திப்பு நேற்று முன்தினம் (02) நடைபெற்றது.

இலங்கையின் பசுமை பொருளாதார மாற்றம் மற்றும் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கமான IORA உடனான பிரான்ஸின் தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அதேநேரம், இலங்கையில் காலநிலை தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு ஒன்றுபடுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோனுக்கு அழைப்பு விடுத்தார்

## 1,400 மீ.நீளம் கொண்ட இறங்குதுறை

# கொழும்பு துறைமுக கிழக்கு முனைய நிர்மாணப்பணிகள் 2024 இல் பூர்த்தி



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நிர்மாணப்பணிகளை அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் பூர்த்திசெய்யும் இலக்கை கொண்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த வருடத்தின் நடுப்பகுதிக்குள் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க இலங்கை துறைமுக அதிகாரசபை இலக்கை நிர்ணயித்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கிழக்கு முனையத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட போதே, இவ்வாறு தெரிவித்தார்.

இந்த முனையத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள இறங்குதுறை 1,400 மீற்றர் நீளம் கொண்டது. நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர், 03 பாரிய கப்பல்களை ஒரே நேரத்தில் நிறுத்த முடியும். கப்பல்களிலிருந்து கொள்கலன்களை இறக்குவதற்கு 12 கேன்ட்ரி கிரேன்களும், கொள்கலன்களை வைப்பதற்கு 40 கேன்ட்ரி கிரேன்களும் கிழக்கு முனையத்தில் நிறுவப்படும். மற்றும் கொள்கலன் இறங்குதுறையின் பரப்பளவு 75 ஹெக்டேயராக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 03 மில்லியன் கொள்கலன்களைக் கையாள திட்டமிடப்பட்டுள்ள கிழக்கு முனையம், அரை தானியங்கி மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்.

இந்த கிழக்கு முனையத்தின் அபிவிருத்திக்காக 585 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளது. அனைத்து நிதி ஒதுக்கீடுகளும் இலங்கை துறைமுக அதிகார சபையினாலேயே மேற்கொள்ளப்படும். கட்டட ஒப்பந்ததாரர்கள் சைனா இன்ஜினியரிங் மற்றும் அக்சஸ் இன்ஜினியரிங் நிறுவனங்களாகும்.

நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கிழக்கு முனையத்துக்கு விஜயம் செய்த போது, இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் கீத் பெர்னாட், உப தலைவர் கயான் அழகேவத்தகே, முகாமைத்துவ பணிப்பாளர் பிரபாத் மாளவிகே உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# செட்டிகுளம் இரட்டைக் கொலை 19 வயது இளைஞன் கைது

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா செட்டிகுளம் இரட்டைக் கொலை தொடர்பில் 19 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் செட்டிகுளம் பகுதியை சேர்ந்த பசுபதிவர்ண குலசிங்கம் (வயது72) முதியவரும், அவரது மனைவியான கனகலட்சுமி (வயது 68) என்பவருமே படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த செட்டிகுளம் பொலிஸார், செட்டிகுளம் பகுதியில் வசிக்கும் 19 வயது இளைஞரை கைது செய்தனர்.

கடந்த புதன்கிழமை இரவு வழமைபோல இவர்களது மகன் கடையை மூடிவிட்டு அருகிலுள்ள தனது வீட்டுக்கு சென்றுள்ளார். வியாழக் கிழமை காலை கடையை திறப்பதற்காக வருகை தந்த மகன் தனது தாயும் தந்தையும் இரத்தவெள்ளத்தில் கிடந்தமை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

## ADB யின் ரூ. 2,000 கோடி நிதி உதவியுடன்

# கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பம்

நாடளாவிய ரீதியில் சேதமடைந்துள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் (20 பில்லியன் ரூபா) 2,000 கோடி ரூபாவை கடனுதவியாக வழங்க இணங்கியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், உரிய கடன் தொகை கிடைத்த பின்னர் பணிகளை ஆரம்பிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (30) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன, “ நாட்டின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் செயற்பட சர்வதேச நிபுணத்துவத்துவமுடைய பிரான்ஸ் நாட்டு லாசார்ட் நிறுவனமும், சர்வதேச கடன்களை செலுத்தாததால் ஏற்பட்டுள்ள சட்ட விடயங்களுக்கு கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனமும் தேர்ந்தெடுக்கப்பட்டன. கடன் வழங்குநர்களுடன் இவர்கள் விரிவாக கலந்துரையாடினர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின் போது ஜப்பான், இந்தியா மற்றும் சீனாவின் ஆதரவைக் கோரினார்.



தற்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டை மேற்கொள்ள சர்வதேச சமூகம் உத்தியோகபூர்வமாக இணங்கியுள்ளது. இது, நாம் பெற்ற வெற்றியாகும். நாடு மீண்டும் சுவாசிக்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வெற்றியின் மூலம் நாடளாவிய ரீதியில் நிறுத்தப்பட்டிருந்த திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும். ஒரு சில வீதிகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்துள்ளன.

மேம்பாலங்கள் அமைக்கும் பணி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றே நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, இவ்வாறு நிறுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களும் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்பட உள்ளன.

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இலங்கை உற்பத்திகள் ஏற்றுமதி

## வாய்ப்புகள் ஆராயுமாறு பிரதமர் வலியுறுத்து



இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சந்தைகளுக்கு ஆடை உற்பத்திகள், கடலுணவுப் பொருட்கள், கறுவா மற்றும் விவசாய பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் குறித்த சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஐரோப்பிய ஒன்றிய தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கார்மென் மொரேனோவுக்கு (Carmen Moreno) இடையிலான சந்திப்பொன்று (01) அலரிமாளிகையில் நடைபெற்றது. இதன்போதே பிரதமர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் இக்கட்டான காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய பெறுமதியான ஆதரவுக்கும் பிரதமர் இதன் போது நன்றி தெரிவித்தார்.

பல தசாப்தங்களாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்துவரும் வலுவான உறவையும், GSP பிளஸ் வசதியின் மூலம் ஐரோப்பிய சந்தைக்கான இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளையும் பிரதமர் நினைவு கூர்ந்தார்.

இலங்கையின் கல்வித்துறையின் அபிவிருத்திக்காக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பல்கலைக்கழகங்களுடனான ஒத்துழைப்பு குறித்தும் இந்த சந்திப்பில் கவனத்தில் கொள்ளப்பட்டது. ஐரோப்பிய ஒன்றிய பல்கலைக்கழகங்களுடனான உறவுகளை மேம்படுத்துவதற்கு தூதுவர் தனது ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தினார்.

ஐரோப்பிய ஒன்றிய பூகோள மூலோபாயத்தின் மூலம் ஊக்குவிக்கப்படக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அரச மற்றும் தனியார் முதலீடு, பசுமை எரிசக்தி,பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி, டிஜிட்டல் மயமாக்கல், சுகாதாரம், கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களுக்கான முதலீட்டு கடன்களைப் பெற்றுக்கொள்வதில் ஐரோப்பிய முதலீட்டு வங்கியுடன் ஏற்படுத்தக்கூடிய பங்காண்மை குறித்து இந்த சந்திப்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலாத்துறையிலுள்ள வாய்ப்புகளை வலியுறுத்திய தூதுவர், இந்த விடயத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க ஐரோப்பிய ஒன்றியம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

# 2024 பட்ஜட்: மருந்துக் கொள்வனவு ஊழல் மோசடிகளை தடுக்க முடியும்



2024 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் மூலம் மருந்துகளைக் கொள்முதல் செய்வது தொடர்பான சிறப்பு வழிகாட்டல்களை வெளியிடுதல் மற்றும் அதற்காக ஒரு தனி நிறுவனத்தை நிறுவுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதால், மருந்து இறக்குமதியில் இடம்பெறும் ஊழல், முறைகேடுகள் மற்றும் ஏனைய சர்ச்சைக்குரிய விடயங்களை தடுக்க வழியேற்படுமென, சுகாதார இராஜாங்க அமைச்சரும் விசேட மருத்துவருமான சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் சுகாதார அமைச்சின் மனித வளங்கள், சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் மாற்றங்களை செய்ய எதிர்பார்ப்பதாகவும், இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (01) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

"தற்போது நாட்டிலுள்ள மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்கு தேவையான தரமான மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்தியுள்ளோம். தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக சிகிச்சை மற்றும் பராமரிப்புப் பணிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தன. இருந்தாலும், அவற்றை தவிர்த்து அடுத்த ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி உதவிகளுடன் இந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

சுகாதார அமைச்சில் பல கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். கடந்த வாரம் சில மாற்றங்களை செய்தோம். அடுத்த வாரத்திலும் இது போன்ற சில மாற்றங்களை செய்ய தயாராகவுள்ளோம். மேலும் மனித வளங்கள், சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் மாற்றங்களை செய்ய எதிர்பார்க்கிறோம். மருந்துக் கொள்வனவு செயல்முறையிலும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. குறிப்பாக, 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளினூடாக மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விசேட வழிகாட்டுதல்களை வெளியிடுதல் மற்றும் அதற்கென தனியான நிறுவனமொன்றை ஸ்தாபித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மருந்து இறக்குமதியின் போது இடம்பெறும் ஊழல், முறைகேடுகள் மற்றும் பிற சர்ச்சைக்குரிய சம்பவங்களை தவிர்க்க முடியும் என்றார்.

# IMF உதவி இரு வாரங்களுக்குள் கிடைக்கும்

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கவுள்ளது. உலக வங்கியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கமைவாக, மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இம்மாதத்தில் இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்தது.

கடனை மீள் செலுத்தலுக்கான நிவாரண காலத்தை இலங்கைக்கு வழங்கியுள்ள சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் கடனுக்கான வட்டி தொகையில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டது. இது குறித்து நிதி அமைச்சின் பேச்சாளர் மேலும் கூறுகையில்,

தேசிய மற்றும் சர்வதேச கடன் மறுசீரமைப்புகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இம்மாதத்தில் 780 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளது. சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு கடனை மீள் செலுத்த நிவாரண காலத்தை வழங்கவும் இணங்கியுள்ளனர்.

கடன் மற்றும் வட்டியை மீள்செலுத்த நிவாரண காலமும் கடன் வட்டியில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் சர்வதேச கடன் வழங்குநர்கள் உறுதியளித்துள்ளனர். குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் சர்வதேச கடன் வழங்குநர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையான 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளது. மறுபுறம் உலக வங்கியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இலங்கைக்கு இம்மாதத்தில் கிடைக்கும்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 18ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 19

## குறள் தரும் சிந்தனை



அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்

*வறுமை வந்தது என்பதற்காக, அறநெறியிலிருந்து விலகி நிற்பவனை, அவன் தாய்கூட அயலானைப் போல்தான் கருதுவாள்.*

# காலநிலை மாற்ற விடயத்தில் செலுத்தப்படும் அதிக கரிசனை

இன்றைய காலகட்டத்தில் அதிகம் கவனம் செலுத்தப்படும் முக்கிய விடயங்களில் ஒன்றாக காலநிலை மாற்றமும் அதன் விளைவான தாக்கங்களும் விளங்குகின்றன. கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து புவி வெப்பமடைதலுக்கு அளிக்கப்பட்டு வந்த பங்களிப்புக்கள் கடந்த சில தசாப்தங்களாக தீவிரமடைந்துள்ளன. அதனால் ஏற்பட்டுவரும் தாக்கங்களும் பாதிப்புக்களும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.

கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து எரிபொருள் மற்றும் எரிவாயு பயன்பாடும் தொழிற்சாலைகளின் அதிகரிப்பும் காபனீரொட்சைட்டு உமிழ்வில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன. அதன் விளைவாக காலநிலையில் ஏற்பட்டுவரும் தாக்கங்களும் பாதிப்புக்களும் அதிகரித்துள்ளன.

காலநிலை மாற்றத்தின் விளைவாக கடலின் சூழல் மாற்றமடைந்து வருகிறது. அதனால் கடல் மட்டம் மாத்திரமல்லாமல் வெப்பநிலையும் கூட உயர்ந்து வருகிறது. கடல் அமிலமயமாக்கல், பவளப்பாறைகள் அழிவு, கடல் வாழ் உயிரினங்களின் வாழ்விடங்கள் அழிவு என்பனவும் கூட காலநிலை மாற்றத்தின் விளைவுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவை கடல் பல்லுயிர்த்தன்மை, கடல் சார்ந்த உணவு முறைகள், கடலோர வாழ்வாதாரத்தை சீர்குலைத்தல் என்பவற்றின் மூலம் மனித உயிர்களை நேரடியாகப் பாதிக்கக்கூடியதாக உள்ளன. இவை ஓசோன் படல பாதிப்புக்கும் பனிப்பாறைகள் உருகவும் புவி வெப்பமடைதலுக்கும் பாரிய பங்களிப்பு நல்குகின்றன.

காலநிலை எதிர்கொண்டுள்ள இந்நெருக்கடியான நிலைக்கு கைத்தொழில் வளர்ச்சிமிக்க நாடுகளான அபிவிருத்தி அடைந்த நாடுகள்தான் அதிகம் பங்களித்துக் கொண்டிருக்கின்றன. உலகில் அதிகம் காபனீரோட்சைட்டை உமிழும் நாடுகளாக அவையே உள்ளன.

இருந்த போதிலும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் வளர்ச்சியடைந்த நாடுகள் மாத்திரமல்லாமல் வளர்முக மற்றும் வறிய நாடுகளும் கூட முகம்கொடுக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளன. ஆனால் காலநிலை மாற்றத்திற்கு வளர்முக மற்றும் வறிய நாடுகளின் பங்களிப்பு மிகவும் குறைவாகும்.

இருப்பினும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் எல்லா பிரதேசங்களும் மக்களும் அனுபவிக்கவே நேர்ந்துள்ளது. நிலத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளின் எல்லைகள் அமைந்துள்ள போதிலும் காலநிலையிலோ வளிமண்டலத்திலோ அவ்வாறான எல்லைகள் இருப்பதாக இல்லை. வளர்ச்சியடைந்த நாட்டினதும் வளர்முக மற்றும் வறிய நாட்டினதும் வளிமண்டலம் ஒன்றுதான்.

அதனால் காலநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களின் தாக்கங்களும் பாதிப்புகளும் உலகின் இருப்புக்கு அச்சுறுத்தலாக மாறிவிடக்கூடிய அபாயம் எல்லா மட்டங்களிலும் உணரப்படுகின்றன. இது தொடர்பில் விஞ்ஞானிகளும் அவ்வப்போது சுட்டிக்காட்டி வருகின்றனர்.

பூமியின் 44 சதவீதமான மேற்பரப்பில் 134 வெப்ப வலய நாடுகள் அமைந்துள்ளன. அவற்றில் உலகின் சனத்தொகையில் 50 சதவீதமானோர் 2030 ஆம் ஆண்டாகும் போது காணப்படுவர் என மதிப்பிப்பட்டுள்ளது. அதேநேரம் 22 ஆம் நூற்றாண்டில் வெப்ப வலயம் பூமத்திய ரேகையிலிருந்து விலகிச் செல்லக்கூடும் எனவும் சில விஞ்ஞானிகள் எதிர்வுகூறியுள்ளனர்.

இவ்வாறான சூழலில் காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்கள், தாக்கங்களை குறைப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவை உணரப்பட்டிருக்கின்றது.

அந்த அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான 28 ஆவது சர்வதேச மாநாடு 54 அரச தலைவர்களின் பங்கேற்புடன் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான துபாயின் எக்ஸ்போ சிட்டியில் நடைபெற்றுள்ளது. 1992 இல் ஐ.நா சபையில் காலநிலை மாற்றம் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் உச்சி மாநாடே இது.

புவியின் வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸிக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என்ற இலக்கை அடைவது குறித்து ஆராய்வதே இம்மாநாட்டின் நோக்கமாகும். அந்த வகையில் இம்மாநாட்டின் போது பல்வேறு விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் பங்குபற்றியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'புவி வெப்பமடைதலை 1.5 செல்சியஸியினால் குறைப்பதில் இலங்கை உறுதியாக உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளதோடு, 'இந்து சமுத்திரத்திற்கும் காலநிலை மாற்றத்துக்கும் இடையில் நிலவும் ஒன்றோடு ஒன்று சார்ந்திருத்தல் தன்மை தொடர்பிலும் கவனம் செலுத்துகிறது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு பங்களித்தல் என்பவற்றை குறைப்பதற்கு ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும், அது புவியினதும் உயிரினங்களதும் இருப்புக்கு அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# மூன்று மாநிலங்களில் பா.ஜ.க பெருவெற்றி!



## மொத்தம் ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில், தெலுங்கானா மாத்திரமே காங்கிரஸ் வசம்! எஞ்சிய மிசோராம் மாநிலத்தின் தேர்தல் முடிவு இன்றுதான் தெரியவரும்!

இந்தியாவில் ஐந்து மாநிலங்களுக்கு நடைபெற்றுள்ள சட்டசபைக்கான தேர்தல்களில் நேற்றுமாலை வரை வெளியான முடிவுகளின்படி மூன்று மாநிலங்களில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக கட்சி மாபெரும் வெற்றியீட்டியுள்ளது.

ஐந்து மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல்கள் முடிந்துள்ள நிலையில் 4 மாநில சட்டசபை தேர்தல் முடிவுகள் நேற்றுமாலை வெளியாகின. இவற்றில் 3 மாநிலங்களில் பா.ஜ.க மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களிலேயே பாரதீய ஜனதா வெற்றிபெற்றுள்ளது.

அதேசமயம் தெலுங்கானாவில் காங்கிரஸ் அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது. மிசோராமில் நேற்று வாக்கு எண்ணிக்கை செய்யப்படவில்லை. அங்கு இன்று வாக்குகள் எண்ணப்படுகின்றன.

சட்டசபைத் தேர்தல்கள் தெலுங்கானா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், மிசோராம் ஆகிய ஐந்து மாநிலங்களிலேயே நடைபெற்றிருந்தன.

மத்திய பிரதேசத்தில் பாஜக 164 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. காங்கிரஸ் வெறும் 64 இடங்களில் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது. அறுதிப்பெரும்பான்மை பெறுவதற்கு 116 இடங்கள் போதும். ஆனால் பா.ஜ.க 164 இடங்கள் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளது.

அங்கே சாதாரண வெற்றி இல்லாமல் மாபெரும் இமாலய வெற்றியை பா.ஜ.க பெற்றுள்ளது.

அதேபோல் ராஜஸ்தானில் பா.ஜ.க 109 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. காங்கிரஸ் வெறும் 74 இடங்களில் மட்டுமே முன்னிலை பெற்றுள்ளது. 200 இடங்களில் அறுதிப்பெரும்பான்மை பெறுவதற்கு 101 இடங்கள் போதும். ஆனால் பா.ஜ.க 109 இடங்ளை வென்றுள்ளது.

சத்தீஸ்கரில் பாஜக 57 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. காங்கிரஸ் வெறும் 32 இடங்களில் மட்டுமே முன்னிலை பெற்றிருந்தது. அம்மாநிலத்தில் முன்னிலை பெற 90 இடங்களில் 46 இடங்கள் போதும். ஆனால் பா.ஜ.க 57 இடங்களை வென்றுள்ளது.

நேற்றுமாலை வாக்குகள் எண்ணப்பட்டு இறுதிமுடிவுகள் வெளிவராத நிலையிலேயே இந்த வெற்றிகள் கிடைக்கப்பெற்றன. இறுதி முடிவில் ஓரிரு ஆசனங்கள் மாற்றமாக வந்தாலும் மூன்று மாநிலங்களில் பா.ஜ.க வெற்றியீட்டியிருப்பது நேற்றுமாலை உறுதியாகியது.



## காங்கிரஸ் செல்வாக்கு சரிவு; அடுத்தவருட பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவது உறுதி!

தொடர்ந்து ஆட்சியில் இருப்பதால் பா.ஜ.கவுக்கு இருக்கும் செல்வாக்கும், அமைப்பு ரீதியான பலமும் இந்த வெற்றிக்கு முதன்மையான காரணமாக கருதப்படுகிறது. இந்த தேர்தலில் ஊழலை ஒரு முக்கிய பிரச்சினையாக காங்கிரஸ் முன்வைத்தது. கர்நாடக மாநிலத்தில் ஆட்சியிலிருந்த கட்சி மீது இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்ததற்கு நல்ல பலன் கிடைத்த நிலையில், மத்திய பிரதேசத்திலும் தீவிரமாக ஊழல் குற்றச்சாட்டுகளை முன்வைத்தது காங்கிரஸ். கிடைக்கும் இடங்களில் எல்லாம் வியாபம் ஊழல் குறித்து பேசியது. ஆனால் அது தேர்தலில் பயன் தரவில்லை.



கர்நாடக மாநிலத்தில் '40% கமிஷன்' என போஸ்டர் அடித்து ஒட்டியதைப் போலவே, மத்தியப் பிரதேசத்தின் சில இடங்களில் '50% கமிஷன்' என போஸ்டர் அடித்து ஒட்டியது காங்கிரஸ். 19 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் நடந்ததாக கூறப்படும் 250 ஊழல்களின் பட்டியலை வெளியிட்டது காங்கிரஸ்.

மாநிலத்தில் பெண்கள், தலித்துகள், பழங்குடியினருக்கு எதிராக அதிகரித்துவரும் குற்றச் சம்பவங்களை பேசுபொருளாக்கியது காங்கிரஸ். குறிப்பாக பழங்குடியினர் ஒருவர் அவமதிக்கப்பட்டது நாடு முழுவதும் பேசப்பட்ட நிலையில், இந்த விவகாரம் ஆளும் பா.ஜ.கவுக்கு மிகுந்த சங்கடத்தைத் தரும் விவகாரமாக மாறியது.

ஆனாலும் காங்கிரஸின் முயற்சி பலிக்கவில்லை.

சிலிண்டர் விலை ரூ.500 ஆக குறைக்கப்படும், பெண்கள் அனைவருக்கும் மாதம்தோறும் ரூ.1,500 வழங்கப்படும், 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும், விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்படும், பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் ஆகிய வாக்குறுதிகள் காங்கிரஸ் கட்சியால் அறிவிக்கப்பட்டன. நாங்கள் கொடுத்த வாக்குறுதியை கர்நாடகாவில் நிறைவேற்றினோம்; அதை மத்தியப் பிரதேசத்திலும் நிறைவேற்றுவோம் என காங்கிரஸ் கட்சி பரப்புரையில் தெரிவித்தது. ஆனால் அது இந்த தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், 3 மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட 7 எம்.பிக்களை சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட வைத்தது பா.ஜ.க. மேலும், தேசிய அளவிலான மூத்த தலைவர்கள் 11 பேருக்கு ஆசனம் கொடுத்தது. இது முன்னணி தலைவர்கள் பலருக்கும் உற்சாகமளிக்க தேர்தல் வேலைகள் பரபரத்ததும் பா.ஜ.கவின் வெற்றிக்கான காரணமாக கருதப்படுகிறது.

மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமரின் மகன் தேவேந்திர சிங் தோமர் வீடியோ அழைப்பில் பேசுவது குறித்த வீடியோ சமீபத்தில் வெளியானது. மூன்று முக்கிய பணிகளை முடிக்க, 139 கோடி ரூபாய்க்கு தேவேந்திர சிங் தோமர் பேரம் பேசியதாக அதில் குறிப்பிடப்பட்டது. மேலும், மற்றொரு முக்கிய பணியை முடிக்க 500 கோடி ரூபாய்க்கு தேவேந்திர சிங் தோமர் பேரம் பேசியதாக அதில் கூறப்பட்டது.

இதையடுத்து, இந்த விஷயத்தை தீவிரமாக கையில் எடுத்த காங்கிரஸ் கட்சி, மத்திய பிரதேசத்தில் ஊழல் ஆட்சி நடப்பதாகவும், பா.ஜ.க ஆட்சியில் கமிஷன் தலைவிரித்து ஆடுவதாகவும் தேர்தல் பிரசாரங்களில் குற்றம் சாட்டியது. ஆனால், இது போலியான வீடியோ என்று பா.ஜ.க மறுத்தது. இந்த வீடியோவும் மத்திய பிரதேச அரசியல் களத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

*(07 ஆம் பக்கம் பார்க்க)*

# இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்னரான கிழக்கிலங்கையின் இலக்கிய செல்நெறி

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறையுடன் இணைந்து 'இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின்னரான இலக்கிய செல்நெறி' என்ற தலைப்பில் ஆய்வரங்கை நடத்தியது.

இந்த ஆய்வரங்கம் நேற்றுமுன்தினம் (2023.12.02 சனிக்கிழமை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் (கிழக்கு மாகாணப் பணிப்பாளர்) தலைமையில் இடம்பெற்றது.

ஆய்வரங்கில் சிறப்பு அதிதியாக பேராசிரியர் எம். எம்.பாசீல் (பீடாதிபதி கலை கலாசாரம்) கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்த ஆய்வரங்கத்தை அ.சண்முகதாஸ் (வாழ்நாள் பேராசிரியர்) நடத்தினார். இவ்வாய்வரங்கு ஏழு தலைப்புகளுடன் அரங்கேறியது.

அவற்றில் மொழிபெயர்ப்புத்துறையின் செல்நெறியை பேராசிரியர் ஏ.எப்.எம். அஷ்ரப், சிறுகதைத்துறையின் செல்நெறியை கலாநிதி ஹனிபா இஸ்மாயில், பெண் எழுத்துக்களின் செல்நெறியை கலாநிதி ம. நதிறா, இலக்கியத்தில் நவீன தொழில்நுட்பத்தின் செல்வாக்கினை கணிமையாளர் மு.மயூரன், திறனாய்வுத்துறையின் செல்நெறியை விரிவுரையாளர் எம். அப்துல் ரஸாக், கவிதைத் துறையின் செல்நெறியை கலாநிதி த.மேகராசா, நாவல்துறையின் செல்நெறியை கலாநிதி எம். சத்தார் பிர்தௌஸ் ஆய்வுகளாக சமர்ப்பித்தனர். ஆய்வுப்பகிர்வின் நோக்கினை ஜப்பான் கக்கயின் பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார்.

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறையுடன் இணைந்து நடத்திய ஆய்வரங்கம்

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்தில் உள்ள எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் மற்றும் மாவட்ட, பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், துறை சார்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவ மாணவிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் கலை நிகழ்ச்சிகளின் இறுதியில் நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுடன் கருத்து பரிமாற்றமும் இடம்பெற்றது.

இவ்வாய்வரங்கை நிகழ்த்தியவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.







**எம்.எப்.எம்.நவாஸ்...**
*(திராய்க்கேணி தினகரன் நிருபர்)*

# கல்விப்புலத்தில் என்றும் மறவாத ஆளுமை அஷ்ஷெய்க் எம்.எஸ் அப்துல் பாரி (நளீமி)

பேராதனை பல்கலைக்கழகத்தில் சுமார் மூன்று தசாப்தங்களாக அரபு மற்றும் இஸ்லாமிய நாகரிக துறையின் முதுகெலும்பாகவும், பாடசாலை கலைத்திட்டத்தில் இஸ்லாம் பாடவிதானத்தில் முக்கிய பங்காளியாகவும் ஆலோசகராகவும், அஹதியா பாடசாலைக்கான பாடத்திட்ட தயாரித்தலில் பிரதம ஆலோசகர்களில் ஒருவராகவும் இருந்த மர்ஹூம் அஷ்ஷெய்க் எம். எஸ். அப்துல் பாரி காலமான தினம் இன்றாகும்.

அன்னார் எட்டியாந்தோட்டை, கராகொடை கிராமத்தில் 1963 ஏப்ரல் 20 ஆம் திகதி எம். எச்.எம். சனூன் ஆசிரியர்_உம்மு ஆயிஷா தம்பதிகளின் புதல்வராக இவர் பிறந்தார். 1990 ஆம் ஆண்டு திஹாரியைச் சேர்ந்த கன்சுல் பாஹிமாவுடன் திருமண பந்தத்தில் இணைந்தார்.

ஒரு மனிதன் குடும்ப உறவினர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக அவரைக் குறிப்பிட முடியும்.

தனது ஆரம்பக் கல்வியை கராகொடை முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும், அநுராதபுரம் கஹடகஸ்திகிளிய முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் பயின்றார். சாதாரண தர பரீட்சைக்குப் பின்பு 1979 இல் ஜாமிஆ நளீமியா கலாபீடத்திற்கு தெரிவானார். அவர் நிறைய ஆக்கங்களை எழுதி இருக்கின்றார்.



ஏழு வருடங்கள் ஜாமிஆ நளீமியாவின் கற்கைநெறியை முதன்மைச் சித்தியுடன் மிகச்சிறப்பாக பூர்த்தி செய்த இவரை ஜாமிஆ நளீமியா நிர்வாகம் விரிவுரையாளராக நியமித்தது. சுமார் ஏழு வருடங்கள் ஜாமிஆவின் விரிவுரையாளராக இருந்த அவர் 1993 இல் பேராதனை பல்கலைக் கழகத்தின் அரபு இஸ்லாமிய நாகரிகத்துறைக்கு விரிவுரையாளராக தேர்வானார். அது மாத்திரமல்லாமல் அல்ஆலிம் பரீட்சை, தர்மாச்சாரியா பரீட்சை, அஹதியா பரீட்சை என இலங்கை முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசாங்க பரீட்சைகளின் முக்கிய கதாபாத்திரமாக அவர் காணப்பட்டார்.

## இன்று நினைவுதினம்

தேசிய கல்வி நிறுவனத்தில் இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய நாகரிக பாடங்களின் கலைத்திட்ட வடிவமைப்பில் முக்கிய ஆலோசராக இறுதிவரை கடமையாற்றினார். தரம் 01 முதல் 13 வரை இஸ்லாம் பாடவிதானத்தின் முதன்மை ஆலோசகர்களில் ஒருவராக கடமையாற்றினார். 2023 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்படவிருந்த கல்வி கலைத்திட்ட மறுசீரமைப்பில் இஸ்லாம் பாடவிதானத்திற்கும் அதே பங்களிப்பை ஆற்றினார்.

கேகாலை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு என்ற வரலாற்றை ஆவணப்படுத்தும் புத்தகத்தின் ஆசிரியர்களுள் ஒருவராகவும் கடமையாற்றினார். ஜாமிஆ நளீமியாவின் பழைய மாணவர் அமைப்பான ராபிததுன் நளீமிய்யீன் அமைப்பின் தலைவராகவும் சேவையாற்றினார். இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி, இலங்கை கல்வி வரலாற்றில் சமய பாட கலைத்திட்ட வளர்ச்சிப் போக்கு சம்பந்தமான ஒரு ஆய்வறிக்கை மற்றும் கேகாலை மாவட்டத்தில் 'துன்கோரள' என்று அழைக்கப்படுகின்ற பிரதேசத்தின் முஸ்லிம்களின் வரலாறு சம்பந்தமாகவும் மூன்று ஆய்வுகளை அவர் மேற்கொண்டு வந்திருந்த சமயம் அன்னார் காலமானார்.

இன்று இவரிடம் கற்ற பல மாணவர்கள் பெரும் பதவிகளிலும் சமூக பொறுப்புக்களிலும் காணப்படுகின்றனர்.

*அஷ்ஷெய்க்*
**ஹுஸ்னி ஹுஸைர்....**
*(நளீமி) எட்டியாந்தோட்டை*

# தண்டியடிகள் நாயனார்



143

“நாட்டமிகு தண்டிக்கும் அடியேன்” – திருத்தொண்டத் திருத்தொகை

தண்டியடிகள் நாயனார் என்பவர் சைவ சமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவார் . இவர் திருவாரூரில் பிறந்த பெரும் பேறுடையவர் . இவர் ‘இறைவன் திருவடிகளை மனத்துட் கொண்டு நோக்கும் அகநோக்கு ஒன்றே போதும்’ என்ற கருத்தினை வலியுறுத்துவது போன்று, பிறக்கும் போதே பார்வையை இழந்திருந்தார். தண்டியடிகள் திருவாரூர்ப் பூங்கோயிலில் தேவாசிரியமண்டபத்தினுள் அடியார்களை வணங்கிவிட்டு, இறைவன் முன் வலம் வந்து, காதலாகி, நமச்சிவாய அன்புடையவராய்த் திருத்தொண்டுகள் பல செய்து வந்தார்.

ஆரூர்த் திருக்கோயிலின் மேற்புறத்திலுள்ள திருக்குளம் பக்கம் எங்கும் சமணர்களின் பாழிகள் பெருகிக் குளத்தின் இடம் வரவரக் குறைவடைந்தது. இதனை அறிந்த தண்டியடிகள், திருக்குளத்தை முன்போற் பெருகத்தோண்ட எண்ணினார். குளத்தில் இறங்கி மண்ணை வெட்டியெடுத்துக் கயிற்றைப் பற்றி ஏறிக் கரையிலே போடுவாராயினார். இவ்வாறு நாள்தோறும் தண்டியடிகள் குளத்தினைத் தோண்டக் கண்டு சமணர்கள் பொறாது அவரை அடைந்து ‘மண்ணைத்தோண்டினால் சிற்றுயிர்கள் இறந்துவிடும், வருத்தல் வேண்டாம்’ என்றனர். அதுகேட்ட தண்டியடிகள் ‘திருவில்லாதவர்களே,



கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# மலைக்குச் செல்ல மாலை

"மலைக்குச் செல்ல மாலை போடுவது என்பது சாதாரணமானது அல்ல. மன்னருக்கு கிரீடம் எப்படியோ, முத்திரைக் கணையாழி எப்படி தனி அடையாளமோ, சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் அடையாளம்... நாம் அணியும் மாலைதான். நாம் மாலையை எப்போது போட்டுக்கொள்கிறோமோ, அப்போதே மாலையுடன் சேர்ந்து ஐயப்பனும் நம்மோடு இருக்கத் துவங்கிவிடுகிறார்.

ஆக, மாலை வடிவில் சாட்ஷாத் ஐயப்பனே நம்முடன் இருக்கிறார் என்பதை, பக்தர்கள் உணரவேண்டும். நாம் என்ன சாப்பிடுகிறோமோ அதைத்தான் ஐயப்பனும் சாப்பிடுகிறார். இதையெல்லாம் சரியாகப் புரிந்து, உணர்ந்து நடந்தால், கெட்ட எண்ணங்கள் நமக்குள் வராது. துர் குணங்கள் அடியோடு ஒழிந்துவிடும்.

இன்னொரு விஷயம்... முதல் முறை உபயோகித்த மாலையையே ஒவ்வொரு வருடமும் பயன்படுத்துங்கள். ‘மாலை அறுந்துருச்சே... என்ன செய்றது’ என்று கேட்கிறார்கள் சிலர். அதையே சரிசெய்து, போட்டுக்கொள்ளுங்கள். அந்த மாலையில் சாந்நித்தியமானது குடிகொண்டிருக்கிறது. அது... ஐயப்பனின் சாந்நித்தியம்’’ என்று தெரிவித்துள்ளார் நம்பியார் குருசாமி.

சில சூட்சும சக்திகளை நாம் உணருவதே இல்லை. ஐயப்ப விரதத்துக்காக நாம் அணிந்து கொள்ளும் அந்த துளசி மாலையில், சூட்சும ரூபமாய் ஐயப்ப சுவாமி உட்கார்ந்து கொள்கிறார். அவர் நம் பேச்சைக் கேட்கிறார். நம் செயல்களைப் பார்க்கிறார். நம் குணங்களை முழுவதுமாகப் புரிந்து கொள்கிறார். நம் கஷ்டங்களையும் துக்கங்களையும் அறிந்து கொள்கிறார். அவற்றில் இருந்து அரணென நம்மைக் காத்து, காபந்து செய்து அருள்கிறார்.

கல்பாத்தி ஸ்ரீநிவாச ஐயர் என்கிற சாமி அண்ணாவுக்கு, தன் சூட்சுமத்தை உணர்த்த திருவுளம் கொண்டார் ஐயப்ப சுவாமி. அவர் தம்பி, தீவிர ஐயப்ப பக்தர். இவரும் பக்திமான்தான். ஆனால்... ஒருநாள்... அண்ணனுக்கும் தம்பிக்கும் ஏதோவொரு சண்டை. இரண்டுபேரும் வார்த்தையால் முட்டிக்கொண்டார்கள்.

வார்த்தைகள் தடித்துக் கொண்டே வந்து விழுந்தன. அப்படி தீவிரமடைந்த போது, சாமி அண்ணா, கோபமாகவும் ஆவேசமாகவும் தம்பியிடம்... ‘‘பதில் சொல்லு. இதுக்கு உனக்கு பதில் தெரியலேன்னா, உன் ஐயப்பனாவது பதில் சொல்லுவானா. அவனுக்காவது பதில் தெரியுமா?’’ என்று கேட்டார். ஆனால் தம்பி இதற்கு பதிலேதும் சொல்லவில்லை. ஐயப்ப சுவாமிதான் பதில் சொன்னார். அன்றிரவு... சாமி அண்ணாவின் கனவில் ஐயப்பன் தோன்றினான். ‘மலையேறி வா’ என்று அசரீரி போல் கேட்க... திடுக்கிட்டு எழுந்தார். ‘மலையேறி வா...’ எனும் வாசகம் திரும்பத் திரும்ப எதிரொலித்தது. வேதங்களையும் யோக சாதகங்களையும் கற்றறிந்த சாமி அண்ணாவால், இந்த அழைப்பை உள்வாங்கிக் கொள்ள முடிந்தது.

வாழ்வில், முதன்முறையாக சபரிமலை யாத்திரையை மேற்கொண்டார் சாமி அண்ணா.சத்தியம்தான் கடவுள். சத்தியம்தான் பக்தி. சத்தியம்தான் மனிதம். சத்தியம்தான் உலகம். சத்தியம்தான் வாழ்க்கை. சத்தியத்தை உணர, மார்க்கங்கள் பல உண்டு. நிதர்சனமான அந்தச் சத்தியத்தை, சந்நிதானத்தில் தரிசித்தார் சாமி அண்ணா. ஐயனைக் கண்டதும் நெக்குருகிப் போனார்.

நெகிழ்ந்து போனார். அவரிடம் இருந்த கொஞ்சநஞ்ச கோபமும் ஆவேசமும் அவரில் இருந்து, கரைந்து, வழிந்து, திரவக்கரைசலென அவரை விட்டு அகன்றது. அந்த ஐயப்ப தரிசனம்தான் அவரை அடுத்தகட்டத்துக்கு அழைத்துச் சென்றது.‘இனி நீயே என் தெய்வம்’ என்று சொல்லிச் சொல்லி உருகினார். ‘உன்னைத் தரிசிக்க வருவதே என் வேலை’ என்று சொல்லிப் பூரித்தார். ‘உனக்குத் தொண்டு செய்வதற்காகவே இந்த வாழ்க்கை; இந்தப் பிறவி’ என உறுதி கொண்டார்.



**சைவ மஞ்சரி**



கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு திருக்கார்த்திகை தீபம் வெகுவிமர்சையாக நடைபெற்றது.இராஜராஜேஸ்வரி, விசாலாட்சி அம்பாளுக்கும் சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெறுவதையும். வசந்த மண்டபத்தில் ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கு விஷேட அலங்கார பூஜை நடைபெற்று சொக்கப்பாணை எரித்தல் உற்சவத்திற்கு செல்வதையும், கொளுத்துதல் நடைபெறுவதையும் காணலாம்.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 65



பசிக்கு உணவு, உடம்பை மறைப்பதற்குத் துணி, என்று வாழ்ந்து சுகபோகங்களை துறந்தால், முக்திக்கான வாழ்க்கை நம் எதிரில் நிற்கும். ஆண்டவன் உலகை படைத்த நாள் முதல், இன்றளவும் ஒவ்வொரு மேன்மையானவரின் சரித்திரம் இதுவே. சுகபோகங்களை துறந்து, தியாக வாழ்க்கையை மேற்கொள்வது மேன்மையை அடைவதற்கான வழியாகும். ஆத்ம முன்னேற்றத்திற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும்.

தீர்த்தயாத்திரை மூலமோ, விரதம் இருப்பதாலோ, யோகப் பயிற்சி, மூச்சு பயிற்சி செய்வதாலோ, மனம், உடல் ஆகியவை வலுப் பெறுமே தவிர, கடவுளை அடைய முடியாது. கடவுளை வயப்படுத்த, மன உறுதி, மனக் கட்டுப்பாடுடன் கூடிய, செயலில் வெற்றி கொள்ளத் தக்க, சாதனாவின் மூலம் மட்டுமே இயலும். தனிமனித வாழ்வில் பிறருக்கு முன் உதாரணமாக வாழ்ந்தவர்கள் போற்றத் தகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமே உலகத்தில் மக்கள் நலம் உண்டாகியுள்ளது. எனவே நாம் மன பலம் படைத்தவர்களாகவும் ஆத்ம பலம் படைத்தவர்களாகவும் மாறுவோமாக.

இன்றைய உலகம் மூடத்தனம் மற்றும் மூட நம்பிக்கை என்னும் சங்கிலிகளால் இறுக்கப்பட்டுள்ளது. இச்சங்கிலியில் கட்டுப்பட்டு கிடக்கும் மாந்தரை நினைத்தால் என் மனம் துடிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் துன்பத்திற்கும், சமுதாயத்தின் இந்த அவல நிலைக்கும் மக்களின் மூட நம்பிக்கை தான் காரணமென, கிழக்கில் உதிக்கும் சூரியன் போல் தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிகிறது.

உலகில் எங்கிருந்து ஒளி பிறக்கும்? தியாகத்தினால் மட்டுமே இது நிறைவேறும். தியாக உள்ளம் கொண்ட வீரன் மற்றவர்க்கு முன்னுதாரணமாய்த் திகழ்கிறான். பின்னர் பலரும் அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றனர். வெளிச்சத்தை உருவாக்கும் இந்த தியாக வீரர்களின் செயல், ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. இப்பூவுலகில் பற்பல வீரர்கள், உத்தமர்கள், புனிதர்கள், மஹாத்மாக்கள் தோன்றியுள்ளனர்.

அவர்கள் யாவரும் தியாக வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். நாம் நம் சுகபோகங்ளை துறந்தால் தான், மற்றவர்களுக்கு சுகங்களை நாம் வழங்க முடியும். அதற்கான வழியைக் காட்ட முடியும். உண்மையான அன்பு எல்லையில்லா கருணை கொண்ட இதயங்கள் துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள், எந்தளவிற்கு இன்றைய நாளில் தேவைப் படுகிறதோ, அந்தளவிற்கு வேறு எந்த காலத்திலும் தேவைப்பட்டதில்லை.

# சர்வதேச கீதா மஹோத்சவ வீடியோ பேச்சுப் போட்டி

சுவாமி விவேகானந்தா கலாசார நிலையமும், இந்திய உயர் ஸ்தானிகராலயமும் சர்வதேச கிருஷ்ண பக்திக் கழக (ISKCON Sri lanka) த்துடன் இணைந்து சர்வதேச கீதா மஹோத்சவ வீடியோ பேச்சுப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளன. மூன்று பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூபா 50ஆயிரம், 30ஆயிரம், 15ஆயிரம் பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும். போட்டி விபரம் வருமாறு: 17–21 வயதினர் சமகாலத்தில் பகவத்கீதையின் பொருத்தம் பற்றியும்

13–16 வயதினர் பகவத் கீதையின் புரிதல் பற்றியும் இரண்டு நிமிடங்கள் பேச வேண்டும். 8–12 வயதினர் பகவத்கீதை சுலோகங்களை இரண்டு நிமிடங்கள் ஓத வேண்டும். போட்டி முடிவு திகதி டிசம்பர் 10 பரிசுகள் டிசம்பர் 22ஆம் திகதி சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் நடைபெறும் கீதா ஜயந்தி விழாவில்வைத்து வழங்கப்படும். போட்டிக்கான வீடியோ பதிவுகளை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி: competitionsvcccmb@gmail.com



புத்தளம் ,முந்தல் பாலையடி அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் (29) வருஷாபிஷேகம் நடைபெற்றது. இதனை உடப்பு,ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு கலாநிதி சிவநேசக் குருக்கள் ஆரம்பித்து வைத்தார். இதன் போது பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (உடப்பு குறூப் நிருபர்)

# அறநெறி அறிவுநொடி



**முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

*19445. க்ஷேத்திரம் என போற்றப்படுவது எது?*

**மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்பாக அமையும் கோயில்**

*19446. ஒரு கோயிலில் எது முக்கியம்?*

**மூல மூர்த்தியாக விளங்கும் தெய்வம்**

*19447. மூல மூர்த்தியாக விளங்கும் தெய்வம் எப்படி முக்கியமோ, அதுபோலவே வேறு என்ன முக்கியம்?*

**தீர்த்தம் (திருக்குளம்),**

*19447. வேறு என்ன முக்கியம்?*

**தலவிருட்சம்**

*19448. பூக்குழி இறங்குவது எந்த தெய்வத்துக்கு?* **அம்மனுக்கு**

*19449. பூக்குழி இறங்குவது (தீ மிதித்தல்) எப்படி சாத்தியமாகிறது?*

**நம்பிக்கையும் பக்தியும் முழுமையாக இருந்தால் சாத்தியம் தான்.**

*19450. இந்நிலையில் இருப்பவர்களை என்னவென்று அழைப்பார்கள்?*

**மருளாளிகள் என்பர்.**

*19451. இவர்களை ஏன் மருளாளிகள் என்று குறிப்பிடுகிறார்கள்?*

**பக்தி மிகுதியால் ஏற்படும் பரவச நிலையை மருட்சி என்று அழகிய தமிழ்ச்சொல் குறிப்பிடுகிறது. மருட்சி உடையவர்கள் மருளாளிகள்.**

*19452. தீ மிதித்தலை ஏன் பூ மிதித்தல் என்று கூறுகிறார்கள்?*

**இவர்களுக்குத் தீயும், பூவும் ஒன்றாகத் தெரியும். இதனால் தான் தீ மிதித்தலை பூ மிதித்தல் என்று கூறுகிறார்கள்.**

*19453. சுமங்கலிகளை வழியனுப்பும்போது குங்குமம் கொடுக்க வேண்டுமா?*

**அவசியம் கொடுக்க வேண்டும்.**

*19454. இவ்வாறு செய்வது ஏன்?*

**சுமங்கலிகள் நம் வீட்டிற்கு வந்தால் அம்பாளே வந்திருப்பதாக எண்ண வேண்டும். குங்குமம், ரவிக்கைத்துணி, வெற்றிலைபாக்கு, மஞ்சள் கிழங்கு ஆகியவற்றை வழியனுப்பும்போது கொடுத்தால் அம்பாளின் அருள் கிடைக்கும்.**

*19455. வந்திருப்பவர் நம்மை விட வயதில் சிறியவராக இருந்தால் என்ன செய்ய வேண்டும்?*

**வாழ்த்தி அனுப்பவேண்டும்.**

*19456. பெரியவராக இருந்தால் என்ன செய்ய வேண்டும்?*

**வாழ்த்துப் பெற்றும் குங்குமம் கொடுக்க வேண்டும்.**

*19457. இவ்வாறு ஏன் செய்கிறார்கள்?*

**தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிட்ட**

*19458. கடவுளின் படம் அல்லது சிலைஎது வழிபாட்டிற்கு உகந்தது?*

**மனதில் இறைவனை நிறுத்தி வழிபடுவது மிக உயர்ந்தது. இரண்டாவது சிலை, அடுத்தது படம்.**

*19459. உருவச்சிலை வழிபாட்டில் என்னென்ன செய்யவேண்டும்?*

**அபிஷேகம், நைவேத்யம் ஆகிய கிரியைகள் அதிகம்.**

*19460. பட வழிபாடு எவ்வாறானது?*

**எளிமையானது. தினமும் புஷ்பம் சாத்தி, பழம், பால், கற்கண்டு நிவேதனம் செய்தால் போதும்.**

*19461. யாகத்தீயில் பட்டு வஸ்திரம், பழவகைகள், நாணயம் இவைகளை இடுவதால் என்ன பயன்?*

**இந்தப் பொருட்கள் ஆகுதிப் புகையாக சூரியனைச் சென்றடைந்து மேகமாக மாறி மழையாக நமக்குக் கிடைக்கிறது. யாகத்தில் இட்ட பொருட்கள் பல்லாயிரம் மடங்காக விளைகிறது என்கிறது தர்ம சாஸ்திர ஸ்லோகம்.**



கொழும்பு கணபதி இந்து மகா வித்தியாலயத்தின் வாணி விழா வெள்ளிக்கிழமை காலை அதிபர் திருமதி.வீ.சாந்தினி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனையும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் பாலசுரேஷையும் சிறப்பு அதிதிகளையும் வரவேற்று அழைத்துச் செல்வதையும், அதிதிகளை ஆசிரியர் தவச்செல்வன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் வாணி விழா மலரான ‘கணதீபம் 7’இன் முதல் பிரதியை அதிபர் வழங்குவதையும் பிரதி அதிபர் திருமதி ஜீ. கிருஷ்ணவதனி அருகில் நிற்பதையும் விழாவில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி ரணில் பிரேசில் ஜனாதிபதி சந்திப்பு



டுபாயில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடான COP28 க்கு இணையாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலாடா சில்வா ஆகியோருக்கிடையிலான முக்கிய சந்திப்பு (02) நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது ஜனாதிபதி விக்கிரமசிங்க, வெப்ப வலய நாடுகளான இலங்கை மற்றும் பிரேசில் ஆகிய இரு நாடுகளையும் பாதிக்ககூடிய விடயங்களுக்குத் தீர்வு காண ஒன்றுபடுமாறும் கேட்டுக் கொண்டார். அத்தோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலாடா சில்வாவை இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்ற கௌரவத்தை பாதுகாக்க

# சிறப்புரிமைக் குழுவின் தீர்மானத்தை சகலரும் ஏற்றுக் கொள்வது அவசியம்

## பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச சபையில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் சகல உறுப்பினர்களும் சிறப்புரிமைக் குழுவின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வது அவசியமென பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கிடையில் ஏற்பட்ட குழப்பகரமான சம்பவம் தொடர்பில் தமது தலைமையிலான குழு, பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே செயற்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் சம்பிரதாயம் மற்றும் நிலையியற் கட்டளைக்கு இணங்க பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவின் தீர்மானத்தை அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொள்வது முக்கியமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரின் மோசமான செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவின் தீர்மானத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று முன்தினம் சபையில் அறிவித்த சந்தர்ப்பத்திலேயே பிரதி சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்

## ( 04. 12. 2023 )



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பணிகளை தாமதம் இல்லாமல் முடிக்க பாடுபடுவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.



**ரிஷபம்:**
கடன் தொல்லை குறையும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத தடைகள் ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் பல தடைகளை சந்திக்க வேண்டி இருந்தாலும் முடிவில் வெற்றி உங்கள் பக்கமே.



**மிதுனம்:**
நினைப்பதை தள்ளிபோடுவது நல்லது. உத்தியோகத்தில் வேலை பளுவால் மனசலிப்பு உண்டாகும். குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.



**கடகம்:**
புதிய ஆர்டர்கள் கிடைத்தாலும் அதை உடனடியாக நிறைவேற்ற பாடுபட வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நன்மை தரும்.



**சிம்மம்:**
தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும்.



**கன்னி:**
தொழில் உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் திருப்திகரமான நிலை காணப்படும்.



**துலாம்:**
தொழில் உத்தியோகத்தில் இருப்பவர்கள் மனதிருப்தி காண்பார்கள். அலுவலகம் தொடர்பான பணிகள் சாதகமாக நடக்கும்.



**விருச்சிகம்:**
மனதில் இருந்த கவலைகள் நீங்கி அலுவலக வேலைகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத வளர்ச்சி காண்பார்கள்.



**தனுசு:**
முயற்சிகள் சாதகமான பலனை தரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கட்டளை இடும் பதவிகள் கிடைக்க பெறுவார்கள்.



**மகரம்:**
கடன் விவகாரங்கள் காலதாமதமாகும். வர வேண்டிய பணம் தாமதப்படலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வேகம் இருக்காது.



**கும்பம்:**
பணவரத்தும் நிதானமாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யும் இடத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதும் நல்லது.



**மீனம்:**
தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. சகோதரர் வழியில் மனவருத்தம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் கடுமையான உழைப்பிற்கு பின் நல்ல பலன் கிடைக்கும்.



## உளுந்து இறக்குமதி...

எடுக்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வர்த்தக, கைத்தொழில் அமைச்சுகள் மீதான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தின் போது, இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர்,

"நாட்டில் 400 அல்லது 450 ரூபாவுக்கு விற்பனை செய்யக்கூடிய உளுந்து மற்றும் பாசிப்பயிறு ஒரு கிலோகிராம் 1,500 ரூபாவிலிருந்து 1,600 ரூபாவரை விற்பனையாகின்றன. துறைமுகத்தினூடாகவே இவை நாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன. எனினும், அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய வரியும் இதனால் கிடைப்பதில்லை. உள்ளூர் விவசாயிகளும் பாதுகாக்கப்படுவதில்லை. கடந்த 2020ஆம் ஆண்டு முதல் இவற்றுக்கான இறக்குமதி நிறுத்தப்பட்டது. இந் நிலையில், இத்தடையை நீக்க வேண்டுமென்று நாம் ஆலோசிக்கிறோம். அரசாங்கத்துக்கு வரியைப் பெற்றுக் கொண்டு அவற்றை இறக்குமதி செய்ய வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு.

தமிழ் மக்களின் முக்கிய உணவான உளுந்து விலை தொடர்பாக பெரும் பிரச்சினை காணப்படுகிறது.ஒருவார காலத்தினுள் இது தொடர்பாக உரிய தீர்மானம் எடுக்கப்படுமென்பதை நான் உறுதியாக தெரிவிக்கின்றேன்.

நிதி அமைச்சே இறக்குமதிக்கான தடையை விதித்திருந்தது. அந்த வகையில், நிதி அமைச்சு மற்றும் விவசாய அமைச்சுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தி, ஒருவார காலத்தினுள் உரிய தீர்வு எட்டப்படும்" என்றார்.

## மீதமுள்ள அரசியல் கைதிகளையும்...

பெரும் ஆர்வத்துடனும் மனிதாபிமானத்துடனும் நீதியமைச்சர் செயற்பட்டு நடவடிக்கை இதற்கு எடுத்துள்ளமைக்கு பாராட்டு தெரிவிப்பதுடன் மீதியாக உள்ள 14 பேரையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சபையில் அவர் கேட்டுக் கொண்டார்.

வரவு செலவுத் திட்டத்தில் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கான செலவின தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே, தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படும் நிலையில் புதிதாக பலர் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைதாகி வருவதை குறிப்பிட வேண்டும்.யுத்தம் நிறைவடைந்த போது 05 வயதாக இருந்த சிறுவனுக்கு கூட புலிகளுடன் தொடர்பு உள்ளதாக் குறிப்பிட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். விஜேதாச ராஜபக்ஸ நீதியமைச்சராக பொறுப்பேற்றபோது தமிழ் அரசியல் கைதிகளாக சுமார் 70 பேர் சிறைகளில் தண்டனை அனுபவித்து வந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை 14 ஆக குறை`துள்ளது. இந்த அரசியல் கைதிகள் தொடர்பில் ஜனாதிபதி தொடர்ந்து பல கலந்துரையாடல்களை நடத்தினார். அதில் நீதியமைச்சரும் கலந்து கொண்டிருந்தார்.

அப்போது இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற முடிவு எட்டப்பட்டது. அந்த முடிவில் ஆர்வத்துடனும் மனிதாபிமானத்துடனும் செயற்பட்டவர் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச.

அந்த வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் மிகுதியாகவுள்ள 14 பேரையும் விடுவிப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக அவர்களின் உறவுகள் மற்றும் தமிழ் மக்கள் சார்பில் வேண்டுகோளை முன் வைப்பதோடு நீதியமைச்சருக்கு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இத்தாலி செல்ல முயன்ற...

31 வயதுடைய பெண். மற்றைய யுவதி யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 26 வயதுடையவரெனவும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் இருவரும் சமர்ப்பித்த ஆவணங்களில் சந்தேகமடைந்த கட்டார் எயார் வேஸ் அதிகாரிகள், இருவரையும் விமான நிலைய குடிவரவு மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

நடத்தப்பட்ட விசாரணையில், இந்த இத்தாலிய விசாக்கள் போலியான தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை என்பது தெரியவந்துள்ளது.

## மனைவி, பிள்ளைகளை...

மணியளவில் கைத்துப்பாக்கிகள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இந்த ஆயுதக் கும்பல், முதலில் அங்கிருந்த தொழிலதிபரையும் , அவரது மனைவி உட்பட குடும்பத்தினரையும் பணயக் கைதிகளாகப் பிடித்தனர்.

இவ்வாறு, வர்த்தகரின் மனைவி மற்றும் பிள்ளைகளை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த ஆயுதக் குழுவினர், அவர்களை கொலை செய்யப்போவதாக மிரட்டியதுடன், வீட்டிலிருந்த பாதுகாப்பு பெட்டகத்தை பலாத்காரமாக திறந்துள்ளதாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, வீட்டின் பாதுகாப்பு பெட்டகத்திலிருந்த சுமார் 70 பவுண் தங்க நகைகள் மற்றும் 30 இலட்சம் ரூபா பணம் என்ப வற்றை ஆயுதக்குழுவினர் கொள்ளையடித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை மற்றும் கற்பிட்டி பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதியின் யோசனைக்கு...

மட்டுப்படுத்துவதற்கு அவசியமான ஒன்றுபட்ட முயற்சிக்காக அனைத்து தரப்புக்களையும் ஒன்றுசேர்க்கும் அர்ப்பணிப்புக்கான முதற்கட்டச் செயற்பாடாகுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இது, அரசாங்களால் மாத்திரம் முன்னெடுக்ககூடிய செயற்பாடு அல்ல. இதற்கு தனியார் துறையின் பங்களிப்பு மிகவும் அத்தியாவசியமானது. நட்டம் மற்றும் இழப்பீட்டுக்கான நிதியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விடவும் அதிகமான தொகை இஸ்ரேல் மற்றும் காஸா எல்லைகளில் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ள செலவிடப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காலநிலை மாற்றங்களுக்காக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்துவதற்கான நிலையான தீர்வாகவே காலநிலை நீதிமன்றத்தை முன்மொழிந்திருப்பதால், அதனுடன் இணைந்துகொள்ளுமாறு சகலருக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி, இலங்கை முன்மொழிந்திருக்கும் வேலைத் திட்டத்தை முன்னோக்கி கொண்டுச் செல்வதற்கான பங்குதாரர்களுடன் இணைந்துகொள்ளுமாறு ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் வேலைத்திட்டம், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம், ஐரோப்பிய சங்கத்திற்கும் அழைப்பு விடுத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் வேலைத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒன்கர் அண்டர்சன், காலநிலை அனர்த்தங்களுக்கு எதிராக போராடுவதற்கு அவசியமான செயற்பாடுகள் மற்றும் தற்போதைய முயற்சிகளில் காணப்படும் குறைப்பாடுகள் தொடர்பிலும் விளக்கமளித்தார். காலநிலை அனர்த்தங்கள் தொடர்பான பிரச்சினைகளை மட்டுப்படுத்துவதற்காக அனைத்து நாடுகளையும் ஒன்றிணைக்கும் பெரும் சக்தியாக காலநிலை நீதிமன்றம் செயற்படும் என்றும் அதனை வரவேற்பதாகவும் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## வெளிநாட்டில் விவாகரத்து...

ஹரேந்திர சில்வா என்ற நபரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவில் திருமணப் பதிவாளர் நாயகம் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர் பூர்ணா செவ்வந்தி நாகசிங்க என்பவரை 2010 ஆம் ஆண்டு இந்நாட்டில் திருமணம் செய்து கொண்டு, திருமணத்துக்குப் பிறகு இருவரும் இங்கிலாந்தில் நிரந்தரமாக வசிக்கச்சென்றனர். பின்னர் அங்கு திருமணம் முறிந்து, மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பூர்ணா செவ்வந்தி நாகசிங்கவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, மனுதாரரை விவாகரத்து செய்வது தொடர்பாக இங்கிலாந்தில் உள்ள கிங்டன் குடும்பநல நீதிமன்றத்தில் ஏற்கனவே விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவித்தார். அதன்படி, கடுவெல மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து வழக்கை வாபஸ் பெற மனுதாரர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பின்னர் இது தொடர்பான விவாகரத்து இங்கிலாந்தில் உள்ள கிரிஸ்டல் குடும்ப நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது மற்றும் அது தொடர்பான விவாகரத்து சான்றிதழ் 2018 இல் பெறப்பட்டது.

பின்னர் மனுதாரர் 2019 இல் தாய்லாந்தின் பெங்கொக்கில் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.

2021 ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் உள்ள கிங்டன் குடும்ப நீதிமன்றம் வழங்கிய விவாகரத்தை ஏற்குமாறு இந்த நாட்டின் பதிவாளர் நாயகத்தை மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆனால் பதிவாளர் நாயகம் விவாகரத்தை மறுத்துள்ளதுடன், மனுதாரர் இந்த நாட்டிலுள்ள பொருத்தமான நீதிமன்றத்தில் விவாகரத்து பெற வேண்டுமென கூறியுள்ளார்.

பதிவாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு எதிராக விவாகரத்து வழங்குமாறு கோரி மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த ரிட் மனுவை தாக்கல் செய்தார்.

மனு மீதான விசாரணையின் முடிவில், இதுதொடர்பான முடிவை அறிவிக்கும் போது, வெளிநாட்டில் நடந்த விவாகரத்து, இந்த நாட்டிலும் செல்லுபடியாகும் விவாகரத்தாக ஏற்கப்படும் என நீதிபதிகள் குழாம் குறிப்பிட்டனர்.

விவாகரத்து சட்டத்தின் கீழ் உரிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ள போதிலும் அந்த நீதிமன்றம் இலங்கையில் அமைந்துள்ள நீதிமன்றம் மாத்திரம் அல்ல என மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணா சுட்டிக்காட்டியுள்ளார்.

## காலநிலை மாற்றத்தை எதிர்த்து...

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் (BMGF) இணைத் தலைவர் பில்கேட்ஸ்க்கும் இடையிலான சந்திப்பு நேற்று (03) நடைபெற்றது. காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் உலகளாவிய சவால் மற்றும் வெப்பவலயப் பிராந்தியத்தில் இலங்கையின் பங்களிப்பை மேம்படுத்துவது குறித்தும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இலங்கையில், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பான வேலைத் திட்டங்களுக்கு பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பு ஏற்கனவே தமது பங்களிப்ப வழங்கி வருவதாகவும், எதிர்காலத்தில் இந்த ஒத்துழைப்பு மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும் பில்கேட்ஸ் தெரிவித்தார். இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் மற்றும் விவசாயத்திற்கான தரவுக் கட்டமைப்பை நிறுவுவதற்கான முயற்சிகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியில் இலங்கையுடன் ஒத்துழைப்பை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் பில் கேட்ஸ் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டு அர்ப்பணிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் COP28 மாநாட்டில் இலங்கை முன்வைத்த முன்மொழிவுகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பில்கேட்ஸிடம் தெளிவுபடுத்தியதுடன், உலகிற்கே சவாலாக மாறியுள்ள சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சர்வதேச முயற்சிகளில் பயனுள்ள பங்கை வகிக்க இலங்கை தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பாராளுமன்றத்தில் தன்னிச்சையாக...

பாராளுமன்றம் கூடும் போது அது நாடக அரங்கம் போல் காட்சியளிப்பதாகவும் இது போல் செயற்படுத்த முடியாதெனவும் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் 27/ 2 இல் கேள்விகளை எழுப்பும் போது, நிலையியற் கட்டளையை துஷ்பிரயோகம் செய்துள்ளார். இது தொடர்பாக சபாநாயகர் உரிய தீர்மானம் எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். பாராளுமன்றத்தில் (01) எதிர்க்கட்சித் தலைவர் 27/2 இல் கேள்விகளை எழுப்பிய போது, அக் கேள்விக்கு மேலதிகமாக மேலும் கேள்விகளை எழுப்பினார். இதன்போது, அவர் எழுப்பிய எந்தக் கேள்விக்கு பதில் கூற வேண்டுமென்று பதில் கூறுவதற்கு தயாராகவிருந்த இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர, சபாநாயகரிடம் வினவினார். இந்நிலையில், சபையில் ஏற்பட்ட சர்ச்சையிலேயே , பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்த பிரதமர், 27/2 இன் கீழ் கேள்விகளை எழுப்பும் போது, அதற்கு மேலதிகமான கேள்வியையும் எழுப்ப முடியுமாவென்று கேள்வி எழுப்பியதுடன், அது தொடர்பாக உத்தரவொன்றை சபாநாயகர் பிறப்பிக்க வேண்டுமென்றும் நாளை முதல் அது நடைமுறைக்கு வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக தொடர்ந்து தெரிவித்த பிரதமர், சபாநாயகருக்கோ அல்லது எதிர்க்கட்சித் தலைவருக்கோ தேவையான விதத்தில் நிலையியற் கட்டளையை துஷ்பிரயோகம் செய்ய முடியுமானாலும், ஆளும் கட்சி அவ்வாறு செயற்படாது. தாம் பாராளுமன்றத்திலிருந்து விலகிச் செல்லும் தினத்திலும் குறித்த நிலையியற் கட்டளை எதிர்காலத்துக்காக பாதுகாத்து வழங்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

## நுண் கடன் திட்டத்தினால்...

பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதற்கு எதிர்க்கட்சியினர் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.நுண் கடன் திட்டத்தின் கொடுமைகளுக்கு ஆதிவாசிகளும் தற்போது அகப்பட்டுள்ளார்கள் என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், மத்திய வங்கியால் மாத்திரமே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கான செலவின தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில், டிலான் பெரேரா எம்பி எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

நூற்றுக்கணக்கில் அன்றி தற்போது மில்லியன் கணக்கான மக்கள் நுண்கடன் திட்டங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது மிக மோசமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அந்த வகையில் மத்திய வங்கியால் மாத்திரமே இந்த பிரச்சனைக்கு தீர்வு காண முடியும். எனினும் சட்ட சிக்கல்கள் காரணமாக தற்போது அதில், சில பிரச்சினைகள் உருவாகியுள்ளன. எவ்வாறாயினும் இந்தப் பிரச்சனைக்கு உடனடி தீர்வு காண வேண்டும். அதனை கவனத்திற் கொண்டு நுண்கடன் நிதி நிறுவனங்களை கண்காணிக்கும் வகையில் அதிகார சபையொன்றை ஸ்தாபிப்பதற்கு தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்முனை சிறுவன் மர்ம மரணம்...

காப்பகத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். இங்கிருந்த நிலையில் 15 வயதுடைய இச்சிறுவன் உயிரிழந்தார். இதையடுத்து சிறுவனின் உடம்பில் காயத் தழும்புகள் உள்ளதால் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பெற்றோர்கள் தெரிவித்தனர்.இதையடுத்து,கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் வைக்கப்பட்ட சிறுவனின் சடலம் அம்பாறை பொது வைத்திய சாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அங்கு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம் இம்மரணம்,பலத்த அடியால் ஏற்பட்ட

உட்காயங்களால் மரணம் சம்பவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. சிறுவன் தங்க வைக்கப்பட்டிருந்த காப்பகத்தில் சம்பவ தினமான இரவு உணவை உட்கொண்ட பின்னர் பாடசாலை வளாகத்தில் நின்றதாகவும் பின்னர் என்ன நடந்ததென தெரியவில்லையெனவும் முன்னுக்குப்பின் முரணான வாக்குமூலங்களை வழங்கியதாலேயே,பாடசாலை மேற்பார்வையாளரான பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

## தபால்நிலையங்கள்...

முடியுமென்பதுடன், பொதுமக்கள் தமக்கான ஏனைய சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பொரளை, வெள்ளவத்தை, ஹெவ்லொக் டவுன், தெஹிவளை, மொரட்டுவை, பாணந்துறை, களுத்துறை, கொட்டாஞ்சேனை, கொம்பனி வீதி, பத்தரமுல்ல, கல்கிசை, நுகேகொடை மற்றும் சீதாவக்கபுர ஆகிய தபால் நிலையங்கள் 24 மணிநேர சேவையில் இருக்குமெனவும், பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## COP 28 மாநாட்டில்...

நாடுகளினதும் ஆதரவையும் பங்களிப்பையும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பங்களாதேஷ், சீஷெல்ஸ் மற்றும் மோல்டோவா போன்ற நாடுகள் ஏற்கனவே இந்தப் பணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டம் ஒரு தேசத்தின் பொறுப்பல்ல எனவும் முழு உலகமும் அதனுடன் கைகோர்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## யாழ். நகரிலுள்ள 07 பேர்...

அஜந்தன் (18), கிசாலினி (17) ஆகியோா் படகுக் கட்டணமாக ரூ. 1.50 இலட்சம் செலுத்தி, தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி அரிச்சல்முனைக்கு அதிகாலை வந்ததாகத் தெரிய வந்தது.

விசாரணையில், குழந்தை கேசவி இதய நோயால் பாதிக்கப்பட்டிருப்பதும், அவருக்கு தமிழகத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்காக அகதியாக வந்ததாகவும் தந்தை அமுதன் தெரிவித்தார்.

இதன்பிறகு, 07 அகதிகளையும் மண்டபம் இலங்கைத் தமிழா்கள் மறுவாழ்வு முகாமில், கடலோரப் பாதுகாப்புக் குழும போலீஸார் ஒப்படைத்தனர்.

## பாலியல் உணர்வைத் தூண்டும்...

நபர் குணசிங்கபுர வீட்டில்டொன்றில் களஞ்சியப்படுத்தியிருந்தார். இதன்போதே, இந்நபரை குற்றத்தடுப்பு பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்

இந்த நபர் பாலியல் உணர்வைத் தூண்டக் கூடிய மருந்து வகைகளை இந்தியாவிலிருந்து கொண்டு வந்து கொழும்பு 12 சில்வா சுஜித் கறைுக்குத் தெருவிலுள்ள வீடொன்றில் களஞ்சிப்படுத்தியிருந்தார்.

மேல்மாகாண கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் புத்திக்க ராஜபக்சவுக்கு (உ.பொ.அலுவலகர்) கிடைத்த தகவல்கள் அடிப்படையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்

## பாழடைந்த கிணற்றுக்குள்ளிருந்து...

மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் இராணுவத்தினருக்கு அறிவித்ததையடுத்து அதனை அப்புறப்படுத்துவதாக இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இதனால் அவரது காணிக்குள் இராணுவ அங்கிகள் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளன.

இவை யுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்தினர், அணிந்து கொள்ளும் ஒருவகை கவச அங்கி என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு இராஜதந்திரிகளால் அதிகம் பார்க்கப்பட்ட திரைப்படம் 'த நியூஸ் பேப்பர்'



இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடந்த வெள்ளிக்கிழமை (01) இரவு அதன் இணை தயாரிப்பாளரான நெடுஞ்சாலைகள் போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவின் அழைப்பின் பேரில், 2020 ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படமாக ஜனாதிபதியின் விருதைப் பெற்ற The Newspaper திரைப்படத்தை PVC திரையரங்கில் காண வன் கோல்பேஸ் திரை அரங்கில் ஒன்றுகூடினர். இந்தியாவின் 13ஆவது பெங்களூர் திரைப்பட விழாவில், ஆசியாவின் இரண்டாவது சிறந்த படமாக விருது பெற்றதுடன், பணப் பரிசையும் பெற்ற திரைப்படமே த நியூஸ் பேப்பர்.

சிறந்த நடிகர் மற்றும் சிறந்த இசை உள்ளிட்ட 2020 ஆம் ஆண்டின் சிறந்த திரைப் படத்துக்கான ஜனாதிபதியின் விருதைப் பெற்ற "த நியூஸ் பேப்பர்" திரைப்படத்தின் தயாரிப்பாளரான அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் விசேட அழைப்பின் பேரில் இலங்கையின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், இராஜதந்திர அதிகாரிகள் உட்பட உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெருமளவானோர் இந்த விசேட திரைப்படத் திரையிடலில் கலந்து கொண்டனர்.

மிகவும் காலத்துக்குப் பொருத்தமான கருப்பொருளில் உருவான "த நியூஸ் பேப்பர்" திரைப்படம் மிகவும் சிறப்பான திரைப்படம் என திரைப்படத்தைப் பார்த்த பலரும் கருத்துத் தெரிவித்தனர். 2023 ஜனாதிபதி திரைப்பட விருது விழாவில், சரத் கொத்தலாவல மற்றும் குமார திரிமதுர இயக்கிய 'த நியூஸ் பேப்பர்' திரைப்படம், 2020 இல் திரையிடப்பட்ட படங்களில் அதிக விருதுகளை வென்ற திரைப்படமாகும். மற்றும் "விஸ்வ கீர்த்தி விருதையும்" வென்றுள்ளது. இது மிகவும் தனித்துவமான விருதுகளில் ஒன்றாகும்.

கலாநிதி பந்துல குணவர்தன, எச்டி பிரேமசிறி, ரவீந்திர குருகே ஆகியோர் இணைத் தயாரிப்பாளர்களாகச் செயற்பட்டதோடு ஆங்கில வசனங்களுடன் திரையிடப்பட்ட The News Paper திரைப்படம் இதற்கு முன்னரும் பல உள்ளூர் மற்றும் சர்வதேச விருதுகளை வென்றுள்ளது.

# அநுராதபுரம் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் வைத்திய முகாம்







**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

இலங்கை மெதடிஸ்ட் சர்ச் காது கேளாதோர் Deaf Link நிறுவனத்தின் பூரண அனுசரணையில் சாலியபுர சாந்தி நிழல் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர வின் தலைமையில் கடந்த (01) வைத்திய முகாம் நடைபெற்றது.

வடமத்திய மாகாண சமூக சேவை பணிப்பாளர் மற்றும் மத்திய நுவரகம் பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜீ. சேனாரத்ன ஆகியோரின் வேண்டுகோளின் பேரில் வைத்திய முகாம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

Deaf Link நிறுவனத்தின் அனுசரணையில் நடத்தப்பட்ட 20 ஆவது வைத்திய முகாம் இதுவாகும். இதன் போது இரத்த பரிசோதனை, சர்க்கரை பரிசோதனை, சிறுநீரகம் ,கொலோஸ்ரோல் வெளிப்புற மருத்துவ பரிசோதனை , பல் நிரப்புதல், பல் பிரித்தெடுத்தல் , வாய் வழி புற்றுநோயைக் கண்டறிதல் உள்ளிட்ட பரிசோதனைகள் நடைபெற்றதுடன். மருந்து வகைகளும் சக்கர நாற்காலி ஊண்டுகோல் மற்றும் மூக்கு கண்ணாடிகளும் இதன்போது இலவசமாக வழங்கப்பட்டன.

அரச அதிகாரிகள் மற்றும் இலங்கை தெமடிஸ்ட் சர்ச் அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்ட பொறுப்பாளர் ரவிந்ர குமார் (போதகர் ) Daef Link நிறுவனத்தின் அநுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜெயவூலா ஜெயகுணரூபன், மாவட்ட இணைப்பாளர் சாமர பிரசன்ன சில்வா உட்பட Daef Link நிறுவன அலுவலக பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

## மூன்று மாநிலங்களில் பா.ஜ.க... (04 ஆம் பக்கத் தொடர்)

4 மாநில தேர்தல் முடிவுகள் குறித்து மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கூறுகையில், "நாட்டு மக்கள் தங்கள் மனநிலையை இந்த தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்" என்றார்.

நேற்று ஒரே நாளில் இரண்டு மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியை இழந்துள்ள நிலையில், வட இந்தியாவில் காங்கிரஸ் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே இருக்கிறது. ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நிலையில், ஒரே நாளில் இரு மாநிலங்களையும் காங்கிரஸ் இழந்துள்ளது.

இந்தத் தேர்தல் முடிவுகள் தேசிய அரசியலில் பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ளன. அடுத்த வருடம் நடைபெறவிருக்கின்ற இந்திய பாராளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க வெற்றியீட்டுமென்ற நம்பிக்கையை இப்போதைய சட்டசபைத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

வட இந்தியாவில் காங்கிரஸ் நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருகிறது. பா.ஜ.கவின் பலம் அங்கே அதிகரித்துக் கொண்டே இருப்பதையே இது காட்டுகிறது. கடந்த சில ஆண்டுகளாகவே வட இந்தியாவில் பாஜக, தென் இந்தியாவில் காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் என்ற நிலைமைதான் இருக்கிறது. இந்தியாவில் 5 மாநில தேர்தல் குறித்து இந்திய மக்கள் மட்டும் அல்லாமல் உலக நாடுகளும் உற்றுநோக்குகின்றன. இதற்கு முக்கியமான காரணம் இந்திய பங்குச்சந்தையாகும்.

ஐந்து மாநில தேர்தலில் மிசோரம் மாநிலத்தைத் தவிர்த்து 4 மாநில தேர்தல்களின் முடிவுகளில் BJP கட்சியின் வெற்றி பிரகாசமாக இருக்கும் காரணத்தால் இன்று திங்கட்கிழமை பங்குச்சந்தை வர்த்தகம் குறித்தும், 5 மாநில தேர்தல் 2024 தேர்தல் வெற்றி குறித்தும் பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் டிவிட்டரில் பணமழை பெய்யப் போவது போல் கொக்கரித்து வருகின்றனர்.

### National Lotteries Board – வெள்ளி 2023.12.01

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத – சீட்டிழுப்பு இலக்கம் 5315 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,509,384.00
ஆங்கில எழுத்து Y – வெற்றி இலக்கங்கள் 6 1 9 7 4 3

கொவிசெத – சீட்டிழுப்பு இலக்கம் 3557 – சீட்டிழுப்பு திகதி 2023.12.01 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,499,832.80
ஆங்கில எழுத்து J – வெற்றி இலக்கங்கள் 23 28 42 53 – விசேட எழுத்து J – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 06341

Mega Power – சீட்டிழுப்பு இலக்கம் 1663 – 2023.12.01 – 20367 – அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 416,542,360.00
ஆங்கில எழுத்து C – சுப்பர் இலக்கம் 15 – வெற்றி இலக்கங்கள் 09 15 21 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP – திகதி 2023.12.01 – சீட்டிழுப்பு இலக்கம் 0141
ஆங்கில எழுத்து Q – வெற்றி இலக்கங்கள் 0 6 3 4 3 6 – L7 எழுத்து Q
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.20,748,927.08

ராசி சுப பலன் – திகதி 2023.12.01 – சீட்டிழுப்பு இலக்கம் 624 – அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,171,918.48
வெற்றி இலக்கினம் கடகம் – வெற்றி இலக்கங்கள் 31 48 56 59 – தனயோக இலக்கம் 43439 – நாளுக்கான விதி எண் 16

தன நிதானய – சீட்டிழுப்பு இலக்கம் 1345 – 2023.12.01 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 123,609,862.40
ஆங்கில எழுத்து I – வெற்றி இலக்கங்கள் 01 12 56 75 – விசேட எழுத்து I – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 11240

### National Lotteries Board – சனி 2023.12.02

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத – சீட்டிழுப்பு இலக்கம் 5316 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,513,288.00
ஆங்கில எழுத்து M – வெற்றி இலக்கங்கள் 1 7 9 3 4 0

கொவிசெத – சீட்டிழுப்பு இலக்கம் 3558 – சீட்டிழுப்பு திகதி 2023.12.02 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,696,934.00
ஆங்கில எழுத்து V – வெற்றி இலக்கங்கள் 17 26 65 80 – விசேட எழுத்து V – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 01145

Mega Power – சீட்டிழுப்பு இலக்கம் 1664 – 2023.12.02 – 49196 – அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 416,698,272.00
ஆங்கில எழுத்து Q – சுப்பர் இலக்கம் 09 – வெற்றி இலக்கங்கள் 24 33 79 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP – திகதி 2023.12.02 – சீட்டிழுப்பு இலக்கம் 0142
ஆங்கில எழுத்து L – வெற்றி இலக்கங்கள் 6 3 5 6 6 7 – L7 எழுத்து L
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ .20,784,821.88

ராசி சுப பலன் – திகதி 2023.12.02 – சீட்டிழுப்பு இலக்கம் 625 – அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,171,918.48
வெற்றி இலக்கினம் கன்னி – வெற்றி இலக்கங்கள் 23 27 54 60 – தனயோக இலக்கம் 08817 – நாளுக்கான விதி எண் 23

தன நிதானய – சீட்டிழுப்பு இலக்கம் 1346 – 2023.12.02 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 123,705,837.60
ஆங்கில எழுத்து T – வெற்றி இலக்கங்கள் 07 08 31 43 – விசேட எழுத்து T – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 33230

# ஹாலித் அஹமட் 147 புள்ளிகள்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட அழுத்கம தாருஸ்ஸலாம் முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் எம் .ஐ. ஹாலித் அஹமட் என்ற மாணவன் 147 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் ஏ.ஆர். மொஹமட் இப்ராஹிம், ஏ. எம். சிபானியா தம்பதிகளின் புதல்வராவர்.


## சியபத்த பினான்ஸ்
## பெறுமதிமிக்க ஏல விற்பனை

டீசல் மற்றும் பெட்ரோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட 87 வாகனங்கள்

2023 டிசம்பர் 09 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மு.ப. 10.00க்கு

சியபத்த பினான்ஸ் வாகன கூடம்,
இல. **344,** சிறிமங்கலவத்தை, மம்பே, பிலியந்தலை.

பரீட்சிப்பது டிசம்பர் 6, 7 மற்றும் 8 ஆம் திகதிகளில்
ஏல விற்பனை இடத்தில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை

அழையுங்கள் : **0112709358** (கூடம்) / **0765 73 13 97** (ஸ்ரீரேஷ்)

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| **MOTOR CAR** | | |
| WP-CBE-5XXX | PERODUA,AQ1GZ-BEZZA | 2018 |
| WP-CAW-3XXX | SUZUKI,DAA - MH55S WAGON R | 2017 |
| WP-CAZ-0XXX | SUZUKI,DAA MH55S WAGON R | 2017 |
| WP-CAU-3XXX | DATSUN,REDI GO | 2016 |
| WP-CAJ-9XXX | SUZUKI,ALTO LXI 800 | 2015 |
| SP-CAP-6XXX | SUZUKI,DAA -MH44S WAGON R | 2015 |
| WP-CAJ-1XXX | TATA,NANO TWIST | 2015 |
| CP-CAI-9XXX | TOYOTA,DAA-NHP10 AQUA | 2014 |
| WP-CAD 2XXX | HONDA DAA - RU3 VEZEL | 2014 |
| UP-KP-5XXX | TOYOTA,DAA-AHR20W | 2008 |
| WP-KF-0XXX | CHERY,QQ | 2006 |
| EP-GX-5XXX | SUZUKI,LIANA | 2002 |
| NC-GY-9XXX | VOLKSWAGEN,PASSAT | 2002 |
| WP-KC-1XXX | HYUNDAI,EF SONATA A | 2000 |
| EP-GA-7XXX | NISSAN BLUE BIRD | 1997 |
| 325-0XXX | TOYOTA,NOV 1995 SPRINTER | 1995 |
| 18-5XXX | MAZDA,MISTER LX | 1993 |
| 302-1XXX | TOYOTA,VISTA | 1993 |
| 64-0XXX | ISUZU,GEMINI | 1992 |
| 16 SRI 1XXX | DAIHATSU,G11-CLOSED | 1986 |
| **MOTOR CAB & VAN** | | |
| NW-PD-8XXX | NISSAN,NAVARA | 2008 |
| CP-PB-2XXX | MAZDA,KB-SS28V | 1997 |
| 51-4XXX | NISSAN,VANETTE | 1985 |
| **MOTOR TIPPER, TRUCK & LORRY** | | |
| SG-LJ-8XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER 1613 | 2012 |
| WP-LH-8XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER 1613 | 2010 |
| SP-LK-6XXX | LANKA ASHOK LEYLAND,COMMET TIPPER 1613 | 2010 |
| SP-LC-3XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER | 2006 |
| NW-LA-7XXX | LANKA ASHOK LEYLAND,COMET TIPPER | 2005 |
| WP-LN-6XXX | FOTON,BJ1049V9JEA-KAI | 2017 |
| SG LO-6XXX | SINOTRUK,ZZ1167M4611 | 2012 |
| NC-LH-4XXX | TATA,LPK 1615 | 2010 |
| WP-LE-0XXX | TOYOTA,FREEZER TRUCK | 2002 |
| **MOTOR MINI LORRY** | | |
| WP-DAD-5XXX | TATA,ACE HT 2 | 2016 |
| WP-DAD-3XXX | FOTON,BJ1008V0JA3-2 | 2016 |
| SP-PW-7XXX | FOTON,BJ1010VOJA3-2 | 2013 |
| SP-PY-0XXX | DFSK,EQ1020DR | 2013 |
| SP-PV-4XXX | YUEJIN,NJ1022DU | 2012 |
| SP-PQ-0XXX | TATA,ACE | 2011 |
| WP-LI-3XXX | EICHER,TERRA 16 HDR | 2011 |
| WP-LC-7XXX | JAC,HFC3048K DUMP TRUCK | 2006 |
| WP-LJ-1XXX | MITSUBISHI,PA-FE82DE-CANTER | 2006 |
| NW-PQ-0XXX | TATA,ACE | 2010 |
| CP-LJ-1XXX | MITSUBISHI,GBD-U61T MINI CAB | 2005 |
| SP-LE-9XXX | SUBARU,LE-TT1 | 2002 |
| SP-HE-5XXX | MITSUBISHI,MINICAB | 2002 |
| **MOTOR BIKE** | | |
| WP-BIW-6XXX | TVS,NTORQ | 2019 |
| WP-BEN-1XXX | HERO,DAWN | 2016 |
| WP-BET-7XXX | HERO,DASH VX | 2016 |
| **THREE WHEELER** | | |
| SG-ABV-0XXX | BAJAJ,RE 205 | 2020 |
| CP-ABP-4XXX | BAJAJ,RE 205 | 2017 |
| CP-ABO-6XXX | BAJAJ,RE 205 | 2016 |
| WP-ABM-5XXX | BAJAJ,RE 205 | 2016 |
| WP-ABM-2XXX | BAJAJ,RE 205 | 2016 |
| WP-AAY-0XXX | BAJAJ,RE 205 | 2015 |
| WP-ABF-1XXX | BAJAJ,RE 205 | 2015 |
| WP-AAX-5XXX | BAJAJ,RE 205 | 2015 |
| SP-AAY-1XXX | BAJAJ,RE 205 | 2015 |
| WP-AAX-3XXX | BAJAJ,RE 205 | 2015 |
| CP-AAX-5XXX | BAJAJ,RE 205 | 2014 |
| WP-AAS-0XXX | BAJAJ,RE 205 | 2014 |
| SP-AAR-6XXX | BAJAJ,RE 205 | 2014 |
| WP-AAS-0XXX | BAJAJ,RE 205 | 2014 |
| WP-AAY-0XXX | BAJAJ,RE 205 | 2014 |
| WP-AAP-9XXX | BAJAJ,RE 205 | 2014 |
| WP-AAP-0XXX | BAJAJ,RE 205 | 2014 |
| SP-AAT-3XXX | BAJAJ,RE 205 | 2014 |
| SG-AAG-7XXX | BAJAJ,RE 205 | 2013 |
| SP-AAA-7XXX | BAJAJ,RE 205 | 2012 |
| SG-AAC-2XXX | BAJAJ,RE 205 | 2012 |
| WP-YS-7XXX | BAJAJ,RE205 | 2011 |
| UP-YK-8XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YJ-0XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YL-7XXX | BAJAJ,RE 205 | 2011 |
| SG-YB-0XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| CP-YD-9XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| CP-QX-8XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| NW-YB-4XXX | BAJAJ,AR4S-UG | 2010 |
| UP-QV-5XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| WP-QS-1XXX | BAJAJ,AUTO AR4S | 2009 |
| WP-QJ-4XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2007 |
| WP-QL-5XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP-QN-3XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP-QL-4XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP-QF-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| SG-QH-4XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QE-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QB-3XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |

**விற்பனை நிபந்தனைகள்:**

- உள் நுழைவு: ஏல விற்பனை தினத்தில் ஒருவருக்கு மீளளிக்கப்படாத ரூபா 1,500 அனுமதிச் சீட்டு மற்றும் ரூபா 10,000 வீதம் மிளளிக்கப்படாத வைப்புத் தொகை மூலம்.
- கொடுப்பனவு: சுத்தியல் இறக்கப்பட்ட உடன் குறித்த விலைமனு பெறுமதியில் மிளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை ஆரம்பத்தில் செலுத்த வேண்டும் என்பதோடு, எஞ்சிய 75% தொகையை 2023 டிசம்பர் 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00க்கு முன்னர் சியபத்த பினான்ஸ் பீஎல்சி, சியபத்த கோபுரம், 111, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 0இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு அல்லது எந்த ஒரு கிளைக்கும் பணமாக செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ANA AUCTIONEER – Black Tie Service with True Aloha!
ஏ என் அல்கெவத்த ஒக்ஷனிய(ர்)
A N ALGEWATHTHA AUCTIONEER
No.333, Janajayacity, Rajagiriya.
m. +94 71 790 5 790
e. algewaththaauctioneer@gmail.com
www.lankaauction.lk

# கிழக்கின் குரல்



## ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி அகில இலங்கை ரீதியில் ஆறாமிடம்

### கிழக்கு மாகாண ஆளுநர் பாராட்டு

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி தர்சனா கோணேஸ், இம்முறை வெளியான க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவின் பிரகாரம், தேசிய ரீதியில் ஆறாம் இடத்தையும் தமிழ் மொழி மூலமாக இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். இம்மாணவியை நேரில் அழைத்து, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பாராட்டுத் தெரிவித்தார். மாணவியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து கல்வி நடவடிக்கையில் அக்கறை செலுத்திய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் வலய கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடிய ஆளுநர் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.



மாணவியின் வேண்டுகோளின் பேரில், பல நாட்களாக நிலுவையிலிருந்த காணியை அப்பாடசாலைக்கு வழங்கவும் ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## சுகாதாரத்துறையில் ஊடகத்தின் பங்குகள் மிகப் பிரதானமானவை

### மக்களை தெளிவூட்ட விரிவான செயற்பாடுகள் அவசியம்

(பாலமுனை விசேட நிருபர்)

வைத்தியசாலைகளின் சேவைகள் மற்றும் சிறந்த செயற்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு ஊடகத்தின் பங்கு மிகப்பிரதானமானதென, நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பி.அப்துல் வாஜித் தெரிவித்தார்.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் ஊடகம் மற்றும் வெளியீட்டு பிரிவு, டிஜிடல் சுகாதார மையம், சுகாதார மேம்பாட்டு பிரிவு ஆகியவற்றை அங்குரார்ப்பணம் செய்து, உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுவதுடன், விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள், பயிற்சி கருத்தரங்குகள், சுகாதார மேம்பாடு என பல்வேறு சேவைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான நிலையில், வைத்தியசாலைகளின் ஊடக மற்றும் வெளியீட்டு பிரிவு சிறப்பாக இயங்குமானால் பொதுமக்கள் மத்தியில் பல்வேறு விடயங்களை கொண்டு சேர்க்க முடியும்.

குறிப்பாக நிந்தவூர் வைத்தியசாலையின் சுகாதார சேவைகள், சிறந்த செயற்பாடுகளை பிரதேச மக்கள் மத்தயில் கொண்டு செல்ல வேண்டிய பாரியு பொறுப்பு எமக்குள்ளது. இதற்காகவே இங்கு ஊடகப்பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளோம்.

எமக்குள்ள வரையறைகளை பேணி, முறையாக இதை செயற்படுத்தினால் பிராந்திய மக்கள் பெரிதும் நன்மையடைய முடியும். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைய, நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் இந்த ஊடக பிரிவுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆய்வரங்கம்



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறையுடன் இணைந்து ஆய்வரங்கை நடத்தியது.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரான கிழக்கிலங்கையின் இலக்கியச் செல்நெறி" எனும் தலைப்பில் இந்நிகழ்வு (02) இடம் பெற்றது.தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட கேட்போர் கூடத்தில் நடந்த இந்நிகழ்வுக்கு, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமை தாங்கினார்.

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆய்வரங்கத் தலைமை வகித்தார்.

## அம்பாறை மாவட்ட வைத்தியசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அம்பாறை மாவட்டத்தில் சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண, அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் சபையில் தெரிவித்தார்.

மாகாண சபை நிர்வாகத்தில் இயங்கும் வைத்தியசாலைகளில், போதுமான வசதிகள் இல்லாதுள்ளன. இதனால் அங்கு சிகிச்சை நடவடிக்கைகள் முறையாக இடம்பெறாதுள்ளதாகவும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

எனவே, இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இங்குள்ள வைத்தியசாலைகளுக்கு மத்திய அரசாங்கம் தேவையான நிதியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.



பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் சுமார் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அப்பிரதேசங்களில் மத்திய அரசாங்கத்தின்கீழ் மூன்று வைத்தியசாலைகளும் கல்முனை ஆர். டி,எச்.எஸ்ஸின் கீழ் 26 வைத்தியசாலைகளும் நான்கு ஆதார வைத்தியசாலைகளும் இயங்குகின்றன. இவ் வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு, டாக்டர்களுக்கான தட்டுப்பாடு மற்றும் உபகரணத்தடுப்பாடுகளும் நிலவுகின்றன.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் பெரும் சவால்களை எதிர் நோக்க நேர்ந்துள்ளது.

பல வைத்தியசாலைகள் இருந்தும் அங்கு முறையான சிகிச்சை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. நான், பிரதிச் சுகாதாரா இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த போது சீன அரசாங்கத்தின் உதவியுடன் 13 வைத்தியசாலைகளை நிர்மாணிக்க முடிந்தது. அதில் சம்மாந்துறை மற்றும் பொத்துவில் பிரதேசங்களில் இரண்டு வைத்தியசாலைகளை அமைத்தோம்.

இவ்விரண்டு வைத்தியசாலைகளிலும் சுமார் எண்பது வீத பணிகள் முடிவடைந்துள்ளன. ஆனால், நான்கு வருடங்களாகியும் இந்த வைத்தியசாலைகளின் பணிகள் பூர்த்தி செய்யப்படாது திறக்கப்படாமலுள்ளன.

எனவே, இவ்வைத்தியசாலைகளின் பணிகளை பூர்த்தி செய்து, விரைவாக இதனைத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## திருகோணமலையில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளரின் தலைமையில், சர்வதேச மாற்றுதிறனாளிகள் தினம் திருகோணமலை மாவட்ட செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று (03.) நடைபெற்றது. சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நேற்று (03) இந்நிகழ்வு இடம் பெற்றது. இது, மாவட்டத்தின் பிரதான நிகழ்வாக அமைந்திருந்தது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள மாற்றுதிறனாளிகள் கலந்து கொண்டனர். இலங்கை அணி சார்பாக, சக்கர நாற்காலி கடினப் பந்து போட்டியில் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்திய தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த டபிள்யூ.பிரியந்த குமார என்பவர் மாவட்ட செயலாளரினால் கௌரவப்படுத்தப்பட்டார். அத்துடன் இங்கு மாற்றுதிறனாளிகளுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மேலும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாற்றுதிறனாளிகள் அனைவருக்கும் அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன. பல திறமைகளையுடைய மாற்று திறனாளிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன. நிகழ்வின் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி கலந்து சிறப்பித்தார்.

## டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள்



(ஒலுவில் விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால்,நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு புகை விசுறும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ. எம். முகம்மது இஸ்ஸதீன் தெரிவித்தார். இதனை முன்னிட்டு,வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்பரவு செய்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பகுதியில், சிறந்த நூலகத்தை தெரிவுசெய்வதற்கான போட்டி நடத்தப்படவுள்ளது. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் ஏ. ரீ, எம். றாபியின் வளிகாட்டலின் கீழ், இது நடத்தப்படவுள்ளது.நூலகத்தை தெரிவு செய்வதற்கான தெரிவுக்குழு வீடு, வீடாகச்சென்று நூலகத்தை பார்வையிட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் : இறக்காமம் தினகரன் நிருபர்)



உலர்மிளகாய் உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்றிட்த்தின் கீழ்,உலர்மிளகாய் உற்பத்தி தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.இதற்கமைய, ஆலிம்நகர் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் கீழுள்ள விவசாயிகளுக்கு எம்ஜசிஎச் எச்வை01 இன மிளகாய் கன்றுகள் மற்றும் பைகள் என்பன வழங்கப்பட்டன.

(படம் :அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## கிழக்கு மாகாணத்தில் 712 மாணவர்கள் 9 ஏ சித்தி ; மட்டக்களப்பு வலயம் முன்னிலை

( காரைதீவு குறூப் நிருபர்)

கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தரப் பரீட்சையில், கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களில், மட்டக்களப்பு வலயம் அதிகூடிய சித்திவீதத்தைப் பெற்று முதலிடத்திலுள்ளது. கிழக்கு மாகாணத்திலிருந்து 26,874 மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றினர். இவர்களில் 712 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளனர். மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 136 மாணவர்களும், கல்முனை கல்வி வலயத்தில் 122 மாணவர்களும், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில்112 மாணவர்களும் 9A சித்திகளைப் பெற்றுள்ளனர். மாணவர்கள் பெற்றுள்ள சித்திகளின் அடிப்படையில் மட்டக்களப்பு கல்வி வலயம் முதலாமிடத்திலுள்ளது. இரண்டாவது இடத்தில் கல்முனை வலயமும் மூன்றாவது இடத்தில் மகா ஓயா வலயமும் உள்ளன. அக்கரைப்பற்று, மட்டக்களப்பு மத்தி, திருக்கோவில், அம்பாறை, மூதூர், மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு ஆகிய கல்வி வலயங்கள் முறையே நான்கு முதல் பத்து வரையான இடங்களுக்குள் வந்துள்ளன.11 ஆவது இடத்தில் சம்மாந்துறை வலயம் வந்துள்ளது.

## பெண்களை தொழில் முயற்சியாளர்களாக உருவாக்கும் சமூக மட்ட செயற்பாடுகள்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

பெண்களை தொழில் முயற்சியாளர்களாக உருவாக்கும் சமூக மட்ட தொழில்துறைசார் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட யுவதிகள் மற்றும் பெண்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக, அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

முறைசாரா வாழ்நாள் கல்வியூடாக பெண்களைத் தொழில் முயற்சியாளர்களாக உருவாக்கும் வேலைத் திட்டத்திற்கு அமைய, இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கான களவிஜயம் அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அனுலா தலைமையில் இடம்பெற்றது. ஆடை உற்பத்தி தொழில்துறைக்காக வவுணதீவு பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 20 யுவதிகள் இதன்போது அழைத்துச் செல்லப்பட்டனர்.

மட்டக்களப்பிலிருந்து அம்பாறை மாவட்டத்திற்கு இவர்கள் விஜயம் மேற்கொண்டிருந்தனர். இக்குழு அம்பாறை மாவட்டத்திலுள்ள பல்வகை சமூக மட்ட ஆடை உற்பத்தி நிலைங்களுக்குச் சென்று அங்குள்ள உற்பத்தி முறைமைகள் மற்றும் செய்முறை நுணுக்கங்களையும் அவதானித்தது.

## கலை இலக்கிய விழா

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காத்தான்குடி பிரதேச செயலக பிரதேச கலை இலக்கிய விழா, சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றன.

இந்நிகழ்வில், அதிதிகளாக பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.றஊப், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எம்.எம். ஜரூப், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி.பீ.ஜெயராஜ், பிரதேச கலாசார அதிகார சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.சித்திக், கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் கலைஞர்கள் 108 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், பிரதேச கலை இலக்கிய போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வினை கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஏ. எம்.நளீம் தொகுத்து வழங்கினார்.

## ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

மதுசார வரி, விலை, மற்றும் சட்ட விரோத மதுசாரத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சிலோன் மீடியா போரத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர். இங்கு பிரதம வாளராக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சி அதிகாரி ஏ.சி.றஹீம் கலந்து கொண்டு உரையாற்றினார். அத்துடன் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளரும்; அகில இலங்கை வை. எம்.எம்.ஏ.பேரவையின் தேசிய உப தலைவர்களில் ஒருவருமான எஸ். தஸ்தகீர் உட்பட இளைஞர் பயிற்சி நிலையத்தின் பொறுப் பதிகாரி எம்.ஏ.ஹமீட், சிலோன் மீடியா போரத்தின் தலைவர் றியாத் ஏ.மஜீட் உட்பட ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.

# பலஸ்தீன ஒருமைப்பாட்டு தினத்தை முன்னிட்டு

# கண்டியில் விசேட நிகழ்வும் கண்காட்சியும்







## புத்திஜீவிகள் உட்பட முக்கிய பிரமுகர்களும் பங்கேற்பு









கண்டியிலுள்ள 26 அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன ஒருமைப் பாட்டுக்கான தின நிகழ்வு கண்டி சிட்டி சென்றர் வளாகத்தில் அமைந்துள்ள சஹஸ் உயன பூங்காவில் கண்டி ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன ஒருமைப்பாட்டு அமைப்புகளுக்கான சம்மேளனத்தின் ஏற்பாட்டுக் குழுத்தலைவர் வசீர் முக்தார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்ன கோன், மாவட்ட உதவிச் செயலாளர் சந்தமாலி ஹேவாகே, மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பிரியதாச, முன்னாள் கொழும்பு மாநகர முதல்வர் ஓமர் காமில் உள்ளிட்ட பல முக்கிய பிரமு கர்கள் கலந்து கொண்டனர்.

கண்டியிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமயப் பிரதிநிதிகள், புத்திஜீ விகள் என்று 26 பிரதிநிதிகள், பாடசாலை பிள்ளைகள், கல்வியியலாளர்கள், சமயப் பெரியார்கள் என பெரும் எண்ணிக்கையி லான மக்கள் கலந்து கொண்டனர்.

இதில் விசேடமாக காண்காட்சி 29, 30 மற்றும் டிசம்பர் 1,2 வரை நான்கு நாட்கள் நடைபெற்றன. விசேட செயலமர்வும் இதன்போது இடம்பெற்றது. அதில் பேராதனை பல்கலைக்கழக சட்டத்துறை பேராசிரியர் தீபிகா உடகம, பேராசிரி யர் சித்தீக், செந்தில் சிவஞானம், தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி விமல் ரத் நாயக உள்ளிட்டவர்கள் கலந்து கொண்ட னர்.

இந்நிகழ்வின் இறுதிநாள் தினத்தில் பிரதம அதிதியாக பலஸ்தீன நாட்டின் இலங்கைக்கான தூதுவர் சுஹைர் ஹம் தல்லா கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

**கண்டி பலஸ்தீன ஒருமைப்பாட்டு அமைப்புகளின் சம்மேளன ஏற்பாட்டுக் குழுத்தலைவர் வஸீர் முக்தார் இங்கு உரை யாற்றும் போது;**

உலக நாட்டின் பிரஜைகள் என்ற அடிப் படையில் மனித நேயத்தை நாங்கள் ஆத ரிக்கின்றோம். மனித நேயத்தை ஆதரிப் பதற்காக நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்பது எமது தார்மீகக் கடமை யாகும். பலஸ்தீன மக்கள் 70 வருடங்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வாழுகின்ற சமூகமாகும்.

அந்த சமூகத்தினுடைய இன்னல்கள், துன்பங்கள், போராட்டங்கள், தனித்துவ மான சமய வாழ்க்கை முறையில் கலா சாரம். பண்பாடு, கலை, வரலாறு தொடர் பிலான விடயங்கள் நினைவு கூரப்பட வேண்டும். அதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பலஸ்தீன் மக்களுடைய சர்வதேச ஒரு மைப்பாட்டுத் தினத்தில் அவர்களைப் பற்றி நினைவு கூருவதற்காக வேண்டி யும் நியாயத்திற்காக வேண்டியும் இனம், மதம், மொழி வேறு பாடுகளுக்கப்பால் எல்லா இன மக்களும் இந்த இடத்தில் ஒன் றுபட்டு இருக்கின்றோம்.

மத்திய மலைநாட்டில் கண்டி நகரில் வாழக் கூடிய சமூகம் என்ற அடிப்படை யில் மனித நேயம் தொடர்பிலான எங்களு டைய உணர்வுகளை பகிர்ந்து கொள்ளக் கூடிய சமூகம் என்ற வகையில் நாம் இந்த இடத்தில் எல்லோரும் ஒன்று கூடியிருப்ப தற்கான முக்கிய காரணம் மனித சமூகத்தை பாதுகாப்பதற்காகும்.

காலாகாலமாக அடக்கப்பட்டு ஒடுக் கப்பட்டு இன்னல்களுக்கு ஆளாகியுள்ள இந்த பலஸ்தீன மக்களுடைய தியாகத்திற் கும் அவர்களுடைய சுதந்திரமான நிம்மதி யான வாழ்வுக்காகவும் இந்நாளில் எமது நல்லாதரவை வழங்குவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**கண்டி மாவட்ட உதவிச் செயலாளர் சந்தமாலி ஹேவகே இங்கு உரையாற்று கையில்;**

சிறுவர்களுக்கான வேலைத்திட்டதின் கீழ் போட்டி ஒன்று சமீபத்தில் இடம்பெற் றது. இதில் சிங்கள, இந்து, முஸ்லிம் சமூக அமைப்புக்கள் யாவும் இணைந்து செயற் பட்டோம். இந்த நிகழ்வினைப் போன்று தான் அந்த நிகழ்வும் இடம்பெறுகின்றது. நாங்கள் அருகிலுள்ள வர்களோடு இணைந்து நிறைய வேலைத் திட் டங்கள் செய்து வரு கின்றோம். சிங்கள, தமிழ் மொழிகளைப் பேசுகின்ற பன்முக கலாசாரங்களைக் கொண்டுள்ள சிங்கள, தமிழ் முஸ்லிம், கிறிஸ்தவ சமூகத்த வர்களுடன் சேர்ந்து செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைக் குமாயின் எங்களி டத்தில் காணப் படும் உள்ளார்ந்த நல்ல விடயங்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். நாங்கள் ஒவ் வொருவரைப்பற்றியும்புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பமாகவும் அவை அமையும்.

இந்த நிகழ்வில் நாங்கள் ஒன்றுகூடி இருப்பது எமக்கு கிடைக்காத உலக விவ காரங்கள் பற்றிப் பேசுவதற்காகும். ஐக்கிய நாடுகள் சபையின் பெயர் குறிப்பிடும் போது, உலகின் கவனத்தைச் செலுத்துவது முக்கிய காரணத்தை வலியுறுத்தியே என்று அவர்கள் கூறுகின்றனர். நீங்கள் எல்லோ ரும் ஒன்று கூடி இருப்பது கலாசார விடயம் தொடர்பான விழிப்பூட்டலை வழங்குவ தற்காகும். நீங்கள் யாராக இருந்தாலும் சரி. நீங்கள் எந்த இனத்தைச் சார்ந்தவராக





இருந்தாலும் சரி நம் உடம்பினுள் ஓடுவது சிவப்பு நிறத்திலான இரத்தம் ஆகும் என்று சிங்களத்தில் சிறுவர் பாடல்வரிகள் உள்ளன.

உலகில் எவர் எங்கு வாழ்ந்தாலும் அவரு டைய இரத்தம் ஒன்றுதான். உலகின் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சாசனம் குறிப்பிடுவது உலகின் எங்கு வாழ்ந்தாலும் ஒரு மனிதனுடைய உரிமை இல்லாமற் செய்யப்படுமாயின் அது பொதுவாக சமூ கத்தின் மனித உரிமை மீறலைச் செய்த மைக்குச் சமனாகும். உலகம் பற்றிப் பேசு கின்ற நாம் எம்மோடு அயலில் இருக்கின்ற நட்புறவோடு உள்ளார்ந்த ரீதியாக வாழுதல் வேண்டும் என்பதை நாம் கவனத்தில் எடுத் துக் கொள்ள வேண்டும். நாங்கள் மனிதர் கள் என்ற வகையில் அருகில் இருந்தாலும் சரி, எமது நாட்டில் சரி, உலகில் எந்த நாட்டில் வாழ்பவர்களாக இருந்தாலும் காருண்ய மனித நேயத்தோடு நேசித்தல் வாழுதல் வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**பலஸ்தீன நட்புறவு ஒன்றியத்தின் இணைப்பதிகாரி நஜா முஹம்மட் உரை யாற்றும் போது;**

இன்றைய நாள் மிகவும் பெறுமதிமிக்க நாளாகும். ஐக்கிய நாடுகள் சபை பலஸ்தீ னத்திற்கான உலக ஆதரவு தினம் என்று பிர கடனப்படுத்தியுள்ளது. அந்த வகையில் மலையகத்திலுள்ள சகல மக்களும் ஒன்று சேர்ந்து இந்த பலஸ்தீன தினத்திற்காக நல் லாதரவு வழங்கி வருகின்றனர். எல்லா சமூகத்தவர்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற வகையில் நாங்கள் பலஸ் தீன தினத்தை ஆதரித்து இந்த கண்காட் சியை நடத்தி வருகின்றோம். சிவில் சமூக அமைப்புக்கள், மக்கள் குழுவினர்கள், சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், வர்த் தக சங்கங்கள், ஆகியவை இணைந்தே இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்தோம்.

இதற்கான பிரதான காரணம் தான் 70 வருட காலம் இந்த உலகில் பலஸ்தீன மக்கள் சொல்லொண்ணாத்துயரத்தை எதிர்நோக்கி வருகின்றார்கள். மனித சமூகம் என்ற வகையிலும் வாழ்ந்து வரும் ஒரு பகுதி மக்கள் மிகவும் கொடூரமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளனர். வல் லரசு நாடுகளின் அனுசரணையுடன் அவர் களுடைய இடத்தையும் நிலங்களையும்





சுவீகரித்துக் கொண்டு இன்னுமொரு நாட்டை உருவாக்கிக் கொண்டு உலகில் மிக மோசமான காரியத்தை இந்த நாட்டில் செய்து வருகிறார்கள்.

அவ்வாறாயின் நாங்களும் உலக மக்கள், நாங்களும் உலக நாட்டுப் பிரஜைகள், நாங் களும் மனிதர்கள், மனித உரிமை தொடர் பில் பேசுகின்றவர்கள் என்ற வகையில் இது தொடர்பில் நாங்கள் அனைவரும் கட் டாயமாக கவனம் செலுத்த வேண்டும்.

நாங்கள் மனிதர்கள் என்ற வகையில் அங்கு இடம்பெறும் மனிதப் படுகொ லைகளுக்கு எதிராகவும் அவர்களுடைய நியாயத்திற்காகவும் நல்லாதரவு நல்க வேண்டும். உலக மக்களும் பலஸ்தீன மக் களின் நிலவரம் தொடர்பில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் அவர்க ளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் கதைப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும், அவர்களுக்கு ஆதரவைப் பலப்படுத்துவ தற்கும் மீளவும் கௌரவமான சுதந்திரமான வாழ்க்கை முறையினைக் கட்டியெழுப்பு வதற்கு உலக மக்கள் அனைவருக்கும் உரித் துடையது என்ற அடிப்படையில் பலஸ்தீன மக்கள் சுதந்திரமான வாழ்க்கை நடத்துவ தற்குரிய ஆதரவினை வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஐக்கிய நாடுகள் சபை இந்த தினத்தை பிரகடனப்படுத்தியுள்ளது.

அந்த வகையில் தான் கண்டியிலுள்ள 26 அமைப்புக்கள் ஒன்றிணைந்து இன்று முதல் நான்கு நாட்களுக்கு கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்தோம். அதன் போது இரண்டாம் நாள் மாபெரும் மாநாடொன் றும் நடத்தப்பட்டது. இந்த வேலைத் திட் டத்தின் மூலம் எமது பாடசாலைப் பிள்ளை கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள் ஆகிய அனைவருக்கும் தெளிவான விளக்கங்கள் அறிவார்ந்த காட்சிகளின் ஊடாக காட்டப்பட்டன. அந்த வகையில் இதற்காக நிறையப் பேர் ஆதரவு வழங்கி யுள்ளார்கள். இந்த பங்களிப்பு தொடர்ந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**முன்னாள் கொழும்பு மாநகர முதல்வர் ஓமர் காமில் உரையாற்றும் போது;**

மிலேச்சத்தமான முறையில் பலஸ்தீன மக்களையும் பிள்ளைகளையும் பெண்க ளையும் கொடிய முறையில் கொன்றொழித் துக் கொண்டிருக்கின்ற தருணத்தில் அவர் களுடைய துன்பத்தில் நாங்களும் கலந்து கொள்வதையிட்டு பெரும் பாக்கியமாக கருதுகின்றோம். அவர்களுடைய மீட்சிக்கா கவும் நியாயத்திற்காகவும் வேண்டி அவர் களுக்கு ஆதரவு வழங்குவது இன்றைய ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன ஆத ரவுக்கான தினம் ஒரு பலமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பலஸ்தீன நாட்டு மக்கள் சர்வதேச நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டங்களையே மேற்கொள்கின்றனர். அவர்களுடைய நியாயமாக உரிமையை பெற்றுக் கொள் வதற்கு நாம் அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை யினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பலஸ்தீனத்திற்கு ஆதரவு வழங்குகின்ற சர் வதேச தினத்தில் அவர்களுடைய சுதந்திர தாய் நாட்டுக்கான உரிமையை பெற்றுக் கொடுக்க வேண்டியது உலக நாடுகளின் தார்மிகக் கடமையாகும்.

முன்னாள் பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்தின் ஆட்சி காலத்தில் இஸ்ரே லுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தி டப்பட்டது. அப்பொழுது இன்றைய பிரத மர் நெதன் யாகு எதிர்கட்சியில் இருந்தார். அவர் அப்பொழுது இந்த உடன்படிக் கைக்கு எதிராகச் செயற்பட்டார். அவர் ஒத்துழைப்பு வழங்கவில்லை. பலஸ்தீன மக்களின் சிறு குழைந்தைகள், சிறார்கள், பெண்கள், பொது மக்கள் என்று கொன் றொழிப்பதைப் பார்க்கும் போது பெரிய பரிதாபமாக இருக்கிறது. மனித அநீதிக்கு எதிராக உலக மக்கள் ஒருமைப்பட்டு செயற்படுவதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன் என்று தெரிவித்தார்.

**இதன்போது காமினி ஜயவீர நன்றியுரை நிகழ்த்துகையில்;**

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் பலஸ்தீனம் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. யுத்த இடம்பெறுவதற்கு முன்னர் நாங்கள் பலஸ்தீனம் தொடர்பான கண்காட்சியை நடத்துவதற்கு தீர்மானம் எடுத்திருந் தோம். இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வ தற்கு சகல மக்களும் கலந்து கொண்டமை மிக முக்கியமான விடயம் ஆகும். உலகில் பலஸ்தீன மக்களுக்கு அசாதாரணமான சம் பங்கள் இடம்பெற்று வருகின்றன. விசே டமாக அங்கு சிறுவர் கொலைகள், பெண் கொலைகள், மக்கள் மிக அதிகமானளவு கொலை இடம்பெற்றுவதை நாம் அறி கின்றோம். உலகில் எந்தவொரு மனிதர்க ளும் இந்த கொடூர ஈனச் செயலை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. உலக நாட்டு மக்கள் என்ற வகையில் இந்த அநியாயம் நடைபெறுவதைத் தடுப்பதற்கான அழுத் தங்களை பிரயோகிக்க வேண்டும் என்பது எமது வேண்டுகோளாகும்.

உலகில் எந்த நாட்டிலாவது யுத்தம் நடந் தாலும் மனிதப்படுகொலைகள் மனித னுக்கு மிகவும் பாதிப்பையே ஏற்படுத்தும். அந்த வகையில் பலஸ்தீனத்தில் யுத்தம் இடைநிறுத்தப்பட வேண்டும். மக்கள் கொன்றொழிக்கப்படுவது நிறைவுபெற வேண்டும். உலக நாடுகள் தலையிட்டு ஒவ்வொரு மக்களுடைய மனித உரிமைப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். பலஸ்தீன மக்களுக்கு அநியாயம் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக மக்கள் ஒன்றுபட்டு இந்த கோரிக்கையினை விடுக்கின்றோம்.

இதனையொட்டி கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். பௌத்த, முஸ்லிம் சமயத் தலைவர்கள், இந்து சமய குருக்கள், கிறிஸ்தவ சமய இறைபணியா ளர்கள் , பாடசாலை மாணவர்கள். சிங்கள, தமிழ். முஸ்லிம் வர்த்தகப் பிரமுகர்கள். கல் வியியலாளர்கள், சிவில் அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் இந்த நிகழ்வினை வலுப்ப டுத்துவதற்காக வருகை தந்த அனைவருக் கும் எமது நன்றிகள். விசேடமாக நாங்கள் நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு ஒரு நாள் ஒரு இலட்சம் விகிதம் 4 இலட் சம் அறவிடக் கூடிய திறந்தவெளி மண் டபத்தை இலவசமாக பலஸ்தீனத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த இடத்தை தந்துதவிய மங்கல மல்லவ ஆராய்ச்சிக்கு நாங்கள் விசேடமாக நன்றியைத் தெரிவித் தக்கொள்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்பால் அலி...

# 100 வீத சித்தியடைந்து சாதனை நிலைநாட்டிய கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

(ஓமந்தை விஷேட நிருபர்



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இருந்து 2022 ம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய 10 மாணவர்களும் சித்தியடைந்து நூறு வீத சித்தியை பதிவு செய்துள்ளனர்.

முல்லைதீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் ஒட்டுசுட்டான் மாங்குளம் பிரதான வீதியில் அமைந்திருக்கின்ற இந்த கரிப்பட்டமுறிப்பு அரசியல் தமிழ் கலவன் பாடசாலையானது அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்ற ஒரு பாடசாலை ஆகும்.

இங்கு மாணவர்களுக்கான உரிய போக்குவரத்து வசதிகள் இன்றி பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இதேபோன்று மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் இந்த பாடசாலைக்கு மிகவும் நெருக்கடியான போக்குவரத்து சேவைகளுக்கு மத்தியில் வருகை வந்து அவர்களுக்கான கற்ப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் 2022 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோன்றிய 10 மாணவர்களின் 10 மாணவர்களும் 100 வீத சித்தியை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்

அந்தவகையில் குகநேசன் யாழினி பன் 7A 2 B உதயந்தி கோபிதன் 6A 2C S விக்கினேஸ்வரன் அபிராமி 5A 3Bதேவராஜ் வினோதா 5A 2B C S

பத்மரஞ்சன் திருசாளினி 3A 3B 3Cசெல்வராசா பவிது 3A 4B C S

தயானந்தசெல்வன் தனோஜா2A 2B 3C 2S சுதாகரன் சுகந்தியா 2A 3B 3C S பத்மரஞ்சன் மதுமிலன் 2A B 5C Sபத்மநாதன் நிருபா A 2B 4C 2S ஆகிய பெறுபேறுகளை பெற்று சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளனர்.

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கருத்து தெரிவிக்கையில் தங்களுடைய வெற்றிக்கு காரணமாக அமைந்த பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு விசேடமாக கோண்டாவில் நலன்புரிச் சங்கத்தின் நிதி அனுசரணையில் துணுக்காய் ஒளிரும் வாழ்வு அமைப்பின் ஊடாக கடந்த ஐந்து வருடங்களாக தமக்கான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான விசேட வகுப்புகள் நடத்தப்பட்டதாகவும் இதன் ஆசிரியர்கள் இதனை ஒழுங்குபடுத்தியவர்கள் நிதி வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்தனர். அத்தோடு மாணவர்கள் தாங்கள் உயர்தர கல்வியை கற்பதற்கு இங்கு பாடசாலை இல்லாமல் பல மைல் தூரங்களுக்கு அப்பாலுள்ள பாடசாலைகளுக்கே செல்ல வேண்டியதாக இருப்பதாகவும் தமது பாடசாலையில் உயர்தர பிரிவை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## பேசாலை புனித பற்றிமா வித்தியாலயத்தில் 71 மாணவர்கள் உயர்தர வகுப்புக்கு தகுதி

(தலைமன்னார் விஷேட நிருபர்)

தற்பொழுது வெளி வந்திருக்கும் 2022 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர சாதாரணதரப் பரீட்சையில் மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையான பேசாலை புனித பற்றிமா மத்திய மகா வித்தியாலயமானது மன்னார் கல்வி வலயத்தில் முதன்மை அடிப்படையில் 43 பாடசாலைகளில் 19 வது இடத்தில் உள்ளது.

இப்பாடசாலையில் இப்பரீட்சைக்கு 104 மாணவர்கள் தோற்றியதில் 71 மாணவர்கள் அதாவது 68.3 வீதமானோர் சித்தி அடைந்துள்ளனர். 03 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையவில்லை. இதன் பிரகாரம் இப்பாடசாலையின் முதல் பத்து நிலைகளை பெற்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு, சீ.மேரி கனிசியா மிராண்டா 9ஏ. என். நிக்சிக்கா குரூஸ் 8ஏபி, ஏ.சன்மினி கூஞ்ஞ 8ஏபி, ஜே.சஞ்சீவன் குலாஸ் 8ஏபி, பி.டிவோனி வில்வராயர் 7ஏ2பி, ஆர்.செரோனி பச்சேக் 7ஏ2பி , என்.ரக்சிக்தா குரூஸ் 7ஏ2பி, ஆர். கோபிகா 7ஏபிசீ, ஜே.மிஷாலி பீரீஸ் 7ஏபிசீ, எஸ்.செனித் பாய்வா 7ஏபிசீ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அச்சுவேலியில் விபத்து – இளைஞன் பலி

(யாழ் விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலி நாவற்காடு பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

புத்தூர் பகுதியைச் சேர்ந்த சிவநேசன் சியான் (வயது 22) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விற்பனை நிறுவனம் ஒன்றின் பட்டா ரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

# க.பொ.த. சா.தரத்தில் இரண்டாம் இடத்தை பெற்ற வேம்படி அக்செயா அனந்தசயனன்

(யாழ். விசேட நிருபர்)



கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்ற யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த அக்செயா அனந்தசயனன், மருத்துவராவதே தனது இலட்சியம் என்றார்.

சிறந்த பெறுபேற்றை பெற்றமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

க.பொ.த.சாதாரணதர பரீட்சையில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதில் தமிழ் இனத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது பெருமையாக உள்ளது. பெறுபேற்றை கல்வி நடவடிக்கையில் ஒரு படிக்கல்லாகவே பார்க்கிறேன். உயிரியல் கற்கையை தெரிவு செய்து மருத்துவ பீடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதே எனது இலட்சியம். பெற்றோருக்கும், பாடசாலை சமூகத்தினருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

விஞ்ஞான பாடத்திற்கும் ஆங்கில இலக்கியம், சிங்களம் ஆகிய தொகுதி பாடங்களுக்குமே தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சென்றேன். கணித பாடத்தை தரம் ஆறு முதல் தந்தையிடமே கற்றேன். சாதாரண தர மாணவர்கள் சாதாரண பரீட்சையை உயர்தரத்திற்கான சிறு வழிகாட்டாலாக கருதி எதிர்கொள்ள வேண்டும் என்றார்.

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளில் தேசிய ரீதியில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த அக்செயா அனந்தசயனன் 9 ஏ பெறுபேறுகளை பெற்று இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.

குறித்த மாணவியின் தந்தை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கணித விரிவுரையாளராகவும் தாய் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றனர்.

# துணுக்காய் வலயத்தில் சாதனை படைத்த யோகபுரம் மகாவித்தியாலயம்!



(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தில் மு.யோகபுரம் மகாவித்தியாலயம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றில் சாதனை படைத்துள்ளது. அண்மையில் வெளியாகிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 55 மாணவர்கள் தோற்றி 48 மாணவர்கள் உயர்தரக்கல்வியை தொடரக் கூடியவகையில் சித்தியடைந்தள்ளனர்.செல்வி புவனநாயகம் கார்விழி, செல்வி சசிகுமார் அட்சயா, செல்வன் தேவசுதன் மகிழவன், செல்வன் கேதீஸ்வரன் வாணுஜன் ஆகிய 04 மாணவர்களும் 9A சித்தியினை பெற்றுள்ளனர்.

செல்வி ரஞ்சன் பிறைவிழி 8A, B சித்தியினை பெற்றுள்ளதோடு 7A 2B சித்தியினை செல்வன் ரஜிந்தன் மலராஜிதன் 7A 2Bயும் பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள். இவர்களுடன் இணைந்த ஏனைய 42 மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இது மட்டுமல்லாமல் அண்மையில் வெளியாகிய உயர்தர பரீட்சையில் இப்பாடசாலை மாணவர்கள் மூவர் 3A சித்திகளைப் பெற்றுள்ளனர். இவ்வருடம் இதுவரையும் 9 மாணவர்கள் பல்கலைக்கழகம் தொிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




# கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் 83 வீதமான மாணவர்கள் உயர்தரத்திற்கு சித்தி

(ஹட்டன விசேட நிருபர்)

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் வெளியாகிய க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 83 சதவீதமான மாணவர்கள் உயர்தரத்திற்கு சித்தி பெற்றுள்ளதாகவும் அதில் ஐந்து மாணவர்கள் ஒன்பது பாடங்களில் ஏ சித்தியினை பெற்றுள்ளதாகவும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் அதிபர் இரா சிவலிங்கம் தெரிவித்தார்.

கல்வி பொது சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் ...

நுவரெலியா கல்வி வலயத்தில் கடந்த சில வருடங்களாக எட்டு பாடங்களில் தொடர்ச்சியாக நூறு சதவீதமான சித்தியினை பெற்றுக்கொடுத்திருப்பதாகவும் தொடர்ந்து கல்வியில் இந்த பாடசாலை வளர்ச்சியினை நோக்கி பயணித்துக்கொண்டிருகிறது.

கொட்டகலை தமிழ் வித்தியாலய தேசிய பாடசாலை 1931 ஆண்டு ஹூட்டன் தோட்டத்தில் ஒரு தோட்டப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. மலையகத்தில் இன்று ஒரு பெயர் சொல்லக்கூடிய ஒரு பாடசாலையாக குறித்த பாடசாலை வளர்ச்சிபெற்றிருக்கிறது.

இந்தப் பாடசாலையில் தற்போது 2300 மாணவர்கள் கல்வி கற்பதாகவும், 92 ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதாகவும், இதில் 90 சதவீதமான மாணவர்கள் தோட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அண்மையில் வெளியான உயர்தர பெறுபேற்றில் 50 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியிருப்பதாகவும் கணிதப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் 02 இடத்தினை பெற்றிருப்பதாகவும், தொழிநுட்ப ஆய்வு கூட வசதிகள் இல்லாத நிலையில் குறித்த துறையில் ஈடெக் பிரிவில் 10 இடத்தினை பெற்றிருப்பதாகவும்,உயரியல் பிரிவில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினை பெற்றிருப்பதாகவும் அண்மையில் வெளிவந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையிலும் 34 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலாக பெற்று சித்தி பெற்றிருப்பதாகவும் அவர் இதன் போது மேலும் தெரிவித்தார்.



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய நாடக போட்டியில், தமிழ் மொழி மூலமான குறுநாடகப்போட்டியில் பொகவந்தலாவையைச் சேர்ந்த கிலின்றனின் 'மனிதி' குறு நாடகம் மொத்தமாக ஆறு விருதுகளை சுவீகரித்து சிறந்த நாடகமாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறத்த நடிகையாக இதே நாடகத்தில் நடித்த கவரவலையைச் சேர்ந்த கிருஸ்டினா தெரிவுசெய்யப்பட்டார்.








கல்விக்கு கரம் கொடுப்போரை வாழும்போதே வாழ்த்துவோம் என்ற தொனிப் பொருளிலான கௌரவிப்பு விழா, மாத்தளை கல்வி வலயத்திற்குட்பட்ட உன்னஸ்கிரிய வாணி தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் க.மேகவர்ணண் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் எல்கடுவை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் மாணிக்கம் தியகராஜாவும் கம்மடுவை தமிழ் மகா வித்தியாலய ஆசிரியரும் அகில இலங்கை சமாதான நீதவான் ஜயகுமார் ஷானும் கலந்து கொண்டனர்.

## உமா அறக்கட்டளையின் தலைவர் தீபன் ஏற்பாட்டில் கண்டியில் ஆளுமை விருது

(அக்குறணை குறூப் நிருபர்)

உமா அறக்கட்டளையின் தலைவர் தேசபந்து எம். தீபன் ஏற்பாடு செய்துள்ள ஆளுமை விருதுவிழாவொன்று எதிர்வரும் 9ம் திகதி கண்டியில் இடம்பெற உள்ளது.

வாழும் போதே வாழ்த்தும் இவ்விழாவில் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் இடம்பெற உள்ள இவ்வைபவத்தை உமா அறக்கட்டளையின் தலைவர் தேசபந்து எம். தீபன் ஏற்பாடு செய்துள்ளார். கண்டி கெப்பிட்டிப்பொல மண்டபத்தில் 9ம் திகதி பி.ப 1 மணிக்கு இவ்விழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டளர்கள் அனைத்து கலைஞர்களையும் அழைக்கின்றனர்.

# சிறு விளம்பரம்








106

## கார்கள் விற்பனைக்கு

KU-8253 TATA NANO, 2012, கார் அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி , இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1 4 5 4 295 8 . 079471

111

## ஹொண்டா கார்கள் விற்பனைக்கு

CAM-7661 HONDA GRACE 2015, , கார் அதியுயர் வி லைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 079473

KN-3874 HONDA CIVIC 2011, கார் அதியுயர் வி லைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 079477

113

## சுசூகி கார்கள் விற்பனைக்கு

CAP-5067 SUZUKI ALTO 2016, , கார் அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிள ல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 079474





119

## பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

LD-7497 SUZUKI FREEZER TRUCK, 2002, அதியுய ர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 079469

LH-6529 ISUZU, 2006, லொறி அதி யுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 079482

NW -LF-4653 TATA AC E, MOTOR LO RRY -2008, IRISH CREAM கூடிய விலை க் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீ தி, கண்டி. தொ.பே. 0812 081033. 079587

PS-9093 TATA ACE 2011, கார் அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 295 8 . 079480



122

## மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAZ-3076 BAJAJ, 2015, முச்சக்கர வண்டி அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி , இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 0 5 9 9 916 3 . 079470

QH-5894 BAJAJ, 2006, QT - 9 3 2 2 BAJAJ, 20 0 9 முச்சக்கரவண்டி அ தி யு யர் வி லைக்கு. வெ லிபல் பினான்ஸ் பி எல்சி , இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 1 2 1 081 0 . 079476




## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் மற்றும் Toner, Ribbon, Cartridge, Photoconductors வழங்குதல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைத்தல்

1. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைக்கோரல் ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மற்றும் உறுதியாக தரப்பட்டுள்ள வகையில் அலுவலக காகிதாதிகள் மற்றும் டோனர் வழங்குதல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைப்பதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | விபரங்கள் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | மீளளிக்கப்படாத விலைக்கோரல் ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| FIN/S/ S4/10/2023 | காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகளை வழங்குதல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைத்தல் | 242,000.00 | 3,500.00 |
| FIN/S/ S13/46/2023 | Toner, Ribbon, Cartridge, Photoconductors வழங்குதல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைத்தல் | 130,000.00 | 3,500.00 |

2. விலைக்கோரல்கள், தேசிய பெறுகை வழிகாட்டியில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேசிய போட்டிரீதியிலான செயற்பாடுகளுக்கமைய (NCB) விலைக்கோரல் நடைமுறைகள் இடம்பெறும் என்பதுடன் அந்த பெறுகை வழிகாட்டியின் தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ள சகல விலைமனுதாரர்களுக்கும் இது திறக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் + 94 112 135335 மற்றும் arachchi.cdl@ird.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரி மூலம் 2023-12-04ஆம் திகதி முதல் 2023-12-18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வம் கொண்ட விலைமனுதாரர்கள் வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்துருவிலான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் 3,500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியதன் பின் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மட்டுமே மேற்கொள்ளுதல் வேண்டும்.
5. விலைமனுக்களை 2023-12-19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுற்ற உடனடுத்து பின்வரும் முகவரியில் 2023-12-19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**வழங்கல் பிரிவு, 13ஆம் தளம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு**

**தென்னைப் பயிர்ச்செய்கை சபை**

## தென்னங்கன்றுகளின் போக்குவரத்துக்கான விலைமனுக் கோரல் – 2024

**பெறுகை இலக்கம்: E/7/G/CP/TRA/2024**

01. தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்காக திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் 2024 ஆம் ஆண்டுக்காக நிவாரணத் திட்டம் மற்றும் வேறு விசேட திட்டங்களுக்காக பொதியிடப்பட்ட தென்னங்கன்றுகள்/ நிலத்தில் பயிரிடப்பட்ட கன்றுகளை கீழுள்ள மாவட்டங்களுக்குள் மற்றும் வெளியில் எடுத்துச் செல்வதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | பிராந்திய அலுவலகம் | முகவரி | தொலைபேசி இலக்கம் | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 9A வீதி, தர்மகேனர், பளை, கிளிநொச்சி | 021-2284501 | யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு |
| 02 | வவுனியா | இலக்கம் 25, பத்தினியார், மஹிலன்குளம், தாண்டிக்குளம், வவுனியா | 024-2050344 | வவுனியா/ மன்னார் |
| 03 | குருநாகல் | வேஹர, குருநாகல் | 037-2222534 | குருநாகல் |
| 04 | குளியாப்பிட்டி | இலக்கம் 20, பன்னல வீதி, குளியாப்பிட்டி | 037-2281169 | |
| 05 | மாரவில | முஹுது கட்டுவ, மாரவில | 032-2254237 | புத்தளம் |
| 06 | மாத்தளை | கண்டி வீதி, கொஹொம்பிலிவல, மாத்தளை | 066-2222047 | கண்டி, மாத்தளை, நுவரெலியா |
| 07 | பொலன்னறுவை | பொலன்னறுவை, புதிய நகர் | 024-2222377 | பொலன்னறுவை |
| 08 | அம்பாறை | தர்மபால மாவத்தை, கச்சேரி முன்னால், அம்பாறை | 063-2222477 | அம்பாறை |
| 09 | மொனராகலை | ஹுலன்தாவ தெற்கு, மொனராகலை | 055-2276058 | மொனராகலை/ பதுளை |
| 10 | களுத்துறை | நாகொட, களுத்துறை | 034-2222732 | களுத்துறை/ கொழும்பு |
| 11 | இரத்தினபுரி | புதிய நகர், இரத்தினபுரி | 045-2228561 | இரத்தினபுரி |
| 12 | காலி | லபுதுவ, அக்மீமன, காலி | 091-2234501 | காலி |
| 13 | மாத்தறை | 331/9 அனகாரிக்க தர்மபால மாவத்தை, நுபே, மாத்தறை | 041-2222060 | மாத்தறை |
| 14 | ஹம்பாந்தோட்டை | 27, தங்கல்ல வீதி, ஹம்பாந்தோட்டை | 047-2220144 | ஹம்பாந்தோட்டை |
| 15 | அநுராதபுரம் | 111 கட்டம், தஹையாகம சந்தி, அநுராதபுரம் | 025-2222543 | அநுராதபுரம் |
| 16 | மட்டக்களப்பு | அயிலம்பவெலி, தன்னமுனை, மட்டக்களப்பு | 065-2240103 | மட்டக்களப்பு |
| 17 | கம்பஹா | பெண்டியமுல்ல, கம்பஹா | 033-2222037 | கம்பஹா |
| 19 | கேகாலை | கண்டி வீதி, கரடுபன, கேகாலை | 035-2222120 | கேகாலை |
| 20 | திருகோணமலை | கும்புருப்பிட்டி, திருகோணமலை | 026-2054018 | திருகோணமலை |

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் மேல் குறிப்பிடப்பட்ட பிராந்திய அலுவலகத்தின் மூலம் மேலதிக விபரங்களை பெற முடியும் என்பதோடு, மேல் குறிப்பிடப்பட்ட பிராந்திய அலுவலகத்தின் மூலமும் தலைமை அலுவலகத்தின் மூலமும் வாரத்தின் கடமை நாட்களில் 2023.12.04 ஆம் திகதி தொடக்கம் 2023.12.27 ஆம் திகதி வரை மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை விலைமனுக் கோரல் படிவம் உட்பட விபரங்கள் அடங்கிய ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
03. ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களினால் எழுத்துமூலம் கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்த பின் மீளளிக்கப்படாத ரூபா 1,000.00 தொகையை தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் மேல் குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய அலுவலகத்தின் காசாளருக்கு அல்லது தலைமை அலுவலகத்தில் காசாளருக்கு செலுத்திய பின் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த விலைமனுக் கோரலின் ஆவணத் தொகுதி ஒன்றை 2023.12.27 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ள முடியும்.
04. நிர்ணயிக்கப்பட்ட வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை, போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற மாவட்டத்திற்கு சொந்தமான மேல் குறிப்பிடப்பட்டுள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் குறித்த பிராந்திய அலுவலகத்திற்கு 2023.12.28 ஆம் திகதி மு.ப. 2.00க்கு முன்னர் கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023.12.28 ஆம் திகதி பி.ப. 2.00க்கு விலைமனுக்களை ஏற்பது நிறைவடைந்த உடன் குறித்த பிராந்திய அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு, விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும்.
05. உங்களது விலைமனு ஆவணங்களை முத்திரையிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "தென்னங்கன்றுகளின் போக்குவரத்துக்கான விலைமனுக் கோரல் - 2024" என்று குறிப்பிட்டு போக்குவரத்து சேவையை வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற மாவட்டத்திற்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தென்னைப் பயிர்ச்செய்கை பிராந்திய அலுவலகத்தின் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2023.12.28 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் கிடைக்குமாறு அல்லது 2023.12.28 ஆம் திகதி பி.ப. 2.00 முன்னர் குறித்த பிராந்திய அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**தென்னைப் பயிர்ச்செய்கை சபை,**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**
**தொ.பே. 011-2861331, தொலைநகல்: 0112861332**

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)**

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024ஆம் வருடம்

இந்த அதிகார சபைக்கு 2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொருட்களுக்கான வழங்கல் தலைப்புகள்**

1. அனைத்து வகையான கருங்கற்கள் வழங்குதல் (1/2'', ¾ '',1 ½ '', 6x9" மற்றும் ஏ.பி.சீ. (கலப்புக் கற்கள்) / கற் துகள்கள்)
2. ஆற்று மணல் / கழுவிய மணல் வழங்குதல் / கடல் மணல் வழங்குதல்
3. மண் வழங்குதல்
4. ரெடிமிக்ஸ் கொங்கிரீட் வழங்குதல்
5. அஸ்போலட் கொங்கிரீட் வழங்குதல்
6. தார் மற்றும் தார் சார்ந்த உற்பத்திகள் (இமல்ஷன்) வழங்குதல்
7. தர்மோ பிளாஸ்டிக் வீதி அடையாள பவுடர் வழங்குதல்
8. அளத்தல் மற்றும் நிர்மாண ஆராய்ச்சி உபகரணங்களை வழங்குதல்
9. உருக்குக் கம்பி/அலுமாரி/மேசை கதிரைகள் வழங்குதல்
10. Iron Bars மற்றும் துணைப்பாகங்கள் / கேபியன் வலை / அமானோ சீட்கள் என்பவற்றை வழங்குதல் (H Iron / Box Bar / GI Bar etc)
11. கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல் (Hardware)
12. கணனி மென்பொருள் வழங்குதல் (Software)
13. அலுவலக வளிச்சீராக்க இயந்திரங்கள் வழங்குதல் / திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
14. டயர், டியூப் மற்றும் கொலர்கள் வழங்குதல் (இலகுரக வாகனங்கள் / கனரக வாகனங்கள் / நிர்மாண இயந்திராதிகள்)
15. அலுவலக காகிதாதிகள் வழங்குதல்
16. வீதிப் பராமரிப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் (மண்வெட்டி, அரிவாள், வீல்பரோ போன்றன)
17. ஆய்வுகூட உபகரணங்கள் (பெருந்தெருக்கள் நிர்மாணத்திற்கானவை)
18. அச்சு வேலைகள்
19. மின்சார உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல்
20. கட்டிடப் பொருட்கள் வழங்குதல் (சீமெந்து / உருக்குக் கம்பி / நிறப் பூச்சுகள் மற்றும் ஏனைய கட்டிடப் பொருட்கள்)
21. இலகுரக வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளுக்கான உதிரிப்பாகங்கள் வழங்குதல்
22. புகைப்படப் பிரதி இயந்திரங்கள் / ஸ்கானர் இயந்திரங்கள் / தொலைநகல் இயந்திரங்கள் / விரல் ரேகை பதிவு இயந்திரங்கள் வழங்குதல்
23. கணனி அச்சுப் பொறிகளுக்கான டோனர் வகைகள் மற்றும் கார்ட்ரிஜ் வழங்குதல்
24. ஊழியர் நலன்புரி (பாவனைப் பொருட்கள்) மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள், கிருமிநாசினி நடவடிக்கைகளுக்கான பொருட்கள் வழங்குதல்
25. வீதிப் பராமரிப்பு இயந்திரோபகரணங்கள் வழங்குதல்
26. இன்டர்லொக் கற்களை வழங்குதல் மற்றும் பதித்தல்
27. உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள் வழங்குதல்

**02. சேவைகளுக்கான வழங்கல் தலைப்புகள்**

28. வாடகை அடிப்படையில் வான்/கார்களை வழங்குதல்
29. வாடகை அடிப்படையில் லொறி/டிப்பர் வண்டிகளை வழங்குதல்
30. வீதி அபிவிருத்தி இயந்திரப் பொருட்களை வாடகைக்கு வழங்குதல்
31. வாகன சேவைகளை வழங்குதல்
32. வீதிப் பெயர்ப் பலகைகள் / டிஜிட்டல் பதாகைகள் / இலச்சினைகள் மற்றும் ஏனைய தேவையான பெயர்ப் பலகைகள் / ஸ்டிக்கர் வரைதல் மற்றும் தயாரித்தல்
33. கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல்
34. அளத்தல் வேலைகளை மேற்கொள்ளுதல்
35. வாகன மின்னியல் சேவைகளை வழங்குதல்
36. வாகன வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள்
37. கனரக வாகனம் / இலகுரக வாகனம் / இயந்திரங்களின் திருத்தவேலை சேவைகள் வழங்குதல்

**04. பதிவுசெய்து கொள்வதற்கான நிபந்தனைகள்**

வழங்குநர்களாக பதிவுசெய்துகொள்ள ஆர்வமுடையவர்கள், மேற்படி ஒவ்வொரு வழங்கல் தலைப்பிற்காகவும் 1178.75 ரூபா மீளளிக்கப்படாத (வட் வரியுடன்) விண்ணப்பப்படிவக் கட்டணத்தை இந்த அதிகார சபையின் தலைமை அலுவலகம் அல்லது பின்வரும் கிளை அலுவலகங்களில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் முறையாகப் பூர்த்தி செய்து விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023-12-01ஆம் திகதி முதல் 2023-12-30ஆம் திகதி வரையில் இடம்பெறும்.

**கொழும்பு மாவட்டம்**

| | |
|---|---|
| பிரதான அலுவலகம் | - 011-4849825/45 |
| கொழும்பு நி.பொ. அலுவலகம் | - 011-2578848 |
| மொரட்டுவ நி.பொ. அலுவலகம் | - 011-2655629 |
| அவிசாவளை நி.பொ. அலுவலகம் | - 011-2750795 |
| இரத்மலானை நி.பொ. அலுவலகம் | - 011-2610136 |

**கம்பஹா மாவட்டம்**

| | |
|---|---|
| பிரதான பொறியியலாளர் அலுவலகம் | - 033-2051776 |
| உடுகம்பொல நி.பொ. அலுவலகம் | - 033-2222493 |
| நிட்டம்புவ நி.பொ. அலுவலகம் | - 033-2287237 |
| நீர்கொழும்பு நி.பொ. அலுவலகம் | - 031-2233621 |
| கிரிந்திவெல நி.பொ. அலுவலகம் | - 033-2267467 |
| அஸ்கிரிய இ.பொ. அலுவலகம் | - 033-2226848 |

**களுத்துறை மாவட்டம்**

| | |
|---|---|
| பிரதான பொறியியலாளர் அலுவலகம் | - 034-2238260 |
| களுத்துறை நி.பொ. அலுவலகம் | - 034-2222641 |
| ஹொரண நி.பொ. அலுவலகம் | - 034-2261215 |
| அகலவத்த நி.பொ. அலுவலகம் | - 034-2247399 |
| மொரகஹஹேன இ.பொ. அலுவலகம் | - 034-2253288 |

05. அவ்வாறே மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் பின்வரும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.
06. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ''தலைவர், பெறுகைக் குழு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித. செபஸ்தியன் மேடு, கொழும்பு-12'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2024 ஜனவரி மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். இயைபுடைய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024ஆம் வருடம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
07. போதுமான வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படாத வேளைகளில் அந்த பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக திறந்த விலைகளைக் கோரும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**
**இல 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு - 12**
**தொலைபேசி இலக்கம்: 011- 4849425/45**

**வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2024ஆம் வருடம்**

01. வழங்குநரின் முழுப் பெயர்: ..........
(வழங்குநர் / அதிகாரபூர்வ அலுவலர்)
02. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..........
03. பிரத்தியேக முகவரி: ..........
04. வியாபார நிறுவனத்தின் பெயர்: ..........
05. வியாபார நிறுவனத்தின் முகவரி: ..........
06. தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம்: ..........
07. வழங்கல் தலைப்பு: ..........
(வழங்குவதற்கு உத்தேசிக்கும் பொருள்/சேவை தலைப்பு) (வழங்கல் தலைப்பை எழுத்தில் குறிப்பிடவும்)
08. காசாளரிடம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம்: ..........
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைக்கவும்)
09. வியாபாரப் பதிவு விபரங்கள்: ..........
(வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
10. முன்னைய வழங்கல்கள் தொடர்பான அறிக்கை: ..........
(உறுதி செய்வதற்காக சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
11. வெட் வரி பதிவிலக்கம்: ..........
(பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்)

..........
**கையொப்பம்**
**(உத்தியோகபூர்வ முத்திரை)**

..........
**திகதி**

**வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்**
**வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல்- 2024ஆம் வருடம்**

01. வாகன உரிமையாளர் / நிறுவனத்தின் பெயர்: ..........
02. முகவரி: ..........
03. தேசிய அடையாள அட்டை இல : ..........
04. வெட் வரி பதிவிலக்கம்: ..........
05. தொலைபேசி இலக்கம்: ..........
06. வாகனத்தின் வகை மற்றும் மாதிரி: ..........
07. வாகனத்தின் பதிவு வருடம்: ..........
08. டிப்பர் / லொறிக்கான கொள்ளளவு (கியூப்): ..........
9. என்ஜின் கொள்ளளவு : ..........
10. வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தும் வகையில் முழுமையான காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி
11. இவ்வாறான வாடகை வாகன சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் உள்ளதாயின் அதன் விபரங்கள்

விண்ணப்பப் படிவத்துடன் இயைபுடைய வாகனத்தின் வருமான அதிகாரப்பத்திரத்தின் பிரதியையும் காப்புறுதிச் சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

..........
**வாகன உரிமையாளர் கையொப்பம்**
**(உத்தியோகபூர்வ முத்திரை)**

..........
**திகதி**

# பெறுகை அறிவித்தல்

## ஆதனங்களை குத்தகைக்கு விடுதல் - 2024 ஆம் ஆண்டு

## வீரகெட்டிய பிரதேச சபை

வீரகெட்டிய பிரதேச சபையிடம் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களில் 2024 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்திற்காக குத்தகை அறவிடுதல்/ அறுவடையை பெறும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

2023.12.04 ஆம் திகதி மு.ப. 8.30 தொடக்கம் 2023.12.18 ஆம் திகதி பி.ப. 3.00 வரை கேள்விமனுப் படிவம் வழங்கப்படுவதோடு தமது தேசிய அடையாள அட்டையை அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை ஒன்றை சமர்ப்பித்து குறித்த கேள்விமனு பிணைத் தொகை மற்றும் படிவக் கட்டணங்களை பணமாகச் செலுத்திய பின் கேள்விமனுப் படிவம் மற்றும் கேள்விமனு நிபந்தனைகளை இந்த அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விமனுப் படிவத்தை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என 02 பிரதிகளைக் கொண்டதாக முத்திரை இடப்பட்ட படிவத்தை ஒற்றை உறையில் இட்டு 2023.12.19 ஆம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் வீரகெட்டிய பிரதேச சபையில் உள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது அன்றைய தினம் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

2023.12.19 ஆம் திகதி மு.ப. 10.10க்கு கேள்விமனுக்கள் திறக்கப்படும். கேள்விமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் அதிகாரம் வீரகெட்டிய பிரதேச சபையின் கேள்விக் குழு வசமானது என்பதோடு, கேள்விமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு கேள்விமனுதாரருக்கு அல்லது அவரின் பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கம் - 0472246375**

| வரிசை இல | விபரம் | விலைமனு தொகை | கேள்விமனு வைப்புத் தொகை (மீளளிக்கப்படும்) | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | வீரகெட்டிய பொதுச் சந்தை | 8,045,455.00 | 100,000.00 | 5,000.00 |
| 2 | மொரயாய பொதுச் சந்தை | 1,580,040.00 | 25,000.00 | 2,000.00 |
| 3 | தெ/ கனுமுல்தெனிய மயான பூமியின் தெங்கு அறுவடை | 5000.00 | 1,000.00 | 250.00 |
| 4 | பெதிகம கோமஹேன கல்ஹெரஸ்ஸ (நாமல்வத்த) காணியின் தெங்கு அறுவடை | 38,660.00 | 2,000.00 | 250.00 |
| 5 | வலஸ்முல்ல மயான பூமியின் தெங்கு அறுவடை | 6,800.00 | 1,000.00 | 250.00 |
www.observerjobs.lk

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**கல்வி அமைச்சு**

**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்**

## குருநாகல், இரத்தினபுரி மற்றும் நாவலப்பிட்டி ஆகிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு (ATIs) சுகாதார சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் – 2024/2025

கீழேயுள்ள முகவரியில் அமைந்துள்ள அதனது உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனங்களுக்கு சுகாதார சுத்திகரிப்பு சேவைகளுக்காக பதிவு பெற்ற வியாபார நிறுவனங்களிலிருந்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| | நிறுவனம் | தொடர்பு இலக்கம் |
|---|---|---|
| 01. | ATI-குருநாகல், 22/1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2229583/ 037-2224911 |
| 02. | ATI -இரத்தினபுரி, புதிய நகரம், இரத்தினபுரி | 045-2231492/ 045-2231493 |
| 03. | ATI-நாவலப்பிட்டி, இல. 15-1/6, Back Street, கம்பளை வீதி, நாவலப்பிட்டி | 054-2050634 |

ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.12.05 ஆம் திகதியிலிருந்து 2023.12.26 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் உரித்தான நிறுவனத்தின் நிதிப் பிரிவில் மீளளிக்கப்படாத கட்டணமான 3000 ரூபாவை செலுத்திய பின்னர், பணக்கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து உரித்தான நிறுவன (ATI) நிதி பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். ஒரு நிறுவனத்திற்கு மேலதிகமாக விலைமனுவை சமர்ப்பிக்க விரும்பினால் பணிப்புரைகளை பெறுவதற்காக தலைமையலுவலக பெறுகைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி: 011-2691307 நீடிப்பு. 233)

அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் வருடாந்த ஒப்பந்த விலைமனுப் பெறுமதியின் 1% இற்கான விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமானதும் எந்தவொரு வர்த்தக வங்கியொன்றிலிருந்தும் பெறப்பட்டதும் ‘‘உரித்தான நிறுவன பணிப்பாளரின்’’ பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டதும் முத்திரையிடப்பட்டதுமான விலைமனுக்கோரல் ஆவணங்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Providing Janitorial Services for (name of the relevant Institute) 2024/25’’ என குறிப்பிடப்பட்டு உரித்தான நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனு ஆவணங்கள் 2023.12.27 ஆம் திகதியன்று ஒவ்வொரு நிறுவனத்திலும் பி.ப. 2 மணிக்கு முன்னராக பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

உரித்தான நிறுவனத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மேலதிக தகவலானது பெறுகைப் பிரிவு, இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம், 320, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரியிலிருந்து (தொலைபேசி: 011-2691307 நீடிப்பு 233) அல்லது வேலை நாட்களில் உரித்தான நிறுவன பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு விபரங்களுக்கு www.sliate.ac.lk என்ற முகவரியை பார்வையிடவும்.

**விலைமனுதாரர்கள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக இடப்பரப்பை பார்வையிட்டு பரீட்சிப்பதுடன் விபரங்கள், தன்மை மற்றும் சேவைகளின் தேவைப்பாடுகளுடன் தம்மை பரிச்சயப்படுத்திக் கொள்வதுடன் அனைத்து அடங்கல்களுக்கும் விலைமனுக்கூறல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்,**
**320, T.B. ஜயா மாவத்தை, கொழும்பு-10**

# துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**பயணிகள் புறப்பாடு, சரிபார்த்தல் (Check-in) மற்றும் SATELLITE BOARDING GATES மற்றும் பொதி கையாளும் அமைப்புக்கான திறனை மேம்படுத்துவதற்கு புதிய கட்டிடத்தின் நிர்மாணம் (பொதி 1)**

**விலைமனு இல.:** 113/T/2023

பின்வரும் குறைந்தபட்ச தேவைகளை பூர்த்தி செய்யும் நிர்மாண நிறுவனங்கள்/ கூட்டு முயற்சிகளிடம் இருந்து இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் (BIA) ‘‘பயணிகள் புறப்பாடு, சரிபார்த்தல் (Check-in) மற்றும் SATELLITE BOARDING GATES மற்றும் பொதி கையாளும் அமைப்புக்கான திறனை மேம்படுத்துவதற்கு புதிய கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக (பொதி 1)’’ விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட் சார்பில் நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவினால் (SCAPC) விலைமனுக்கள் கோரப்படுகின்றன:

(a) சொந்தத் திறன் கொண்ட அல்லது கூட்டு முயற்சி அங்கத்தவர் ஒருவரான அனைத்து உள்நாட்டு விலைமனுதாரர்களும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) பதிவு செய்திருத்தல் வேண்டும். கட்டிட நிர்மாண நிபுணத்துவத்தில் CS2 தரத்தின் கீழ் CIDA பதிவு ஒன்றை பெற்ற ஒற்றை நிறுவனம் அல்லது கூட்டு முயற்சியின் குறைந்தது ஒரு கூட்டாளராக விலைமனுதாரர் இருத்தல் வேண்டும். கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் நிர்மாண வேலையில் சராசரி ஆண்டுப் புரள்வு குறைந்தது 10 பில்லியன் இ. ரூபா (10,000,000,000.00) இருத்தல் வேண்டும்.

(b) ஒற்றை நிறுவனம் அல்லது கூட்டு முயற்சி கூட்டாளராக (ஒவ்வொரு அங்கத்தவருக்குமாக) அனைத்து வெளிநாட்டு விலைமனுதாரர்களும் தமது பூர்வீக நாட்டின் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் ஒரு ஒப்பந்ததாரராக செல்லுபடியான பதிவொன்றை பெற்றிருத்தல் வேண்டும். ஒருவேளை உள்நாட்டு கூட்டாண்மையாளர் ஒருவருடனான கூட்டு முயற்சியாக இருந்தால், உள்நாட்டு கூட்டாண்மையாளர் CS2 தரத்தின் கீழ் (கட்டிட நிர்மாணம்) CIDA பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.

கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் நிர்மாண வேலைகளில் சராசரி ஆண்டுப் புரள்வு குறைந்து ஐம்பது மில்லியன் (50,000,000) அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு இணையாக இருத்தல் வேண்டும்.

(c) நிர்மாண வேலைக்காக கிடைக்கப்பெறும் வங்கிக் கடன் வரம்பு குறைந்தது ஏழு மில்லியன் (7,000,000) அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு இணையானதாக இருத்தல் வேண்டும் என்பதோடு கடன் வரம்பை உள்ளடக்கிய வங்கி உறுதி ஒன்றை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(d) விலைமனுதாரர் 2022/2023 நிதி ஆண்டுக்கான சாதகமான நிகர சொத்துகளுடன் இருப்புநிலை குறிப்பை கொண்டிருத்தல் வேண்டும்.

(e) நேரத்திற்கு திட்டத்தை பூர்த்தி செய்வதை நிரூபிக்கும் பதிவுகள்

எந்த ஒரு நாட்டினரின் நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு திறந்திருக்கும். கூட்டு முயற்சிகளாயின், ஒட்டுமொத்த வேலைக்காகவும் கூட்டு முயற்சிக்கான அனைத்து தரப்புகளும் கூட்டாக மற்றும் பலவாக பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 200,000.00 இலங்கை ரூபா அல்லது 600 அமெரிக்க டொலர்களை செலுத்தி இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவில் இருந்து 2023.12.04ஆம் திகதி வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024.01.17 ஆம் திகதி வரையில் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும். தவிர, ஒன்லைன் கொடுப்பனவை மேற்கொண்டு www.airport.lk என்ற இணையதளத்தில் இருந்து ஆவணத்தை தரவிறக்கம் செய்ய முடியும். மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

விலைமனுக்களை ஏற்பது 2024.01.18 ஆம் திகதி 14.00 மணிக்கு நிறைவடைவதோடு இலங்கை, கொழும்பு 01, உலக வர்த்தக மையம், மேற்கு கோபுரம், கட்டம் 30, துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, விமான சேவைகள் பிரிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அதன்பின் உடன் விலைமனுக்கள் திறக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024.01.18 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது மேலுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து சமர்ப்பிக்கப்படுபவை நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாது திருப்பித்தரப்படும்.

அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணத்தில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட 200,000.00 அமெரிக்க டொலர்கள் (இரு நூறாயிரம் அமெரிக்க டொலர்கள்) அல்லது 66,000,000.00 இலங்கை ரூபா (அறுபத்து ஆறு மில்லியன் இலங்கை ரூபா) தொகையில் (கோரும்போது பெறத்தக்க) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

2023.12.18 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இலங்கை, கட்டுநாயக்க. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், புதிய நிர்வாகக் கட்டிடம், 4ஆவது மாடி, மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு கோரப்படுகின்றனர். வேலையிடத்தை மேற்பார்வையிட்ட பின்னர் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இடம்பெறும். இந்த சந்திப்பு ZOOM மூலமும் இணைக்கப்படுவதோடு இணைப்புக்கான விபரங்கள் விலைமனு ஆவணத்தை வாங்கும் விலைமனுதாரர்களுக்கு வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை pd@airport.lk என்ற மின்னஞ்சல் மற்றும் 011-2263500, 011-2263502 என்ற தொலைபேசி இலக்கங்களில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், சிவில் பொறியியல் தலைவரிடம் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) இருந்து பெற முடியும்.

மேல் குறிப்பிடப்பட்ட அனைத்து நேரங்களும் உள்ளூர் நேரத்தை குறிக்கும் (இலங்கை நேரம்: **GMT + 5.30hrs**)

**தலைவர்,**
**நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு (SCAPC),**
**விமான சேவைகள் பிரிவு, துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**கட்டம் 30, மேற்கு கோபுரம்,**
**உலக வர்த்தக மையம்,**
**கொழும்பு 01,**
**இலங்கை**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு

## வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

**BID No.: 114/T/2023**
**CONSTRUCTION OF NEW BUILDING FOR CAPACITY ENHANCEMENT TO DEPARTING PASSENGER, CHECK-IN AND SATELLITE BOARDING GATES**
**PACKAGE 02**
**REARRANGEMENT, REFURBISHMENT, EXTENSION OF BAGGAGE MAKE-UP CAROUSAL AND ASSOCIATED CIVIL WORKS FOR BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKA, SRI LANKA**

Package 2 (Re-arrangement , Refurbishment, extension of baggage make-up carousal and associated civil) works under the project of construction of new building for capacity enhancement to departing passenger, check-in and satellite boarding gates for Bandaranaike International Airport – Katunayaka ஆகியவற்றிற்கான விலைமனுக்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் சார்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் குழுவினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

இருநூற்றைம்பது அ.ஐ.டொ (250 அ.ஐ.டொ) அல்லது எண்பத்தையாயிரம் இலங்கை ரூபாவை (85,000 இ.ரூ.) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலதிகமாக www.airport.lk என்ற இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்டு அ.ஐ.டொ. 250 ஐ ஒன்லைனில் பணக்கொடுப்பனவு செய்யப்படலாம், மேலேயுள்ள முகவரியில் மற்றும் இணையதளத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் உரித்தான சாராரினால் கொள்வனவு செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களிலேயே முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.12.04 ஆம் திகதியிலிருந்து 2024.01.17 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை, கொழும்பு-01, மேற்கு கோபுரம், 30 ஆம் மாடி, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகைக் குழுவின் தலைவரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் மேலதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் அவர்கள் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2024.01.18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

இலங்கையில் செயற்படுவதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் ‘‘உறுதிப்படுத்தப்பட்ட’’ பிணை அல்லது பாதுகாப்பையுடைய இன்னொரு நாட்டில் அமைந்துள்ள வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதுமானதும் முப்பத்தாறாயிரம் அஜடொ (36000) அல்லது 1 கோடியே 10 இலட்சம் (11,000,000 இ.ரூபா) பெறுமதியானதும் கோரும்போது பெற்றுக் கொள்ளும் விலைமனுவொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர் அல்லது அவர்களின் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் 2023.12.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு இலங்கை, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் புதிய நிர்வாக கட்டிடத்தின் 4 ஆம் மாடியிலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு அழைக்கப்படுகின்றனர். விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் தளவிஜயமும் நடைபெறும். கூட்டமானது ZOOM ஊடாக இணைக்கப்படுவதுடன் விலைமனு ஆவணத்தை கொள்வனவு செய்த விலைமனுதாரர்களுக்கு இணைப்பு விபரங்கள் வழங்கப்படும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் 011-2263500/2263502 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.cepd@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ள அனைத்து நேரங்களும் உள்ளூர் நேரங்களாகும் (இலங்கை நேரம்:
கிறீன்விச் சராசரி நேரம் + 5.30 மணித்தியாலங்கள்)

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல்**
**பெறுகைக் குழு**
**விமானசேவை பிரிவு துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமானசேவைகள்**
**மட்டம் 30, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மத்திய நிலையம்**
**கொழும்பு 01, இலங்கை**

# ஐ.பி.எல் வீரர்கள் ஏலத்தில் வனிந்துவுடன் மத்தியூஸ், ஷானக்க, பானுக்கவும் பதிவு

டுபாயில் எதிர்வரும் டிசம்பர் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்திய பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) வீரர்கள் ஏலத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் 1,166 வீரர்களில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் சகல துறை வீரர் வனிந்து ஹசரங்க ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இதில் இந்திய நாணயப்படி 2 கோடி ரூபா அடிப்படை விலைக்கான 25 வீரர்களில் ஒருவராக மத்தியூஸ் இடம்பெற்றிருப்பதோடு, தனது முந்தைய அணியான றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட ஹசரங்க இந்திய நாணயப்படி 1.5 கோடி ரூபா அடிப்படை விலையில் ஏலத்தில் குதித்துள்ளார். இந்த அடிப்படை விலையில் ஹசரங்கவுடன் மேலும் மேலும் 19 வீரர்கள் ஏலத்தில் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஐ.பி.எல் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக ஆடிய நிலையில் அந்த அணியில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் பானுக்க ராஜபக்ஷ மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட தசுன் ஷானக்க ஆகியோரும் எதிர்வரும் வீரர்கள் ஏலத்தில் இடம்பெற்றுள்ளனர்.

நடந்து முடிந்த உலகக் கிண்ண தொடரில் சோபித்த மிச்சல் ஸ்டார்ச், பெட் கம்மின்ஸ், ட்ரவிஸ் ஹெட், டரில் மிச்சல் மற்றும் ரச்சின் ரவிந்திரா ஆகிய வீரர்களும் பத்து அணிகள் ஆடும் ஐ.பி.எல் தொடரில் இணையும் எதிர்பார்ப்புடன் வீரர்கள் ஏலத்தில் இடம்பெற்றுள்ளனர். இந்தத் தொடரில் இடம்பெறுவதில் சந்தேகம் இருந்து வந்த ஜோஷ் ஹேசல்வுட்டும் ஏலத்திற்கு தனது பெயரை இணைத்துள்ளார்.



வீரர்கள் ஏலத்தில் இடம்பெற்றிருக்கும் 1,168 பேரில் 830 வீரர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதோடு 336 வெளிநாட்டு வீரர்கள் உள்ளனர். இதில் சர்வதேச போட்டிகளில் ஆடிய 212 வீரர்கள், சர்வதேச அனுபவம் இல்லாத 909 வீரர்கள் மற்றும் இணை நாடுகளைச் சேர்ந்த 45 வீரர்கள் உள்ளடங்குகின்றனர்.

பதிவு செய்யப்பட்ட வீரர்களில் தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், அயர்லாந்து, இலங்கை, நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே, நமீபியா, நேபாளம், நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் அமெரிக்க வீரர்கள் அடங்குகின்றனர்.

ஐ.பி.எல் இல் ஆடிய இலங்கை வீரர்களான மதீஷ பத்திரண மற்றும் மஹீஷ் தீக்ஷன அகிய இரு வீரர்கள் மாத்திரம் அவர்கள் ஆடும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் தக்கவைக்கப்பட்டனர். கடந்த ஐ.பி.எல் தொடரில் சென்னை அணி சம்பியன் கிண்ணத்தை வெல்ல இந்த இரு வீரர்களும் பந்துவீச்சில் முக்கிய பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீரர்கள் பட்டியலில் சேர்க்கப்படாத மேலதி வீரர்கள் தொடரில் அணிகள் பரிந்துரைக்கும்படி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கோரிக்கை விடுத்துள்ளது. பரிந்துரைக்கப்படும் வீரர்கள் தகுதி மற்றும் ஆர்வம் இருந்தால் நேரடியாக வீரர்கள் ஏலத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் தொடருக்கான அணிகளில் இணைக்கப்பட வேண்டிய 77 இடங்கள் எஞ்சி இருப்பதோடு இதில் 30 இடங்கள் வெளிநாட்டு வீரர்களுக்கானதாகும்.

# 'தங்கச் சமர்' கால்பந்து: புனித தோமஸ் சம்பியன்

நுவன் கொடிகார



மாத்தறை புனித தோமஸ் கல்லூரி மற்றும் மாத்தறை ராகுல கல்லூரிகளுக்கு இடையிலான 19ஆவது முறையாக நடைபெற்ற 'தங்கச் சமர்' கால்பந்து போட்டியில் பெனால்டி ஷூட் அவுட் முறையில் 42 என்ற கோல் கணக்கில் மாத்தறை புனித தோமஸ் கல்லூரி வெற்றியீட்டியது.

மாத்தறை உயன்வத்த கால்பந்து மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (01) நடைபெற்ற போட்டியின் முழு நேரம் முடியும்போது இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை. இதனை அடுத்து வெற்றி அணியை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை பயன்படுத்தப்பட்டது.

அதன்படி 42 என்ற கோல் கணக்கில் போட்டியில் வெற்றி பெறுவதற்கு மாத்தறை புனித தோமஸ் கல்லூரியால் முடிந்தது. 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த தங்கச் சமரில் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் இருந்த கொவிட் 19 பெருந்தொற்று நிலை காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இம்முறை கால்பந்து தொடரில் போட்டியை நடத்தும் பாடசாலையாக புனித ராகுல கல்லூரி அணி செயற்பட்டதோடு ராகுல கல்லூரி அதிபர் சமித குருகுலசூரிய, புனித தோமஸ் கல்லூரி அதிபர் பீ.ஏ. வீரக்கொடி ஆகியோரின் வழிகாட்டலில் புனித தோமஸ் அணியின் பயிற்சியாளராக கயன்திக்க ரணசிங்க, வெளிநாட்டு பயிற்சியாளரான பிரின்ஸ் போது, ராகுல கல்லூரி அணியின் பயிற்சியாளராக ஏ.பி. வீரப்புலி ஆகியோர் செயற்பட்டனர்.

# மகளிர் பிரீமியர் லீக் ஏலத்தில் சமரி பெயர்

மும்பையில் எதிர்வரும் டிசம்பர் 9ஆம் திகதி இடம்பெறவுள்ள மகளிர் பிரீமியர் லீக் தொடருக்கான வீராங்கனைகளுக்கான ஏலத்தில் இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தபத்து இடம்பெற்றுள்ளார். ஐந்து அணிகள் பங்கேற்கும் டபிள்யு.பீ.எல் தொடரில் ஒன்பது வெளிநாட்டு வீராங்கனைகள் உட்பட மொத்த 30 இடங்களை நிரப்புவதற்காகவே இந்த ஏலம் இடம்பெறவுள்ளது.



இதில் அத்தபத்து இந்திய நாணயப்படி 30 இலட்சம் அடிப்படை விலையுடன் ஏலத்தில் இடம்பெற்றுள்ளார். அத்தபத்து அண்மையில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவின் மகளிர் பிக் பாஷ் தொடரில் இரண்டாவது அதிக ஓட்டங்களை பெற்று தொடர் நாயகி விருதை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த முறை வீராங்கனை ஏலத்தில் அவர் விலைம போகவில்லை.

## சர்வதேச செய்திகள்

# தெற்கு காசாவை மையப்படுத்தி இஸ்ரேலின் தாக்குதல் உக்கிரம்

24 மணி நேரத்தில் 700 பேர் உயிரிழப்பு



காசா பகுதியில் இஸ்ரேல் வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக சமரமாரி தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் அதிகரித்து வருவதோடு அங்குள்ள மக்கள் அடைக்கலம் பெற முடியுமான பகுதி தெற்கு காசாவின் குறுகிய நிலத்திற்கு சுருங்கியுள்ளது.

தெற்கு காசாவின் கான் யூனிஸ் மற்றும் ராபா நகரங்களில் குடியிருப்புப் பகுதிகள் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக குண்டுகளை வீசியது. காயமடைந்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் அதனை கையாள்வதில் மருத்துவமனைகள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

பணயக்கைதிகள் மற்றும் பலஸ்தீன கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கையுடன் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே ஏழு நாட்கள் நீடித்த போர் நிறுத்தத்திற்கு பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை (01) மீண்டும் போர் வெடித்தது.

இந்நிலையில் முன்னரை விடவும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதோடு போர் வலயமாக இருந்து வந்த வடக்கு காசாவை தாண்டி தெற்கை இலக்கு வைத்து தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதில் கடந்த 24 மணி நேரத்திற்குள் காசாவில் 700க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா அரச மருத்துவ அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் நேற்று (03) தெரிவித்துள்ளார்.

இதனால் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பமான போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 16 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

இந்நிலையில் தெற்கு காசா மீது இஸ்ரேல் தரைவழி தாக்குதல்களை ஆரம்பிக்க வாய்ப்பு இருப்பதாக காசா குடியிருப்பாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். மத்திய காசாவில் டைர் அல் பலாஹ் மற்றும் கான் யூனிஸ் இடையிலான வீதியை இஸ்ரேலிய டாங்கிகள் துண்டித்திருக்கும் நிலையில் காசா பகுதி மூன்றாக பிரிக்கப்பட்டிருப்பதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

கான் யூனிஸில் உள்ள கணிசமான பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டுள்ளது. இதில் மேற்கு காசாவில் மக்கள் அடைக்கலம் பெற வேண்டிய பகுதிகள் மற்றும் எகிப்துடனான எல்லையை ஒட்டிய சபாவை நோக்கி மக்களை வெளியேறவே இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

எனினும் தாம் அந்தப் பகுதியை நோக்கி செல்லும்போது தாக்குதலுக்கு இலக்காவதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். வடக்கு காசா மீது இஸ்ரேல் தரைவழி தாக்குதலை நடத்தி அங்குள்ள மக்கள் தெற்கை நோக்கி வெளியேறி இருக்கும் நிலையில் அங்கு தொடர்ந்து அடைக்கலம் பெறக்கூடிய இடங்கள் குறைந்துள்ளன.

இணையதள வசதிகளை பெறுவது மற்றும் தொடர்ச்சியான மின்சார விநியோகங்கள் இல்லாத நிலையில் இஸ்ரேலிய வெளியேற்ற உத்தரவுகளை தெரிவதற்கு கடினமாக இருப்பதாக ஐ.நா அதிகாரிகள் மற்றும் குடிமக்கள் தெரிவித்துள்ளனர்.



வடக்கு காசாவில் நேற்று முன்தினம் (02) இடம்பெற்ற இரு சம்பவங்களில் குறைந்தது 160 பேர் கொல்லப்பட்டதாக ஐ.நா மனிதாபிமான நிறுவனம் தெரிவித்துள்ளது. இதில் ஜபலியா அகதி முகாமில் உள்ள ஆறு மாடி கட்டடத்தை இஸ்ரேல் குண்டுவீசி தகர்த்திருப்பதோடு காசா நகரின் குடியிருப்புப் பகுதி ஒன்றின் ஒட்டுமொத்த வீடுகளையும் தாக்கியுள்ளது.

'நாங்கள் பார்ப்பவை பற்றி எங்கள் கவலையை வெளிப்படுத்தும் அளவுக்கு வலுவான வார்த்தைகளை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை' என்று உலக சுகாதார அமைப்பின் தலைவர் அன்ட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் எக்ஸ் சமூகதளத்தில் நேற்று குறிப்பிட்டிருந்தார். 'இப்போதே போர் நிறுத்தம் தேவை' என்று அவர் வலியுறுத்தினார்.

ஹமாஸை அழித்தொழிப்பதாக இஸ்ரேல் சூளுரைக்கும் அதே நேரம் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு உடன்படாதபட்சத்தில் எஞ்சியுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

'சியோனிசக் கைதிகளின் விடுதலைக்குக் கொடுக்க வேண்டிய விலை போர்நிறுத்தத்திற்குப் பிறகு எங்கள் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதாக இருக்கும் என்று முதல் நாளிலிருந்தே நாங்கள் கூறுகிறோம்' என்று ஹமாஸ் அரசியல் உயர் பீடத்தின் பிரதித் தலைவர் அலாஹ் அல் அரூர் தெரிவித்துள்ளார். ஹமாஸ் மற்றும் இஸ்லாமி ஜிஹாத் அமைப்புகள் இஸ்ரேலின் பல நகரங்கள் மீது ரொக்கெட் குண்டுகளை வீசி வருகின்றன. இதில் டெல் அவிவை நோக்கியும் அந்த குண்டுகள் பாய்ந்து வருகின்றன. போர் நடவடிக்கையில் மேலும் இரு படையினர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

போர் நிறுத்தம் முடிந்த பின்னரான இஸ்ரேல் படையின் முதல் இழப்புகளாக இவை உள்ளன.

இஸ்ரேலுக்கு வருடாந்தம் பல பில்லியன் டொலர் இராணுவ உதவிகளை வழங்கி வரும் அதன் கூட்டாளியான அமெரிக்கா காசாவில் உள்ள பொதுமக்களை பாதுகாப்பது தொடர்பில் இஸ்ரேலுக்கு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. 'அதிகப்படியான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்' என்று துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஐ.நா காநிலை மாநாட்டில் பங்கேற்க டுபாய் சென்றிருக்கும் நிலையில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஐ.நா மனிதாபிமான விவகாரங்களின் இணைப்பு அலுவலகத்தின் புதிய மதிப்பீட்டின்படி, காசாவில் சுமார் 1.8 மில்லியன் மக்களான அதன் மக்கள் தொகையில் 75 வீதத்தினர் இடம்பெயர்ந்து திறந்த வெளி மற்றும் பாதுகாப்பற்ற தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர். தெற்கு காசா நகரான கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனையில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களால் நிரம்பி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாடசாலை ஒன்றுக்குள் இருக்கும் கூடாரம் ஒன்றில் இருந்து பெண் மற்றும் சிறுவர்களை வெளியேற்ற உதவியபோது தனது 19 வயது மகன் முஹமது கொல்லப்பட்டதாக ஜுமானா முராத் என்பவர் தெரிவித்துள்ளார். 'கூர்மையான பொருள் ஒன்று அவனது தலையை தாக்கியது' என்று அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் குழு ஒன்று நாசர் மருத்துவமனைக்கு சென்றதாகவும் அங்கு அந்த மருத்துவமனையின் கொள்ளளவை விட மூன்று மடங்காக 1000 நோயாளிகள் இருந்ததாகவும் டெட்ரோஸ் தெரிவித்துள்ளார்.

சிலர் வலியில் கூச்சலிட்டபடி இருக்க அவர்களுக்கு தரையில் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காசா மக்கள் உணவு, நீர் மற்றும் மற்ற அடிப்படை வசதிகளுக்கு தட்டுப்பாட்டை எதிர்கொள்வதோடு அங்குள்ள பெரும்பாலான வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1200 பேர் கொல்லப்பட்டு சுமார் 240 பேர் கடத்தப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்தே போர் வெடித்தது. இந்நிலையில் கட்டாரின் மத்தியஸ்தத்தில் போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் நீடித்து வந்தன.

எனினும் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முட்டுக்கட்டையை தொடர்ந்து இஸ்ரேலி பேச்சுவார்த்தையாளர்கள் கட்டாரில் இருந்து வெளியேறியதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் கடந்த சனிக்கிழமை தெரிவித்தது. காசாவில் தொடர்ந்து 137 பேர் பணயக்கைதிகளாக இருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

ஹமாஸ் மீது அதிக அழுத்தம் கொடுத்து பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு மேலும் இராணுவ நடவடிக்கை தேவையாக இருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலன்ட் தெரிவித்துள்ளார்.

# பிலிப்பைன்ஸ் குண்டு வெடிப்பில் நால்வர் பலி

தென் பிலிப்பைன்ஸில் உள்ள மிண்டனாவ் மாநிலப் பல்கலைக்கழகத்தில் கத்தோலிக்க வழிபாடு நடந்துகொண்டிருந்தபோது ஏற்பட்ட குண்டு வெடிப்பில் நால்வர் கொல்லப்பட்டனர்.

நேற்று (03) நடந்த இச்சம்பவத்தில் மேலும் 9 பேர் காயமடைந்ததாகக் பொலிஸார் தெரிவித்தனர். வெடிப்புக்கான காரணத்தை அதிகாரிகள் விசாரித்துவருகின்றனர். ஐ.எஸ். குழு ஆதரவான கிளர்ச்சியாளர்களின் செயலாக இது இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. 2017ஆம் ஆண்டு 5 மாதங்களாகப் போராளிகளால் முற்றுகையிடப்பட்ட மராவி நகரில் வெடிப்பு நடந்தது. கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இராணுவ நடவடிக்கையில் டாவ்லா இஸ்லாமியா பிலிப்பைன்ஸ் குழு உறுப்பினர்கள் உட்பட 11 கிளர்ச்சியாளர்களைக் கொன்றதாக பிலிப்பைன்ஸ் இராணுவம் கூறியது.



# பாரிஸ் கத்திக்குத்தில் ஜெர்மனி நாட்டவர் பலி

மத்திய பாரிஸின் ஈபிள் கோபுரத்துக்கு அருகில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் ஜெர்மனி சுற்றுலா பயணி ஒருவர் கொல்லப்பட்டு மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றிருக்கும் இந்தத் தாக்குதல் தொடர்பில் ஏற்கனவே பாதுகாப்பு கண்காணிப்பில் இருக்கும் 26 வயதான பிரான்ஸ் நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதில் சுற்றுலா பயணிகளான தம்பதியர் மீது தாக்குதல் இடம்பெற்றிருப்பதோடு டாக்சி ஓட்டுநர் ஒருவர் தலையிட்டு மனைவியின் உயிரை காப்பாற்றி இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து அந்த தாக்குதல்தாரி மேலும் இருவரை தாக்கி இருப்பதோடு அதில் ஒவரின் கண்ணை சுத்தியலால் தாக்கியுள்ளார்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 4ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இலங்கை அனுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை

## 2024 / 2025 ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

களனி, கண்டி வீதி, புளுகஹ சந்தி, இல. 977/18 என்ற இடத்தில் அமைந்துள்ள இலங்கை அணுசக்தி ஒழுங்குப்படுத்தல் பேரவைக்காக 2024/2025 ஆண்டிற்கான மூலதன மற்றும் பாவனையாளர் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனம் மற்றும் தனிநபர்களிடமிருந்து 2023.12.31 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஏனைய சகல விபரங்களையும் எமது இணையதளம் www.aerc.gov.lk இல் தரப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

இணைய தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன். இதற்கான மேலதிக விபரங்கள் தேவைப்படின் கீழ்க்காணும் இலக்கம் கொண்ட தொலைபேசி இலக்கத்தில் திருமதி. நதீகா பதுகேயை அழைத்து பெற்றுக் கொள்ள முடியும் என தயவுடன் அறிவிக்கிறேன்.

தொலைபேசி இலக்கம்: 0112987859 / 0112987860
இணையதளம்: www.aerc.gov.lk

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை அணுசக்தி ஒழுங்குப்படுத்தல் பேரவை**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# மாவட்ட பொது வைத்தியசாலை - நாவலப்பிட்டி

## சமைத்த உணவு வழங்குதல் – 2024

**2024ஆம் வருடத்தில் சமைத்த உணவு வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் (NCB) கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

02. விலைமனுதாரர்களுக்கு இயைபான மேலதிக தகவல்களை நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 0542222261, 0542222411, 0542223773)
03. மீளளிக்கப்படாத விலைக்கோரல் ஆவணக் கட்டணமாக சமைத்த உணவிற்காக 7500.00 ரூபாவை நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்குச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. விலைக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும் அறிவுரைகளின் பிரகாரம் விலைக்கோரல் பிணைமுறியொன்றை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பணிப்பாளர், மாவட்டப் பொது வைத்தியசாலையின் பெயரில் சான்றுபடுத்தப்பட்ட விலைக்கோரல் பிணைமுறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. 1,500,000.00 ரூபா பெறுமதியான தாம் வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 06 மாதங்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்)
06. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-12-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, நாவலப்பிட்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாவட்டப் பொது வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்களை உள்ளிடலாம்.
07. விலைமனுக்களை சரியாகப் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்தல் வேண்டும். சகல உறைகளினதும் இடதுபக்க மேல் மூலையில் மாவட்டப் பொது வைத்தியசாலை - நாவலப்பிட்டி 2024ஆம் வருடம் (சமைத்த உணவு) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
08. 2023-12-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுற்ற உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
09. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்களை ஒப்படைக்க வரும்போது சொத்துச் சான்றிதழின் பிரதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. சகல விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீடொன்றுக்கு உட்படுத்தப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நாவலப்பிட்டி.**

---

# பெறுகை அறிவித்தல்

**நிலையான விளம்பர பலகைக்கு சபை ஆதனங்களை குத்தகைக்கு விடுதல் 2024 – 01 – 01 முதல் 2026 – 12 – 31 வரை**

## மாத்தறை மாநகர சபை

01. இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாத்தறை மாநகர சபைக்குரித்தான ஆதனங்களில் நிறுவப்படும் நிலையான விளம்பரப் பலகைக்காக 2024-01-01ஆம் திகதி முதல் 2026-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்வி விண்ணப்பங்கள் வழங்கல் : 2023-12-04ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-12-18ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை
    கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் : 2023-12-18ஆம் திகதி மு.ப. 11.00 வரை
    கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுதல் : 2023-12-18ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு
03. இதற்கான மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகைகளைச் செலுத்தியதன் பின் 2023-12-04ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து 2023-12-18ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்வி விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைப் படிவம் என்பன வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நிலையான விளம்பரப் பலகைக்காக மாத்தளை மாநகர சபையின் ஆதனங்களை குத்தகைக்கு விடுதல் - 2024-2026'' எனக் குறிப்பிட்டு 2023-12-18ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் மாத்தறை மாநகர ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாத்தறை மாநகர சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். சகல கேள்விப் படிவங்களினதும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
04. சகல கேள்வி விண்ணப்பங்களும் 2023-12-18ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு மாத்தறை மாநகர சபையின் நிதித் திணைக்களத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

| குத்தகைக்கு விடப்படும் ஆதனம் | அதிகூடிய அளவு நீளம் x அகலம் அடிகளில் | வருடாந்த நிலக் குத்தகை ஆகக் குறைந்த விலைத் தொகை + அரச வரிகள் | ஒப்பந்த வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத விலைக் கோரல் ஆவணக் கட்டணம் + அரச வரிகள் | மீளளிக்கப் படும் விலைக் கோரல் வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|
| உயன்வத்த வாகனத் தரிப்பிடத்திற்கு அருகில் உள்ள நிலையான விளம்பரப் பலகை | 20'x15' | 95,000.00 | ஒரு வருட தொகை | 1,000.00 | 15,000.00 |
| வல்கம புதிய சந்தைக்கு முன்னாலுள்ள பக்க எல்லை | 40'x30' | 80,000.00 | ஒரு வருட தொகை | 1,000.00 | 15,000.00 |
| கொட்டுவேகொட கடை 52 அருகில் | 20'x20' | 55,000.00 | ஒரு வருட தொகை | 1,000.00 | 15,000.00 |
| உயன்வத்த விளையாட்டரங்கிற்கு முன்னால் ஹக்மன வீதிக்கு முகப்பாக | 30'x20' | 75,000.00 | ஒரு வருட தொகை | 1,000.00 | 15,000.00 |

- மேற்படி விலைக்கோரல் தொகைக்குப் புறம்பாக வருடாந்தம் மாத்தறை மாநகர சபையினால் வெளியிடப்படும் காட்சிக் கட்டணத்தையும் செலுத்துதல் வேண்டும்.
- மேலதிக விபரங்கள் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் நிபந்தனை படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதுடன் இதன் பொருட்டான தகவல்களை மாநகர சபையின் 041-2222275 எனும் தொலைபேசியில் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

**காஞ்சனா கே. தல்பாவில,**
**மாநகர ஆணையாளர்,**
**மாத்தறை மாநகர சபை.**

**2023-12-04ஆம் திகதி**
**மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில்**

தினகரன் Classifieds, the Housewives' companion

www.adz.lk
it's what you want

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.ம.)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான தேர்மோ பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் 10 மி.மீ. கம்பிகளை கொள்வனவு செய்தல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான தேர்மோ பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் 10 மி.மீ. கம்பிகளை கொள்வனவு செய்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | வகை (SLS STANDARD) | அளவு | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக ரூ. | வங்கிப் பிணைமுறி மூலம் |
| PRDA/WP/PRO/2023/108 | திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத் திற்கு தேவையான தேர்மோ பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் 10 மி.மீ. கம்பி கொள்வனவு செய்தல் | 10 மி.மீ, முருக்கு உருக்குக் கம்பி | 1,000 | ரூ. 2,000.00 + VAT + SSCL | 6,000.00 | 12,000.00 |
| | | Thermo Plastic (kg) | 5,000 | | 8,000.00 | 16,000.00 |
| | | Glass Beads (kg) | 250 | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.12.04 முதல் 2023.12.15 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தை செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணைமுறியை காசாக அல்லது வங்கிப் பிணைமுறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2023.12.18 பி.ப. 2.30 இற்கு முடிவடைவதுடன், கேள்வி திறத்தல் அன்றே அந்த நேரத்திலேயே இவ் அலுவலகத்தில் நடைபெறும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**தொ.பே. இல. 011-4849845**

---

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

## கேள்வி அறிவித்தல்

## செல்லக் கதிர்காமம் புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள பதின்நான்கு (14) கடை அறைகளை 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக குத்தகைதாரர் ஒருவரைத் தெரிவு செய்தல்

1.0. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செல்லக் கதிர்காமம் புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 14 கடை அறைகளை முப்பது (30) வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கடை அறை இலக்கம், அடிப்படை விலை மற்றும் மாதாந்த வாடகை தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| கடை அறை வகை | கடை அறை | | கடை அறையின் அடிப்படை விலை (ரூபா) | மாதாந்த வாடகை (ரூபா) | பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | இலக்கம் | தரைப் பரப்பளவு | | | |
| ஒற்கைக் கதவு | 36 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 37 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 82 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 110 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 111 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 142 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 145 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 146 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 148 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 149 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| | 36 | 127 | 360,000.00 | 2,500.00 | 20,000.00 |
| இரட்டைக் கதவு | 56 | 127 | 600,000.00 | 4,000.00 | 30,000.00 |
| | 143 | 127 | 600,000.00 | 4,000.00 | 30,000.00 |
| | 144 | 127 | 600,000.00 | 4,000.00 | 30,000.00 |
| | 147 | 127 | 600,000.00 | 4,000.00 | 30,000.00 |

2.0. மேற்கூறப்பட்ட அடிப்படை விலைக்கு ஒப்பீட்டளவில் வழங்குவதற்கு இணங்கும் அதிகூடிய கேள்விப் பெறுமதியின் பிரகாரம் குத்தகைதாரர் தெரிவு செய்யப்படுவார். ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்காகவும் மேற்கூறப்பட்டுள்ள மாதாந்த வாடகைத் தொகைக்காக விலைகளைச் சமர்ப்பிக்கக் கூடாது. மேற்கூறப்பட்ட அடிப்படை விலை மற்றும் மாதாந்த வாடகை தொகை அரச வரிகளுக்கு உட்படும்.

3.0. மீளளிக்கப்படாத 2500.00 + அரச வரிகளைச் செலுத்தி பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'' அலுவலக வளவில் (1ஆம் கட்டம்), 7வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து அல்லது கதிர்காமம், கந்தசுரிகமயில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் மொனராகலை மாவட்ட செயற்றிட்ட அலுவலகத்தின் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து 2023-12-04ஆம் திகதி முதல் 2023-12-21ஆம் திகதி வரையில் பெற்றுக்கொள்ளப்படும் கேள்விப் படிவங்களில் மட்டுமே கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். யாராவது விண்ணப்பதாரரொருவருக்கு கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்க தேவையானால் இந்த காலப்பகுதியில் இலவசமாக பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'' அலுவலக வளவில் (1ஆம் கட்டம்) அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் அல்லது கதிர்காமம், கந்தசுரிகமயில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் மொனராகலை மாவட்ட செயற்றிட்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தினுள் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில்) பரீட்சித்துப் பார்க்கலாம்.

4.0 ஒரு விண்ணப்பதாரர் ஒரு கடை அறைக்காக ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாது.

5.0 யாராவது கேள்விதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிக்க உத்தேசிப்பதானால் ஒவ்வொரு கடை அறைக்கும் வெவ்வேறாக கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.0 கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் 270 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை ரொக்கப் பணமாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் முதலாவது கோரிக்கை விடுக்கப்பட்டவுடன் பணத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை முறியொன்றை கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.0 விலைகளை ஏற்றுக்கொள்ளல் 2023-12-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் தலைவர், வருமானக் கேள்விக் குழு (கீழ்நிலை), நகர அபிவிருத்தி அதிகார சபை, செத்சிறிபாய (கட்டம் 01), பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''செல்லக் கதிர்காமம் புதிய சந்தைக் கட்டிடத்தொகுதியின் ........... ஆம் இலக்க கடை அறைக்கான விலைகளைச் சமர்ப்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8.0 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த உடனடுத்து செத்சிறிபாய - 1ஆம் கட்டம், 6ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவில் கேள்விகள் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

9.0. இது தொடர்பிலான மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் பத்தரமுல்ல, 'செத்சிறிபாய' - 1ஆம் கட்டம், 6வது மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபையில் காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பிரிவின் 0112-889019 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறியலாம்.

**தலைவர்,**
**வருமானக் கேள்விச் சபை (கீழ் நிலை),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6வது மாடி, செத்சிறிபாய 1ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

# பெறுகை அறிவித்தல்

## வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

## வைத்தியசாலைக்கு சமைத்த உணவு வழங்குதல் - 2024

2024ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட அநுராதபுரம் போதனா வைத்தியசாலை மற்றும் பொலன்னறுவை பொது வைத்தியசாலை தவிர்த்து வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்கு சொந்தமான ஏனைய வைத்தியசாலைகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக 2023.12.15 மு.ப. 11.00 வரை வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரான என்னால் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| சேவை | வைத்திய சாலை வகுதி | கட்டணங்கள் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | | |
|---|---|---|---|---|
| | | ஒரு கேள்வி ஆவணத் திற்காக மீளளிக் கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (ரூ) | 2024.04.12 வரை செல்லு படியாகும் கேள்விப் பிணை முறி (ரூ) | சொத்துச் சான்றிழ் பொது (ரூ) |
| சமைத்த உணவு வழங்குதல் | A | 4,000/= | 124,000/= | 250,000/= |
| | B | 3,000/= | 85,000/= | 150,000/= |
| | C | 3,000/= | 75,000/= | 125,000/= |
| | D | 3,000/= | 60,000/= | 75,000/= |
| | E | 1,000/= | 25,000/= | 60,000/= |

02. பொது 170 மூலம் சொத்துச் சான்றிதழை சமர்ப்பிக்கவில்லையாயின் அதற்குச் சமமான பெறுமதியுடைய தொகையை மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
03. மேற்படி சேவைகளை வழங்குவதற்காக வழங்குநரின் வியாபார ஸ்தலம் அல்லது அதன் கிளை வடமத்திய மாகாணத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
04. தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணத்தை வடமத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் பெயரில் காசாக செலுத்தி குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் 2023.12.01 முதல் 2023.12.14 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் இடம்பெறும். மேலதிக விபரங்களை 025-2050718 தொலைபேசி இலக்கத்தில் அலுவலக நேரங்களில் பிரதம கணக்காளரிடம் விசாரித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
05. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை நிறுவனத்தின் பிரகாரம் ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகளுக்காக வேறுவேறாக தயாரித்து மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி வேறுவேறாக பொறியிட்டு 2023.12.15 மு.ப. 11.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், வடமத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு அனுப்பலாம். அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். கடித உறைகளில் இடது மூலையில் சேவை மற்றும் சேவையுடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் மற்றும் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
07. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.
08. கேள்விப் பிணைமுறி இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து வடமத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட 2023.12.15 முதல் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் (2023.12.15 முதல் 2024.04.12 வரை) கேள்விப் பிணைமுறியின் மூலம் அல்லது மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
09. இப்பெறுகை பற்றிய திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**மருத்துவர் டபிள்யூ.எம். பாலித்த பண்டார**
**மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்/ தலைவர்,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக்குழு,**
**தொ.பே. 025-2050718**

# கட்டான பிரதேச சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பெறுகை இலக்கம் KPS/PR/D3/23/2023

01. கட்டான பிரதேச சபையின் ஒதுக்கீட்டின் மூலம் செயற்படுத்துவதற்கு ஏற்பாடாகியுள்ள கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

